கழக வெளியீடு : ருoஉ

தெய்வப்புலவர்

# திருவள்ளுவர்

MADURAI UNIVERSITY LIBRARY,
5 JAN 1973
MADURAI-2.

ஆசிரியர் :
வித்துவான், சித்தாந்த கலாநிதி
திரு. ஔவை. சு. துரைசாமிப் பிள்ளை அவர்கள்,
தமிழ் ஆராய்ச்சி விரிவுரையாளர்,
அண்ணுமலைப் பல்கலைக் கழகம்.

Book supplied by the University
central Co-op. Stores, Madurai.

திருநெல்வேலித் தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட்,
திருநெல்வேலி. :: சென்னை, 1.

First Edition: Oct., 1949.
Second Edition: July, 1950.

[All Rights Reserved]

*Published by*:

THE SOUTH INDIA SAIVA SIDDHANTA WORKS PUBLISHING SOCIETY, TINNEVELLY, LTD.,
1/140, BROADWAY, MADRAS 1.

*Head Office*:

24, EAST CAR STREET, :: THIRUNELVELI

75892
031:1B5w
J0;2

அப்பர் அச்சகம், 2/140, பிராட்வே, சென்னை 1.

# முன்னுரை

"தெய்வப் புலவர் திருவள் ளுவருலகோர்
உய்யத் தருங்குறளை யோதுவோம்—மெய்வைத்து
வந்திக்க சென்னிவாய் வாழ்த்துக நன்னெஞ்சம்
சிந்திக்க கேட்க செவி"

இன்றைய தமிழ்நாட்டிற்குத் திருவள்ளுவர்க்கோ அவருடைய நூலாகிய திருக்குறளுக்கோ முன்னுரை ஒன்று வேண்டுவதில்லை. கல்வி கற்கும் இளஞ்சிறுர்கட்கும் கற்றவர் கல்லாதவராகிய முதியோர்க்கும் திருவள்ளுவரைப்பற்றிய செய்திகள் தெரிந்தனவாகும். ஆயினும், சுருக்கமாகச் சிலவற்றைக் கூறுவது வேண்டப்படுகிறது.

சமயவுலகில் இறைவனைத் தோத்திரப் பாட்டுக்களால், பண்பொருந்தப் பாடிய சைவ வைணவச் சான்றோர்கட்குத் தமிழகத்தில் சிறந்த இடம் தரப்பெற்றுளது. இறைவன் திருவருளைப் பெறுதற்கு உரிய நெறியும் பயனும் உணர்த்திய நேர்மையால் இச் சான்றோர்களை இறைவனுகவே எண்ணித் திருக்கோயிலெடுத்துச் சிறப்பும் பூசனையும் செய்வது வழக்கமாக இருந்துவருகிறது. திருஞானசம்பந்தர் திருநாவுக்கரசர் முதலிய சைவ நாயன்மார்களுக்கும், திருமங்கைமன்னன், சடகோபர் முதலிய ஆழ்வார்கட்கும் முறையே சிவன் கோயில்களிலும் திருமால் கோயில்களிலும் தனியே கோயிலெடுத்திருப்பது யாவரும் அறிந்ததொன்று. ஏனை எந்த நூலாசிரியர்க்கும் கோயிலெடுத்து வழிபாடு செய்யும் சிறப்பு உண்டானதில்லை. ஆனல், பல நூற்றுண்டுகட்கு முன்பே தமிழ் மக்களால் கோயில் எடுத்துச் சிறப்புச் செய்யப்பெறும் பெருமாண்பெய்தியவர் திருவள்ளுவர் ஒருவரேயாவர். அவர் ஒருவரே **தெய்வப்புலவர் திருவள்ளுவர்** எனப்பெறும்

சீர்த்திபெற்றவர். தொல்காப்பிய வுரைகாரர் காலத்தேயே திருவள்ளுவர் தெய்வப் புலவராய் விளங்கினர்.

இனி, "புலமிக்கவரைப் புலமை தெரிதல் புலமிக்க வர்க்கே புலனும்" என்பது பழமொழி. பண்டை நாளில் சிறந்த நூல் எழுதிய சான்றோர்களை ஏனைச்சான்றோர்கள் போற்றிப் பாராட்டியதுண்டு. அதற்கு அறிகுறியாக அச் சான்றோர் அளித்த மொழிகளையும் மொழிப் பொருள்களை யும் பொன்போல் போற்றுவர். மணிமேகலை யெழுதிய சீத்தலைச்சாத்தனாரும், சூளாமணியுரைத்த தோலாமொழி யாரும், கல்லாடம் உரைத்த கல்லாடரும் பாராட்டி யிருப்பது பலரும் அறிந்தது. சங்கத்தொகை நூல்களிற் காணப்படும் சான்றோர்களுள் சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவனைப் பாடிய ஆலத்தூர்கிழாரும் மதுரை யிளங்கண்ணிக்கோசிகனாரும் பிறரும் திருவள்ளுவருடைய மொழிப் பொருளையும் மொழியையும் மேற்கொண்டிருப் பது சங்கநூலறிஞர் சால அறிந்ததாகும்.

இவ்வாறு நூலெழுதும் சான்றோர் பின்வரும் சான்றோர்களாற் பாராட்டப்பெறுவது பொதுவாகவுள்ள சிறப்பு; திருவளளுவர் போலத் தனித்தொரு நூல் வடிவில் பாராட்டப்பெற்றவர், பிற்காலததே தோன்றிய சேக்கிழார் ஒருவர் தவிரப் பிறர் எவருமே இலர். திருவள்ளுவரைத் திருவள்ளுவமாலையும், சேக்கிழாரைச் சேக்கிழார் பிள்ளைத் தமிழும் பாராட்டிப் பரவுகின்றன. இவ்விரண்டனுள் சேக்கிழார் பிளளைத்தமிழில் அதனை ஆககிய மகா வித்து வான், திரு. மீனாட்சிசுந்தரம் பிள்ளை யவர்களுடைய கருத்து ஒன்றே இனிய அழகிய ஆராய்ச்சி நிறைந்த சொற்களால் விளக்கமுறுகின்றது. திருவள்ளுவ மாலையில் ஐமபதின் மருக்கு மேற்பட்ட சான்றோர்களின் அரிய கருத்துக்கள் தொகுத்துக் காட்டப்படுகின்றன.

திருவள்ளுவமாலேயும் திருவள்ளுவரைத் தெய்வத் திருவள்ளுவரென வழங்குகிறது. திருக்குறட்கு உரை கண்ட பண்டையோருள் நால்வர் உரை இப்போது கிடைத்துள்ளது. அவருள் எவரும் திருவள்ளுவமாலேக்கு உரை வழங்காமை கொண்டு, இத் திருவள்ளுவமாலே பரிமேலழகர் காலத்துக்குப்பின்னே தோன்றியிருக்கும் எனக் கருதுவோரும், இது சான்ருேர் பலரால் உரைக்கப்பட்டதென்போரும், ஒருவரே பலர் கருத்துக்களே அவரவர் பெயராற் கூறுகின்ருரென்போரும் பலதிறத்தர் அறிஞர். இதன் உண்மை எவ்வாருயினுமாகுக. இத் திருவள்ளுவமாலே திருவள்ளுவர் மாண்பையும் திருக்குறட் பயனேயும் எடுத்துக் காட்டிப் பாராட்டுவதில் ஈடும் எடுப்புமின்றி இலங்குகின்றது. "சிந்தைக்கினிய செவிக்கினிய வாய்க்கினிய" செந்தமிழ்ச் சொற்களால் அமைந்துள்ள இச் சொன்மாலே, "நான் முகத்தோன் தான் மறைந்து வள்ளுவனுய்த் தந்துரைத்த நூல்," என்றது கொண்டே பிற்காலத்தோர் திருவள்ளுவர் வரலாற்றுக்குப் பிரமன் முதலாகக் கதை புனேந்து கூறலுற்றனர். திருவள்ளுவர் தம்முடைய திருக்குறட் கருத்துக்களேத் "தாமே முழுதுணர்ந்து தண்டமிழின் வெண்குறளால்" உரைத்தார் என்று கூறுவது, திருக்குறள், திருவள்ளுவரது தூய இனிய செந்தமிழ் வாழ்வை நிலேக்களனுகக்கொண்டு காணப்பட்டதென்று வற்புறுத்துவதைக் காணலாம்.

இத்தகைய திருக்குறளின் நலத்தை புணர்த்தவந்த திருவள்ளுவமாலே, திருவள்ளுவர் சொல்லியவாறு செய்வதே நல்லொழுக்கம் என்றும், "இம்மை மறுமை இரண்டும் எழுமைக்கும், செம்மை நெறியின் தெளிவுபெற"லாமென்றும் செப்புவதாயிற்று.

திருக்குறள் முழுதும் கேட்டார், "மன்னு தமிழ்ப் புலவராய்க் கேட்க வீற்றிருக்கலாம்" என்றதுபற்றி நெடுங் காலம் வரையில் கல்வித்துறையில் தமிழ்ப் புலமை பெறு வோரே சிறப்புறப் பயிலும் நூலாகத் திருக்குறள் இருந்து வந்தது. பின்பு ஆங்கிலம் கற்போரும் பிறரும் திருக்குறள் பயிலாவழி "நாவிற்கு உய்வில்லை, சொற்சுவை ஓர்வில்லை, மற்றும் செயலில்லை" என்பது உணர்ந்தனர்.

அருள் திரு. G. U. போப்பையர் முதலிய மேனாட் டவர் திருக்குறளைத் தம் மொழியில் மொழிபெயர்த்துக் கொள்வாராயினர். இன்று தமிழ்நாட்டுக் கல்வி நிலையங் களில் இளஞ்சிறூர்களும் திருக்குறளைப் பயிலுகின்றனர்.

பொதுமக்கட்குத் தொண்டுபுரிவோரும் அரசியற் பணிபுரிவோரும் வணிகரும் பிறரும் மக்கட் கூட்டத்திற் கலந்து தத்தம் கருத்துக்களை எடுத்தோதி அளவளாவிக் கொள்ளவேண்டிய இன்றியமையாமை இன்றையவாழ்வில் பிறந்துவிட்டமையின், அவர்கள் அச்செயலை முட்டின்றி முடிப்பதற்குத் திருக்குறள் பெருந்துணையாக இருப்பது விளங்கிவிட்டமையின், அவர்களும் அதனைப் பயிலத் தொடங்கிவிட்டனர். ஒரு காலத்தில் தமிழ் பயில்வோர்க் கெனவே ஒதுக்கப்பட்டிருந்த திருக்குறள், இன்று பொது மக்கள் அனைவருக்கும் பொதுவாக வேண்டிய பொது நூலாயினமையின், திருக்குறளையும் திருவள்ளுவரையும் பொருளாகப் பல நூல்கள் அறிஞர்களால் வெளியிடப் பெற்று வருகின்றன. அவ்வெளியீடுகள் நாளும் பெருகுவ தொன்றே தமிழ்மக்கள் திருக்குறள்பால் பேராதரம் கொள்கின்றனரென்பதைக் காட்டிநிற்கிறது.

இந்நாளில் பள்ளியில் பயிலும் இளஞ்சிறூர்களும் தங்கள் இனிய மழலை மொழியால் விழுமிய நலங்கனியும் திருக்குறளைச் சிறப்புறச் சொல்லவும் பயிலவும் காண்கின்

றோம். உயிர் வாழ்க்கைக்கு உறுதிபயக்கும் உண்மைகளை ஒளியாமல் எடுத்துரைக்கும் இத்திருக்குறளை வழங்கிய திருவள்ளுவரது வரலாறு தூயவடிவில் வடித்துத்தர வேண்டியது நம்மனோர் கடனாகின்றது. பொய்யும் புனைந் துரையும் நிறைந்த கதைகளைச் சொல்லி இளஞ்சிறார்களின் உள்ளத்தை மாசுபடுத்துவதைவிட அவர் அளித்துள்ள திருக்குறளையே அடிப்படையாகக்கொண்டு அவர் வரலாற்றை வடித்தெடுத்துரைப்பது சிறப்புடைப் பணியாம் என்று கருதியே இந்நூல் எழுவதாயிற்று.

திருக்குறளையே துணையாகக்கொண்டு திருவள்ளுவரின் வரலாறு காணும் உண்மைநெறியை முதற்கண் பேராசிரியர் அருள் திரு. விபுலானந்த அடிகள் 'வேதாந்த கேசரி' யென்னும் ஆங்கில வெளியீடொன்றில் எழுதிக் காட்டினார்கள். அவர்கள் காட்டியருளிய அந்நெறியே பற்றி ஈண்டுத் திருவள்ளுவர் வரலாறு வடித்துத் தரப்படு கிறது. இதனோடு திருவள்ளுவரைப்பற்றி வழங்கும் கதைகளும், அவற்றுள் கொள்வன தவிர்வனவும் ஆராய்ச்சி செய்யப்பெற்றுள்ளன.

திருவள்ளுவர் வழங்கிய திருக்குறளைப் பல்வேறு வடிவில் பல்வேறு வகையில் வெளியிட்டு மக்களிடையே பரப்பும் பெரும் பணியைச் செய்துவரும் **தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார்** இதனை மிக்க ஆர்வத்தோடும் சிறப்போடும் வெளியிடுமுகத்தால் தமிழகத்து நன்மக்களின் பெருநன்றிக்கு உரியராகின்றனர்.

தமிழ்கூறும் நல்லுலகம் இதனை விரைந்தேற்றுப் பெரும்பயன் எய்துமாக.

அண்ணாமலைநகர்,
1—10—1949.

ஒளவை. சு. துரைசாமி

# பொருளடக்கம்

MADURAI-2


| எண் | | | பக்கம் |
|---|---|---|---|
| க. | தெய்வப் புலவர் | .... | 1 |
| உ. | திருவள்ளுவர் வாழ்வு | .... | 9 |
| | 1. தோற்றுவாய் | .... | ,, |
| | 2. வள்ளுவர் காலம் | .... | 11 |
| | 3. தமிழகம் - பிரிவுகள் | .... | 12 |
| | 4. வள்ளுவர்கள் | .... | ,, |
| | 5. திருவள்ளுவர் பிறந்த நாடு | .... | 14 |
| | 6. திருவள்ளுவர் இளமை வாழ்வு | .... | 15 |
| | 7. மனைவாழ்வு | .... | 17 |
| | 8. உலகியல் வாழ்வு | .... | 20 |
| | 9. துறவு வாழ்வு | .... | 39 |
| ங. | திருவள்ளுவரைப்பற்றிய கதைகள் | .... | 52 |
| | 1. புலவர் புராணம் கூறும் கதை | .... | ,, |
| | 2. திருவள்ளுவமாலை குறிக்கும் கதை | .... | 61 |
| | 3. ஞானமிர்த உரை கூறும் கதை | .... | ,, |
| | 4. கபிலரகவல் கூறும் கதை | .... | 62 |
| | 5. திருக்குறள் சிறப்புப்பாயிரங்கள் கூறும் கதை | | ,, |
| | 6. சைனரிடையில் வழங்கும் கதை | .... | 64 |
| | 7. கேள்வி வழியாற் கூறப்படும் செய்திகள் | .... | ,, |
| ச. | திருவள்ளுவரது வரலாற்று ஆராய்ச்சி | .... | 68 |
| | 1. பெற்றோர் | ... | ,, |
| | 2. உடன்பிறந்தார் | ... | 72 |
| | 3. ஊர் | ... | 73 |
| | 4. மனைவாழ்வு | ... | 74 |
| | 5. நூலியற்றல் | .... | 76 |
| | 6. திருககுறள் தனித்தமிழ் முதல்நூல் | ... | 78 |
| | 7. நூற்பெயர் | ... | 81 |
| | 8. அரங்கேற்றம் | ... | 84 |
| | 9. இறுதிநிலை | ... | 85 |
| | 10. பிறநூல்கள் | ... | 86 |

MADURAI UNIVERSITY LIBRARY
MADURAI-2.

தெய்வப் புலவர்

# திருவள்ளுவர்

## க. தெய்வப் புலவர்

தமிழகத்துத் தமிழ்மக்கள் தங்கள் மொழியாகிய தமிழைத் தமிழன்னை' என்றுப், 'தமிழ்த்தாய்' என்றும், 'தமிழ்த் தெய்வம்' என்றும் பாராட்டிப் போற்றுவதைத் தமக்குத் தகுதியாகக் கருதுவர். தமிழ், இயல், இசை, நாடகம் என முத்திறப்படும். இம்மூன்றும் பண்டை நாளில் முத்திறத்து மக்களால் வளர்க்கப்பட்டுவந்தன. இயற்றமிழைப் புலவர்களும், இசைத்தமிழைப் பாணர் களும், நாடகத்தமிழைக் கூத்தரும் பேணிவந்தனர். அந்நாளில் வேந்தரும் செல்வர்களும் தாம் ஈட்டிய செல்வத்தைப் புலவர் முதலிய மூவர்களுக்கும் தந்து முத்தமிழையும் வளர்த்தனர். இம்மூவராலும் புகழப் படாத ஒருவன் வாழ்வு வாழ்வாகவே கருதப்படாது. இவர்களாற் பாடப்படும் புகழ்படைத்தவர் உடலி லிருந்து உயிர் நீங்குங் காலத்து இந்திர விமானம் ஊர்ந்து தேவருலகு செல்வர் என்பது பண்டைநாளைய கருத்து. இந்தப் புகழ்பெற விரும்பி உயிர்கொடுத்தோரும், உடல்கொடுத்தோரும், பொருள்கொடுத்தோரும் எண் ணிறந்தோராவர். இவ்வாறு புகழ்விரும்பு முகத்தால் முத்தமிழையும் ஓம்பி வளர்ப்பது முன்னாளைத் தமிழ் மக்களது செல்வ வாழ்வாகக் கருதப்பட்டு வந்திருக் கிறது. இந்த வழக்கம் இடைக்காலத்தும் இருந்துவந் திருக்கிறது என்? சென்ற இரண்டு மூன்று நூற் றாண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்த தமிழ்ச் செல்வர்கூட,

பண்டைநாளைச் செல்வர்போலத் தமிழ்ப்பாவலர்களை ஆதரித்துப் புகழ்பெற்றனர். இதனால் தமிழ்மக்களுக்குத் தங்கள் தமிழின்பால் உள்ள பேரன்பால் தமிழ்ப் பாவலரையும் தமிழ்நாவலரையும் பேணும் மனப் பான்மை இடையறவு படாமல் இருந்துவந்திருக்கிறது என்பதைத் தெளியக்காணலாம்.

அண்மையில் வாழ்ந்த தேசியகவி சுப்பிரமணிய பாரதியாரும், "யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழி போல் இனிதாவ தெங்குங் காணோம்," என்று பாடியிருப்பதும், இன்று நம்மிடையே வாழும் பாரதி தாசனும், "தமிழுக்கு அமுதென்று பேர்—இன்பத் தமிழெங்கள் உயிருக்கு நேர்," என்று பாடியிருப்பதும் இன்றைய இளைஞரும் அறிந்த செய்தியாகும். இவ்வாறே, இன்று தமிழில் இனிய கவிபாடும் இளம்புலவர் அனைவரும் தமிழ்மொழியை நினைத்த அளவிலே பேரின்பம் உள்ளத்தில் உவட்டெடுத்துப் பெருகுமாறு தோன்ற விறுவிறுப்பான சொற்றொடர்களால், தமிழ் மொழியைப் புகழ்ந்து பாடுவதை நாம் காண்கின்றோம். இதனால் தமிழகத்துத் தமிழ்மக்கட்குத் தங்கள் தாய் மொழியாகிய தமிழின்பால் பேரன்பும் அதன் வாயிலாக அவருள்ளத்தே அதுபற்றிய பெருமிதமும் நிறைந்து தோன்றுவது கண்கூடாக இருக்கிறது.

ஒருநாட்டு மக்களுக்கு அவர் பிறந்து சிறக்கும் நாடு உடலாகவும், அந்நாட்டில் அவர்கள் வழங்கும் தாய் மொழி உயிர்ப்பாகவும் அமைவனவாகும். உடல் பொலிவும் வளமும் குன்றியிருப்பினும், அதன்கண் உலவும் உயிர் அவ்வுடலின்பால் பெருங் காதல்கொண்டு அதனை விட்டுப்பிரியும் விருப்பின்றி அதனோடு ஒன்றி யிருந்து அதனைப் பேணுதற்கே விருப்பங்கொள்ளும்.

அவ்வுடற்கு வருந் துன்பங்களைத் தனக்கு வந்ததாக அதனை ஏற்று வருந்துவதும் உயிர்க்கு இயல்பு. திருவள்ளுவரும், "துன்பம் உழத்தொறும் காதற்று உயிர்," என்று உயிரின் இந்த இயல்பைக் குறித்துரைத்துள்ளார். இவ்வாறே ஒரு நாடு எத்துணை நலமில்லாத நாடாயினும், தட்பவெப்ப நிலநீர்வளங்களால் மிக்க வளம்பொருந்தாதாயினும், அந்நாட்டு மக்கட்கு அதன் பால் உண்டாகியிருக்கும் காதல் பெரிதாகும். உலக வரலாற்றில் ஒருநாட்டு மக்கள் வேற்றுநாட்டு மக்களோடு தம் உடற்குருதி பேராறுபோலப் பெருகியோடப் போர்செய்து மடிந்ததற்குக் காரணம் தாம் வாழும் நாட்டின்பால் உண்டாகிய பேரன்பேயாகும். அமெரிக்கா, ஆஸ்திரேலியா, ஆப்பிரிக்கா முதலிய நாடுகளில் நாகரீகமின்றி விலங்குவாழ்வு வாழ்ந்த மக்கள், தங்கள் நாட்டிற்குள் மேலைநாட்டு வெள்ளையர்கள் புகுந்தபோது அவர்களை யெதிர்த்துப் போராடிய செய்திகளை நாம் படிக்கின்றோம். இச்செய்திகளால் விலங்குவாழ்வு வாழும் மக்களாயினும் அவரது நாட்டுப் பற்று அவரை யறியாமே அவரது இயற்கையில் நுழைந்து வேற்றவரோடு போராடி உயிர் தருமாறு செய்துளது என்பது தானே விளங்குகிறது. இளஞ் சிறுர்களுக்குத் தம் பெற்றோர்பால் உள்ள அன்புக்கு அடுத்தநிலையில், ஒரு மனிதனுடைய பிறவியிலும் ஒழுகலாற்றிலும் ஊறிநிற்கும் நாட்டன்பு இடம்பெற்றுள்ளதென எட்மண்டு பர்க் (Edmund Burk) என்பார் கூறியிருப்பது மேலே கூறிய கருத்துக்கு ஆதரவு தருகிறது.

இப்பெற்றித்தாகிய நாட்டன்பு தமிழ்மக்களிடையே அவர்களை யறியாமலே அவர்தம் நரப்புக் கால்தோறும் ஊறியிருக்கிறது. இது பண்டைச் சங்க

காலத்திலும், இடைக்காலத்திலும் அவர்களது உள்ளத்தில் நிலைபெற்றுநின்றதன் பயனாக, காடிடையிட்டும், மலையிடையிட்டும், கடலிடையிட்டும் வேறுநாடுகட்குச் சென்று பொருளீட்டிப் புகழ்மேம்படுமுகத்தால், தங்கள் நாட்டின் பெருமையினை வளம்படுத்தினர். நாட்டின்பால் செல்லும் அன்பு நாட்டவர்பாலும் சென்று அவர்க்கு வேண்டும் நலம் செய்தல்வேண்டுமென்ற மனப்பண்பினை வளர்க்கும். அதனால் தமிழர் அனைவரும் தம்மில் இயைந்து ஒருவரையொருவர் சார்ந்து தமிழகத்தைப் பேணிவந்தனர். அதனால் தமிழகம் "பொதுமை சுட்டிய மூவருலகம்," (புறம்) எனவும், "வண்புகழ் மூவர் தண்பொழில் வரைப்பு," (தொல்) எனவும் சான்றோரால் பாராட்டப்பெற்றுள்ளன. இவ்வகையால், தமிழகத்து ஒரு பகுதியினரை வேற்று நாட்டவர் இகழ்ந்துரைப்பின், எல்லாப் பகுதியினரும் உடங்கியைந்துநின்று இகழ்ந்தாரை யிகழ்ந்து, அவர் உள்ளத்தே இகழ்தற்கேதுவாய் முளைத்த காரணத்தை வேரோடு கிள்ளியெறிந்து வீறுபெற்று விளங்கிய செய்தியைச் சேரன்செங்குட்டுவனது வரலாறு தெரிவிக்கின்றது. இமயம் முதல் கங்கநாடு (மைசூர் நாடு) வரையில் தன் புகழைப் பரப்பிய அசோக மன்னன் அடல் மிக்க ஆட்சிபுரிந்த அந்நாளிலும் அவன் ஆட்சிக்கீழ்ச் செல்லாது தமித்துநின்று நட்புரிமைகொண்டு தனியாண்மையாட்சி நடாத்திய நற்றிறம் தமிழர்க்கேயுண்டு. கீழ்க்கடலிற் சோழரும், தென்கடலிற் பாண்டியரும் மேலைக்கடலிற் சேரரும் தனியாணை செலுத்தித் தமிழரசு நடாத்திய சிறப்பைச் சங்கநூல்கள் கூறுகின்றன.

இவ்வண்ணம் தமிழரசு நடந்த சங்ககாலத்தில் தமிழ்மொழி, மக்களுடைய உள்ளத்தை இயற்பிரி

வாலும், வாய்மையை இசைப்பிரிவாலும், மெய்யைக் கூத்துப்பிரிவாலும் வளம்படுத்தியதென்பது வரலாறு கூறும் வாய்மையுரை. இம்முப்பிரிவையும் புலவர்கள் தம் நல்லிசைப்புலமையால் நலம்பெறச்செய்து சொல்லேருழவர் எனும் தொல்புகழெய்தினர். அவர்களும் நாட்டின் நலத்தை, நாடாதல், காடாதல், மேடாதல், பள்ளமாதல் கண்டு தெளியாது எவ்வழி ஆடவர் நல்லவர் அவ்வழியே நாடு நாடாம் எனக் கண்டு தெளிந்து மக்கள் உள்ளம், உரை, செயல்களால் நல்லராம் நலத்தையே நாடித் தம் நல்லிசைப்புலமையை நடாத்தினர். நல்லராகிய தமிழ்வேந்தர் நல்லிசைப்புலவரது நாநலத்தைத் துணையாகக்கொண்டு நல்லரசுபுரிந்தனர். அவராற் பாடப்பெறும் அரும்புகழ்ப்பேறே தம் வாழ்வின் முழுப் பேறாகக் கருதினர். பாண்டியன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் என்பான், "ஓங்கிய சிறப்பின் உயர்ந்த கேள்வி, மாங்குடி மருதன் தலைவனாக, உலகமொடு நிலைஇப பலர்புகழ் சிறப்பின் புலவர்," பாடும் புகழையே பெரிதும் போற்றினனென அவனது வரலாறு கூறக் காண்கின்றோம்.

அறந் தவறியவிடத்து அறநிலை வற்புறுத்தியும், பொருள் குன்றியகாலைப் பொருள்செய்யும் நெறி வற்புறுத்தியும், இன்பநாடாது துன்பம் விளைவிக்கும் செயல் மேற் சென்று அன்புதேய வருமிடத்து இன்பநிலை வற்புறுத்தற்கும் அகமும் புறமுமாகிய பாட்டுக்களால் தமிழ் வாழ்வை இனிமைப்பண்பு குன்றாவாறு நிலை நிறுவிய செயற்பெருமை புலவர்களாகிய நல்லிசைச் சான்றோர்க்கே உரியதாயிற்று. வாழ்வாரை வாழ்விக்கும்வகையில் வண்டமிழ்ப்புலவரது வாய்வளம் பெருந்தொண்டு செய்தமையின், வேந்தரும், செல்வரும்,

பிறரும் அச்சான்றோர் தம் நாட்டகத்தே உளராவது தமக்குப் பெருமையாகக் கருதியொழுகினர். நாட்டில் விளையும் பொருள்வகைகளில் தலையாயது புலமையாகிய செம்பொருள் என்று தேறினமையின், வேந்தர், தம் திருவோலக்கத்தில் நல்லிசைப்புலவர்களைப் பேணிச் சிறப்பித்தனர். நாட்டின் நலங்கண்டு பாடப்போந்த நல்லோர், நல்லிசைச்சான்றோர் தோன்றிய தோற்றத்தை நாட்டிற்கு நல்ல அணியாகப் புகழ்ந்து பாடுவாராயினர்.

சிலப்பதிகாரத்தைப் பாடியருளிய இளங்கோ வடிகள், புகார் நகரத்தை வாழ்த்தலுற்றார். அந்நகரத் தோடு ஒத்த சிறப்புடையவென பொதியில்மலையும் இமயமலையும் அடிகள் நினைவுக்கு வந்தன. மூன்றையும் ஒருங்குசேர்த்து, "பொதியி லாயினும் இமய மாயினும், பதியெழு வறியாப் பழங்குடி கெழீஇய பொதுவறு சிறப்பின் புகாரே யாயினும் நடுக்கின்று நிலைஇய என்ப தல்லதை, ஒடுக்கங் கூறார்," என்று வாழ்த்தினார். அக் காலை, ஒடுக்கங் கூறாமைக்குக் காரணம் இது என்றற்கு, அங்கே உயர்ந்தோர் உளர் என்பாராய், "உயர்ந்தோர் உண்மையின்," என்றும், இவ்வாறு உயர்ந்தோர் உள்ள இடங்களை நிலைபெறுக என்று வாழ்த்துவதும், தீயோர் உறைவிடம் ஒழிக எனக்கடிதலும் முழுதுணர்ந்த சான் றோர்க்கு இயல்பு என்பாராய், "முடித்த கேள்வி முழு துணர்ந் தோரே," என்றும் கூறினார். இதனால் புகார் நகர்க்குப் புகழ் உயர்ந்தோர் உண்மையென்று கூறும் நெறியால், உயர்ந்தோர் உண்மைகண்டே ஓரிடம் சான்றோரால் புகழப்படும் என்ற உண்மை பண்டை நாளில் இருந்ததென்பது தெளிய விளங்குகிறது. இடைக்காலத்தில் வாழ்ந்த சேக்கிழார்பெருமான் திரு நாவுக்கரசர் வரலாறு கூறப்புகுந்தார். அவர் பிறந்தது

திருமுனைப்பாடி நாடாகும். அந்நாட்டைப் புகழக் கருதிய சேக்கிழார், அந்நாடு சான்றோர் பிறந்த சால்பு மிகவுடையதாதல் கண்டு, "அறந்தரு நாவுக்கரசும் ஆலாலசுந்தரரும், பிறந்தருளவுளதானல் நம்மளவோ பேருலகில், சிறந்த திருமுனைப்பாடித் திறம்பாடுஞ் சீர்ப் பாடு," என்று கூறித் திருமுனைப்பாடிநாட்டைச் சிறப் பித்தார். இந்நாளில் நம் தமிழ்நாட்டைப் பாராட்டிப் பரவிய தேசீயகவி சுப்பிரமணிய பாரதியார், "வள்ளு வன் தன்னை உலகினுக்கேதந்து வான்புகழ்கொண்ட தமிழ்நாடு - நெஞ்சை, அள்ளும்சிலப்பதிகார மென்றோர் மணி யாரம்படைத்த தமிழ்நாடு," என்று பாடினர். இதனலும், ஒரு நாட்டிற்குச் சிறந்த புகழ்க்காரணங்க ளுள் மிகச்சிறந்தது சான்றோர் அந்நாட்டில் உளராவது என்றும், இதுவே, தலையாய தொன்றெனக் கருதும் வழக்கம் தொன்றுதொட்டே நம் தமிழகத்தில் இருந்து வருகிறது என்றும் தெரியலாம்.

இன்று நம் தமிழகத்தில் நமக்கேயுரிய தமிழும் உலகிற்குரிய ஆங்கிலமொழியும் நிலவுகின்றன. இவ்விரு மொழிகளிலும் சிறந்த புலவர்பெருமக்கள் உள்ளனர். அவர் அனைவரும் அவ்வம்மொழிகளின் பெருமை கூறும் போது அம்மொழிகளில் புலமை சிறந்தோங்கிய சான் றோரை எடுத்தோதி அம்மொழியின் ஏற்றத்தைக் கூறுவர். ஆங்கிலத்திற்கு ஏற்றங் கூறுவோர், அதற்குப் பெருமையெல்லாம் செகப்பிரியர் (Shakespear) உளரா னது என்றும், ஆங்கிலநாட்டுக் கார்லைல் (Carlyle) என்பார், 'நாங்கள் இந்தியாவை இழத்தற்கு உடன் பட்டாலும் உடன்படுவோம், செகப்பிரியரை விடோம்' என்ற கருத்துப்பட மொழிந்தார் என்றும் கூறுவர். இவ்வாறே வடமொழியாளர், தங்கள் வடமொழி

வான்மீகியையும் காளிதாசனையும் பெற்ற பெருமை யுடையதென்பர். செந்தமிழர் தங்கட்குப் பெருமை தரும் சான்றோர் தொல்காப்பியரும் திருவள்ளுவரும் என்பர். அவருள்ளும் தேசியவாழ்வில் ஈடுபட்டோர், திருவள்ளுவரும், கம்பரும், இளங்கோவடிகளும் சிறந்த சான்றோரென்பர். இலக்கிய சமயவாழ்வுகளில் ஈடு பட்டோர், எங்கள் தமிழ்க்கு ஏற்றந்தருவன என ஆறு தமிழ்ப்பெருநூல்களை ஓதுவர். அவை, "வள்ளுவர், மெய்யன்பர்மொழி வாசகம். தொல்காப்பியமே, தெள்ளு பரி மேலழகன் செய்தஉரை - ஒள்ளியசீர்த், தொண்டர் புராணம், தொகுசித்தி (சிவஞானசித்தியார். சிவஞான போதம் முதலியன) ஓராறும், தண்டமிழின் மேலாந் தரம்" என்பர். இலக்கண நெறியிற் பயின்றோர், தொல் காப்பியம், திருவள்ளுவர், திருக்கோவையார் என்ற மூன்றுமே சிறந்தன என்பர்.

இவ்வாறு பலரும் பல கூறுவராயினும், எல்லா ருடைய கூற்றினும் ஒரு நூல் தவருது குறிக்கப் பெறுவது காணலாம். அஃது யாது? அதுதான் திருவள்ளுவர் செய்த திருக்குறள். எத்திறத்தாராலும் பாராட்டப்படும் திருவள்ளுவரை மனத்தால் விரும்பாத ஒருவன் தமிழ்க்குடியில் இருப்பானுயின், "அவன் குலத்தின்கண் ஐயப்படும்." அவனைத் தமிழர் மக னென்னூர்; மக்கட்பதடியென்பர்; அறிவுடையோர் நடைப்பிணம் என்பர். இதுபற்றியே முன்னோர் திருவள்ளுவரைத் 'தெய்வப்புலவர் திருவள்ளுவர்' என்று பாராட்டினர்.

# உ. திருவள்ளுவர் வாழ்வு

*தோற்றுவாய்*

நம் செந்தமிழ்நாட்டுப் புலவர்பெருமக்களின் வரலாறுகளை அவ்வக்காலத்திலிருந்த அறிஞர்கள் எழுதி வைத்திலர். அப்பெருமக்கள் தாமும் தம் வரலாற்றைக் குறித்திலர். அவர் தம் புலமைப்பொருள்களாகிய பாட்டும் உரையும் பெயர்க்குறிப்புமாகிய சில குறிப்புக்களே நமக்குக் கிடைத்திருக்கின்றன. மேனாட்டு மக்களின் மொழியறிவும் நல்லொழுக்கங்களுட்சிலவும் விரவியதன் பயனாய், நம் நாட்டவர்க்குத் தம் பண்டைப் பெரியோர் வரலாறுகளை ஆராய்ந்து காணும் முயற்சி தோன்றுவதாயிற்று. அதன்பயனாகவே இன்று செந்தமிழ்நாட்டையாண்ட பல்லவர், சோழர், பாண்டியர், நாயக்கமன்னர், முகமதியர், மேனாட்டவர் முதலியோர் வரலாறுகள் ஓரளவில் வெளியாகியுள்ளன. மொழிவரலாறு, இலக்கிய வரலாறு, புலவர் வரலாறுகள் தோன்றிக்கொண்டிருக்கின்றன. இன்னும் சமயவரலாறு, சமுதாய வரலாறு, பொருள்நிலை வரலாறு, அரசியல் வரலாறு, வாணிக வரலாறு எனப் பல வரலாறுகள் ஆராய்ந்து காணவேண்டியநிலையில் உள்ளன.

இவற்றை ஆராய்ந்து உண்மைகாணும் நெறி மிக்க சிக்கலாகவுளது. எத்துணைக் காலங்கழியினும், மெய்ம்மை நிலைபெறுமென்றும், பொய்ம்மை நிலையின்றிக்கெடும் என்றும் கூறுவர். சில ஆராய்ச்சிகளால் பொய்ம்மை மெய்ம்மைகள் நன்கு விளங்கியுள்ளன. இந்திய வரலாற்றில், கல்கத்தா இருட்டறை வரலாறு ஒன்று நெடுநாள்வரையும் உண்மையெனக் கருதப்பட்டு வந்தது; ஆராய்ச்சியால் அது பொய்யெனத் தெளி

வாயிற்று. இவ்வாறே சிவாஜி, திப்புசுல்தான் முதலியோர் வரலாறுகளில் பல பொய்கள் நிலையின்றி ஒழிந்தன ; பல ஆயிர ஆண்டுகட்கு முன்பிருந்தவரெனக் கருதப்பட்டுவந்த திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் முதலாயினோர் காலம், இத்தகைய ஆராய்ச்சிகளால் இன்னதுதான் எனத் துணிபு செய்யப்பட்டுள்ளது.

இங்ஙனம் ஆராய்ந்து வருமிடத்துத் திருவள்ளுவர் போன்ற பெருமக்களின் வரலாற்றுண்மைகள் ஆன்றோரால் குறிக்கப்பட்டிலவாயினும், ஒருசில, தமது உண்மை காட்டி ஆராய்வார்க்கு ஊக்கம் தந்து வருகின்றன. பெரும்பாலன பொய்யும் வழுவும் புனைவுரையும் கலந்து ஒளிமழுங்கியிருக்கின்றன. ஆயினும், அவற்றைத் தூய்மை செய்துகொள்வது அறிஞர் அறிவுபெற்றதன் பயனாகும் அதுவே திருவள்ளுவர்க்கும் கருத்து என்பதை, "குணநாடிக் குற்றமும் நாடி அவற்றுள், மிகைநாடி மிக்க கொளல்,'' என அவரே உரைப்பதனால் நன்கறியலாம்.

நம் நாட்டில் அச்சுப்பொறி நிலவத்தொடங்கிய காலத்தில் திருக்குறளை அச்சிட்டு வெளியிட்ட சான்றோர் பலரும், திருக்குறட் பதிப்புக்களில், தொடக்கத்தே திருவள்ளுவர் வரலாற்றை எழுதியிருக்கின்றனர். அவ் வரலாறுகள் பலவற்றிற்கும் ஆதாரம் அவரவர் கேள்வி வாயிலாக அறிந்த செய்திகளேயாகும். இச்செய்திகளை ஒருங்குதிரட்டிச் சுமார் நாற்பத்தைந்து ஐம்பது ஆண்டுகட்குமுன்பு வாழ்ந்த முருகதாச சுவாமிகள் தாம் எழுதிய புலவர் புராணத்துள் செய்யுள் வடிவாகத் திருவள்ளுவர் வரலாற்றைத் தந்துள்ளார். ஆராய்ச்சி நெறியில் முயன்ற அறிஞர் சிலர் வேறு குறிப்புக்கள் சிலவற்றைக் கண்டு வெளியிட்டுள்ளார்கள். இவற்றின்

துணையால் திருவள்ளுவரது உண்மை வரலாறு ஓரளவே தெரிகிறது.

வள்ளுவர் காலம்

சங்க நூல்களிலும் சிலப்பதிகாரத்திலும் திருவள்ளுவருடைய திருக்குறள் கருத்துக்களும் திருக்குறட் சொற்றொடர்களும் காணப்படுகின்றன. அவைகள் ஆயிரத்தெண்ணூறு ஆண்டுகட்கு முற்பட்டன என்பது ஆராய்ச்சியாளர் அனைவருக்கும் ஒப்பமுடிந்த கருத்து. ஆகவே, திருவள்ளுவர் காலமும் ஆயிரத்தெண்ணூறு ஆண்டுகட்கு முற்பட்டதாம். சங்க நூல்களிற் காணப்படும் பாட்டுக்கள் பலவும் ஒருகாலத்தன அல்ல. நெடுங்காலம் இடையிட்ட பாட்டுக்களும் அவற்றுள் உண்டு. "தென்குமரியின் தெற்கிலுள்ள இந்துமாக்கடல் தோன்றுதற்குமுன் தோன்றிய செய்யுட்களும், அது தோன்றியபின் பாரதராமாயண நிகழ்ச்சிகட்கு முன்னும் பின்னும் தோன்றிய செய்யுட்களும், திருவேங்கடத்தில் திருமால் கோயிலும், பழனியில் முருகன் கோயிலும் தோன்றுவதற்குமுன் தோன்றிய செய்யுட்களும்........ தொகுக்கப்பட்டுள்ளன. சுருங்கச் சொல்லுமிடத்து, மிகப் பழைய நூல்கள் எல்லாவற்றிற்கும் பழையதெனக் கருதப்படும் தொல்காப்பியத்துக்குமுன்னே தோன்றிய செய்யுட்களும், பின்தோன்றிய செய்யுட்களும் தன்னகத்தேகொண்டு தமிழ் நாகரிகத்தின் தொன்மையுணர்த்தும் பெருநூலாகத் திகழ்வது புறநானூறென்பது மிகையாகாது," என்பர். எனவே, திருவள்ளுவர் இருந்து திருக்குறள் பாடிச் சிறப்புற்ற காலம் சங்கத் தொகைநூற் பாட்டுக்கள் தோன்றிய காலமாம்: சுருக்கமாகக் கூறின், சங்ககாலம் என்று கூறலாம்.

## தமிழகம் - பிரிவுகள்

சங்ககாலத்தில் தமிழகம் ஐந்து பெருநாடுகளாகப் பிரிந்திருந்தது. அவை, தென்பாண்டிநாடு, சோழநாடு, தொண்டைநாடு, கொங்குநாடு, சேரநாடு என்பனவாம். பாண்டிநாட்டின் வடவெல்லை புதுக்கோட்டைக் கண்மையிலோடும் வெள்ளாறு; சோழநாட்டின் வட வெல்லை தென்பெண்ணையாறு; தொண்டைநாட்டின் வடவெல்லை வேங்கடமலையும், அதன் வடகோடியில் கிழக்குநோக்கி யோடும் வடபெண்ணையாறுமாம். கருவூ ரருகில் காவிரியொடு கலக்கும் ஆன்பொருந்த ஆற்றுக் கும் (அமராவதியாறு) மேற்குமலைத்தொடருக்கும் இடைப்பகுதி கொங்குநாடாகும். இதன் தென்னெல்லை கோடைமலைத்தொடரும் (ஆனைமலைத்தொடர்) வட வெல்லை எருமை (மைசூர்) நாடுமாகும். இந்த எருமை நாடு பிற்காலத்தே கங்கநாடெனப்பட்டது. கொங்கு நாட்டின் வடமேற்குக் கொண்கான நாடாகும். மங்க ளூர்ப் பகுதியிலுள்ள ஏழில்மலை (சப்தசயிலம்) இந்தக் கொண்கான நாட்டைச் சேர்ந்தது. வெஞ்சமாக் கூட லருகேயோடும் குடவனாறு சங்ககாலத்தே காவிரியொடு கலந்ததெனப் பதிற்றுப்பத்துப் பழைய வுரையால் தெரிகிறது.

## வள்ளுவர்கள்

இச் சங்ககாலத் தமிழகத்தில் பாண்டிநாட்டு மேற்குப் பகுதியில் நிற்கும் மலைத்தொடர்களிடையே நாஞ்சில்மலை யென்பதொரு குன்று. அதனைச் சூழவுள்ள நாட்டை வள்ளுவர் என்ற வேந்தர் குடியினர் ஆட்சி புரிந்தனர். ஔவையார் காலத்தே அந்நாட்டை நாஞ்சில் வள்ளுவன் என்ற வேந்தன் ஆட்சிபுரிந்தான்

எனச் சங்கத் தொகைநூல் கூறுகிறது. அவன் ஔவை யார்க்குச் செய்த சிறப்பை நோக்குமிடத்து, அவன் அறங்கிடந்த நெஞ்சும், ஆண்மை சான்ற அமைதியும் உடையன் என்பது தெளிவாகிறது. புறநானூற்றில் ஒரு பாட்டுத் திருக்குறளை அறம் என்றே கூறுதலால், அறம் பயந்த நம் திருவள்ளுவர் அவனுக்கு முன்னோரா தல் வேண்டுமெனத் துணியலாம். அதற்கேற்ப அவன் வள்ளுவன் என்ற பெயரையே கொண்டிருக்கின்றான். பிற்காலத்தே வள்ளுவர் குடி நிலைதளர்ந்துபோயிற்று. அவ்வள்ளுவர்கள் மேலை மலையாளநாட்டுக் கோயில் களில் "கோயில் காரியம்" பார்க்கும் பெருமக்களுள் ஒருவராக இருந்தனர். இதனை, மலையாளநாட்டுப் பொன்னானிவட்டத்துச் சுகபுரம் என்னும் ஊரிலுள்ள கல்வெட்டொன்று* "சொகிரத்துப்பருடையாரும்...... இராயசேகராயின வள்ளுவரும் கூடிச் செய்த கச்ச மாவது," என்றுகூறுகிறது. இது வள்ளுவர்களை "இராய சேக" ரென்பதனால், வள்ளுவரில் ஒருசிலர் மேலை நாட்டில் அரசுரிமை நீங்கினும் தொன்மைச் சிறப்புத் தோன்றக் கோயில் காரியம் பார்த்து வந்தனரென அறி கின்றோம். இக்கல்வெட்டிற்போலவே, இப்பொன்னானி வட்டத்துப் புக்காட்டூரிலுள்ள கல்வெட்டொன்று† புக்காட்டூர்ச்சபையோரும், பிராமணரும், கோயிலதிகாரி களும், வள்ளுவர்களும் கோயிலில் விளக்கெரிக்க உடன் பட்ட செய்தியைக் கூறுகிறது. இக்கல்வெட்டுக்கள் காலத்தால் பன்னிரண்டாம் நூற்றாண்டுக்குப் பிற் பட்டனவாகும். ஆதலால், சங்ககாலத்துக்கும் இக் கல்வெட்டுக்களுக்கும் இடைப்பட்ட காலத்தில் இவ் வள்ளுவர்கள் இருந்த இருப்பைக் காண்டல்வேண்டும்.

* S. I. I. Vol. V. No. 775. † A. R. N. 349 of 1924.

சங்கநூல்களை அடுத்துத் தோன்றிய மணிமேகலையில் காவிரிப்பூம்பட்டினத்தில் நடந்த இந்திரவிழாவை நகரத்தார்க்கு அறிவிக்கும் பணியை வள்ளுவன் ஒருவன் செய்த செய்தி காணப்படுகிறது. இதனையடுத்துப் போந்த திவாகர நூல், "வள்ளுவன் சாக்கையெனும் பெயர் மன்னற், குள்படு கருமத் தலைவர்க் கொன்றும்," என்று கூறுகிறது. இவ்வாற்றால், வள்ளுவர்கள் பழங்காலத்தே அரசரைச் சேர்ந்தொழுகும் பெருங்குடி மக்களாக விளங்கினரென்பது தேற்றம்.

சங்ககாலத்தே குறுநிலமன்னராயிருந்த வள்ளுவர்கள், பின்னர் அரசவாழ்விழந்து தமிழ்வேந்தர்பால் அரசரைச் சேர்ந்தொழுகும் அரசியற் சுற்றத்தாருள் ஒருவராக வாழ்ந்தனரெனவும், பின்னர்ப் பெருங்கோயில்களில் "கோயில் காரியம்" பார்க்கும் பெருமக்களாக விளங்கினரெனவும் அறியவேண்டும்.

### திருவள்ளுவர் - பிறந்த நாடு

வள்ளுவர்கள் அரசவாழ்வு வாழ்ந்த நாளிலோ, அதற்குச் சிறிதுபின்னோ திருவள்ளுவருடைய முன்னோர் நாஞ்சில் மலையைச் சூழ்ந்த நாட்டினின்றும் நீங்கிப் பாண்டிநாட்டு வையையாற்றின் கரையிலுள்ள நாட்டை யடைந்து அங்கே தங்கினர் அந்நாட்டவர், ஊரார் உண்ணுநீர்கொள்ளும் நீர்நிலையை ஊருணியெனவும், அப்பகுதி மணல் பரந்து விளங்குவதாகலின் ஊற்றுக்கண்டு நீர்கொள்ளும் நீர்நிலையை ஊற்றெனவும், மணற்கேணியெனவும் வழங்குவர். திருவள்ளுவர் அந்நாட்டினரென்பது இனிது தோன்ற, அவர் "ஊருணி நீர்நிறைந் தற்று," எனவும், "தொட்டனைத் தூறு மணற்கேணி," எனவும், "இறைப்பவர்க்கு ஊற்று

நீர்போல," எனவும் வழங்கியிருப்பது தக்க சான்று பகருகின்றது. மேலும், ஊருணி, கேணி யென்ற சொல் வழக்குகள் கொங்குநாட்டிலும் தொண்டைநாட்டிலும் இல்லை: ஊருணியென்னும் வழக்குச் சோழநாட்டில் கிடையாது. ஆதலால், இவற்றை வழங்கிப் பயின்ற திருவள்ளுவர் பாண்டிநாட்டினரேயென்பது தெளிவாம். இதற்கு ஆதரவாக, திருவள்ளுவமாலையில் பழம் பாட்டொன்று, உத்தரமதுரையில் கண்ணன் சிறந்து விளங்கியதுபோல, தென்மதுரையில் திருவள்ளுவர் சிறந்து விளங்கினாரென்ற கருத்துப்பட,

" உப்பக்க நோக்கி யுபகேசி தோண்மணந்தான்
உத்தர மாமதுரைக் கச்சென்ப—இப்பக்கம்
*மாதானு பங்கி மருவுபுலச் செந்நாப்
போதார் புனற்கூடற் கச்சு,"

என்று கூறுகிறது.

## திருவள்ளுவர் - இளமை வாழ்வு

பாண்டிநாட்டு வையையாறு பாயும் மணல் பரந்த பகுதியில் வாழ்ந்த அரசியல் வழித்தோன்றல்களான வள்ளுவர் குடியில் தோன்றிய திருவள்ளுவர், "குலவிச்சை கல்லாமற் பாகம்படும்," என்றதற்கேற்ப, அரசியல் அறிவும் பொருளியல் அறிவும் இயல்பாகவே ஓரளவு வாய்க்கப்பெற்றவர். பின்பு, அவர் இயற்கையறிவோடு, கல்வி கேள்விகளால் சிறக்கும் செயற்கையறிவு மிகப் பெற்று நல்லிசைப்புலமை யெய்தினார். அவருடைய பெற்றோர், தம்மினும் தம்முடைய மகன் சீர்த்த அறிவுடையனாய் இருப்பது கண்டு, இவனறிவு நமக்கேயன்றி மாநிலத்து மன்னுயிர்க்கெல்லாம் இன்பந்

* 'மாதானுபங்கி மறுவில்புலச் செந்நா' என்றும் பாடம்.

தரும் எனத் தெளிந்து இன்புற்றனர். அதனால், திருவள்ளுவருடைய தந்தையார், கற்றோர் கூடிய பேரவைகட்கு அவரை யழைத்துச்சென்று காட்டி, அவருள்ளத்தே கல்வியிற் பெருக்கம் உண்டாமாறு செய்தார்.

கல்வியாற் பிறக்கும் அறிவு நலத்தால் மனநலமும், மனநலத்தால் வினைநலமும் ஒருவர்க்கு உண்டாகும். மனநலத்துக்குரிய அறிவுநல்கும் கல்விபெற்ற திருவள்ளுவர், வினைநலம் வாய்ப்ப உண்டாதல் வேண்டிப் படைப்பயிற்சியிலும் சிறந்து விளங்கினர் அறிவு நலத்தாலும் வினைநலத்தாலும் மேன்மையுற்று வருகையில் மன்னரைச் சேர்ந்தொழுகும் அரசியற்பணி திருவள்ளுவர்க் குண்டாயிற்று. அவ்வாற்றால் திருவள்ளுவர் அரசியற் கூறுகளையும், அவற்றுள் செய்வன தவிர்வனவற்றையும், அவற்றால் விளையும் ஆக்கக்கேடுகளையும் செவ்வே தெரிந்துகொண்டார். அச்செல்வாக்கால் அக்காலத்தே அரியன எனவும், உயரிய எனவும் கருதப் பட்ட நூல்கள் பலவற்றையும் கசடறக்கற்று ஒள்ளிய புலமைபெற்று விளங்கினர். இவருடைய அறநூலறிவும் பொருணூலறிவும் மேன்மையுற்றுத் திகழக்கண்ட சான்றோர், "இந்த அருமந்த மகனைப் பெறற்கு இவன் தந்தை என்னோற்றான் கொல்லோ?" என வியந்து பாராட்டினர். மெய்ந்நூற் புலமையும் வினைத்திண்மையும், போர்ப்பீடும் பெற்ற சான்றோர், திருவள்ளுவருடைய அன்பு, நாணம், ஒப்புரவு, கண்ணோட்டம், வாய்மை முதலிய நற்பண்புகளைப் பாராட்டி, "சான்றோன்" எனப் புகழ்ந்தனர். அது கேட்குந்தோறும், திருவள்ளுவரைப்பெற்ற தாய் கொண்ட பேருவகை மலையினும், கடலினும், நிலத்தினும் மிக்குப் பரந்த தெனக் கூறவும் வேண்டுமோ?

## மனை வாழ்வு

திருவள்ளுவர் நூலறிவு உலகியலறிவுகளில் சிறந்து சான்ருேர் பரவும் சால்பு எய்திய காலையில், அவர்க்குத் தன் மனத்துக்கேற்ற வாழ்க்கைத் துணையாக ஒரு நன்மகளைத் தேர்ந்து மணஞ்செய்துகொள்ள வேண்டுமென்னும் நாட்டமுண்டாயிற்று. அந்நாளில் மணப்பருவமெய்திய மக்கட்கு மணஞ்செய்யவேண்டிய கடமை பெற்ருேர்க்கு இக்காலத்திலிருப்பதுபோல இல்லை. நல்லதன் நலமும் தீயதன் தீமையும் பகுத்தறியும் அறிவு சிறப்போர் உரிய காலத்தில் தமக்கேற்ற வாழ்க்கைத் துணைகளைத் தேடிக்கொள்வது அவரவர் பிறப்புரிமையாக இருந்தது. மக்கட்குப் பெற்ருேர் செய்யவேண்டிய கடமைகளுள் ஈன்று புறந்தருதலும் சான்ருேராக்குதலும் என்ற இரண்டுமே சிறந்திருந்தன. தந்தை மகற்காற்றும் உதவி இதுவெனச் சிறந்தெடுத்தோதிய திருவள்ளுவர் தக்க பெண்ணொருத்தியைத் தேடித் தன் மகனுக்கு மணம் செய்துவைப்பது பெற்ருேர் கடன் என யாண்டும் அவர் கூறவில்லை. இதுவே இக்கருத்துக்கு வலிய சான்ருகிறது.

திருவள்ளுவர், தாம் பிறந்து சிறந்த பாண்டிநாட்டுச் சீரியோர் ஒருவர் மகளொருத்தியை ஒருகால் கண்டு அவள்பால் தன் காதற்கருத்தைச் செலுத்தினர். அம்மடந்தையும் திருவள்ளுவர்பால் ஒத்த காதலுடையவரானர். அக்காதல் முறுகிப் பெருகி ஒருவரையொருவர் இன்றியமையார் என்ற நிலையினைப் பயந்தது கல்வி கேள்வித் துறையிலும், கட்டாண்மைத் துறையிலும் கருத்துச் செலுத்திப் பயின்றிருந்த திருவள்ளுவர் கருத்துப் புதிதுதோன்றிய காதற் காமத்தால் அலக்கண்

உற்றது. "போரில் எனது ஆண்மையைப் பிறர் கூறக் கேட்டாலும் பகைவர் அஞ்சுவர் ; அத்தகைய என் பீடு இப்பெண்ணின் நெற்றியொளி கண்ட மாத்திரையே கரைந்து போயிற்றே," எனத் திருவள்ளுவர் கவன்ருர். பின்பு அவர் தன்னை மணம் செய்துகொள்ளற்கு அவள் விரும்புவளோ என்பது துணிய அவளுடைய குறிப்பை ஆராய்ந்தார். அவர் அவளை நோக்கும்போது அவள் தலைகுனிந்து கடைக்கண்ணுல் அவரை நோக்கி மெல்ல நகைத்துத் தன் உடன்பாட்டை அறிவித்தாள். இரு வரும் பின்னர்க் களவுத் துறையில் இறங்கி ஒருவரை யொருவர் தனித்துக் கண்டு அளவளாவினர். "முறி மேனி, முத்தம் முறுவல், வெறிநாற்றம், வேலுண்கண், வேய்த்தோள், அவட்கு," என அவளது நலத்தைத் திருவள்ளுவர் தம் நெஞ்சக்கிழியில் எழுதிக்கண்டு இன் புற்ருர். முடிவில், "வாழ்தல் உயிர்க்கன்னள் ஆயிழை" எனவும், "உடம்போடு உயிரிடை என்னமற் றன்ன, மடந்தையொடு எம்மிடை நட்பு" எனவும் தெளிந்தார். இவ்விருவரது களவொழுக்கம், ஊரில் அலரையுண் டாக்கிற்று. ஆகவே, திருவள்ளுவர், சான்ருேர் துணை யாக அப்பெண்ணின் பெற்ருேரது உடன்பாடுபெற்று நல்லோரையில் நல்லோர் வாழ்த்தத் திருமணம் செய்து கொண்டு இல்வாழ்க்கையில் ஈடுபட்டார்.

திருவள்ளுவருடைய இல்வாழ்க்கை பண்பும் பயனு மாகிய அன்பும் அறமும்கொண்டு நடந்தது. அவர் வாழ்க்கைத் துணைவியார், தற்காப்பு, தன்னைக் கொண் டானைப் பேணுதல், தகைசான்ற சொற்காத்தல் முதலிய நற்செய்கைகளால் மேன்மையுற்று விளங்கினுர். மனைத் தக்க மாண்பும், தம் வளத்துக்குத் தக்க தகுதியும் அவர் பால் இருந்தது கண்டு திருவள்ளுவர் பெருமகிழ்ச்சி

கொண்டு, "இல்லதென் இல்லவள் மாண்பானல்" என இறும்பூது கொண்டார். அவருடைய கற்பின் திண்மை யும் பொற்பும் காணவே, திருவள்ளுவர் பெருவியப் புற்று, "பெண்ணிற் பெருந்தக்க யாவுள, கற்பென்னும் திண்மை யுண்டாகப் பெறின்" எனப் பெருமிதங் கொண்டார். இந்த வாழ்வின் விளைபயனுகத் தொடக் கத்தே இவர்கட்கு நன்மக்கட்பேறு உண்டாயிற்று.

மனைவாழ்விலும் ஏனை உயிர்களோடு தொடர்பு கொண்டு வாழும் வாழ்விலும் அன்பு பெருகிற்று; விருந்தினரை ஓம்பினர்; இன்சொற்களே வழங்கினர். திருவள்ளுவர் பிறன்மனை நோக்காத பேராண்மை யாகிய ஆன்ற ஒழுக்கத்தால் சான்றோராய்த் திகழ்ந்தார். தன்பால் பிறர் தகாதன செய்தாராயினும், அவர்க்கு அறமல்லாதன செய்யாது தமது தகுதியால் அவரை வென்று விளங்கினர். அதனல், அழுக்காறு, வெஃகல், புறங்கூறல் முதலிய தீய பண்புகள் இலவாயின. இன்சொல் இனிதீன்றல் கண்டவராதலால், திரு வள்ளுவர், பொருளில்லாத பயனில் சொற்களை மறந்தும் சொல்வதிலர். தீய செயல்களைத் தீயினும் கொடியவை யாகக் கருதி அவற்றை மறந்தும் செய்ய நினையார். வறுமை வந்து வருத்துவதாயினும் தீச்செயலை நெஞ்சி லும் தீண்டார். கல்வியறிவு ஒழுக்கங்களால் சிறப்புற்றுத் திகழ்ந்தபோதும், ஒப்புரவைவிடச் சிறந்தது ஒன்று தேவருலகத்தும் பெறலரிது என்று தேறி ஊரவர்க்குத் தாம் செய்யத்தகுவன செய்து ஒப்புரவு குன்ருமல் வாழ்ந்தார். வறியார்க்கு ஒன்று ஈவதே ஈகை என்ற கருத்தால், இல்லார்க்கு வேண்டுவன ஈந்து பெரும்புகழ் பெற்ருர். மேலுலகம் இல்லெனினும் ஈதலே நன்று என்று கொண்டு, இரப்பார்க்கு இலன் என்னும் எவ்வம்

உரையாமை ஈந்து சிறந்தார். ஈயுமிடத்தும், பசிப்பிணி யால் வருந்தி வருவோர்க்கு வேண்டும் உணவு தந்து பசி தீர்ப்பதுதான் சிறந்ததாகக் கருதினார். அவர், தம் பால் இரப்பார்க்கு ஈதலும், இசையுண்டாக வாழ்தலுமே வாழ்வின் ஊதியமாகக்கொண்டு தம் வாழ்க்கையை நடத்தினார்; அதனால் பெரும்புகழ் உண்டாயிற்று. அவர் புகழை நாம் இன்றும் பாராட்டிப் பரவுகின்றோம்.

உலகியல் வாழ்வு :

திருவள்ளுவர் இல்வாழ்வில் இதுகாறும் மனைக்கண் இருந்து செய்துபோந்த நற்பண்பு நற்செய்கைகளைக் கண் டோம். இனி, அவர் அரசியல் பொருளியல் என்ற உல கியல் வாழ்விற் கலந்து வாழ்ந்த வாழ்க்கைக் கூறுகளைக் காணலாம். திருவள்ளுவர் அரச குடும்பத்திற் பிறந்தவ ராதலால், கல்வி, கேள்விகளாற் பிறக்கும் செயற்கை யறிவும் வழிவழியாக எய்தும் இயற்கையறிவும் கூடிய செவ்விய அறிவு, வாழ்வுக்கு இன்றியமையாதெனக் கருதித் தொடக்கத்தே சிறந்த கல்வியறிவு பெற்றாரென முன்பே கூறினோம். அவ்வறிவால் திருவள்ளுவர் தம் பால் குற்றம் உண்டாகாதபடி எப்போதும் தம்மைக் காத்தொழுகினார்; பிறர்பால் குற்றங்காண நேரும்போ தெல்லாம் தன் குற்றத்தை முதற்கண் கண்டு தெளிவார். அரசியல் வாழ்வு என்பது ஒரு தனி மனிதனுடைய எல்லையைக் கடந்தது. அறிஞர் பலருடைய துணை பெற்றே நடப்பதெனக்கருதி, அறன் அறிந்து மூத்த அறிவுடையாராகிய பெரியோர் துணையைச் சிறப்பாகத் தெரிந்து மேற்கொண்டார். அவ்வாறு துணையாகும் பெரியோரை நாடிக்கொள்ளுமிடத்துச் சிற்றினத்தாரும் எதிர்ப்பட்டனர். அவரால் அறிவு திரிந்து அல்லலுழக்க

நேரும் என்றறிந்து அச்சிற்றினத்தார் கூட்டுறவை ஒதுக்கி நீக்கினார். பெரியோர் துணைபெற்றுச் செய்வன செய்தொழுகும்போதும், மேற்கொண்ட ஒரு செய்கையைச் செய்யுமிடத்து, அதற்கு உண்டாகும் செலவும், அதனால் விளையும் பயனும், இடையேயுண்டாகும் ஊதியமும் என்ற இவற்றை ஆராய்ந்தே செய்வர். வினைவலி, தன்வலி, மாற்றான்வலி, துணைவலி முதலிய வலியறிந்தும், செய்தற்குரியவற்றைச் செய்தற்குரிய காலமறிந்தும் இடமறிந்தும் செய்யத்தவறார். இச்செயல்கட்குரிய அரசியல் வினையாளரைத் தேர்ந்துகொள்ளுமிடத்து, உலகியலிற் பற்றில்லாதவர் பழிபாவங்களுக்கு நாணார் என்று கண்டு, அவர்களை அரசியலில் அறவே விலக்கினார். தமக்கு அன்புடையாரென்றும் உறவினரென்றும் கருதிப் போதிய அறிவில்லாதவரை அரசியலில் வினையாளராக வைப்பது கூடாதென்பது திருவள்ளுவர் கொள்கை. ஒவ்வொருவனையும், செய்தற்குரிய வினைக்கேற்ற தகுதியுடையனென்பதைத் தெரிந்தே வினையாளனைக் குறிப்பர். வினையாளராகிய சுற்றத்தார்பால் இன்சொல் வழங்கலும் வெகுளிகொள்ளாமையும் பெருங்கொடை கொடுப்பதும் அரசியல் தலைவரின் தலைமைப்பண்பாதலைக் கண்டார். செல்வத்தாற் சிறக்கும்போது தம்மை மறந்து கெட்டாரை நினைந்து தற்காப்புச் செய்துகொள்வது தலைவர்களின் தகுதியாக இருப்பது கண்டார்.

அந்நாளில் சிறப்புடைய வேந்தர் நல்லாட்சி புரிந்து நலம் பெற்றதும், அஃதில்லாதார் கொடுங்கோன்மை புரிந்து கெட்டதும் திருவள்ளுவர் கண்டார். செங்கோன்மையை நாடாது படைவன்மை ஒன்றே கருதி அதனைப் பெருக்குவதையே குறிக்கோளாகக்

கொண்டிருந்த வேந்தர் தம் எண்ணமழிந்து கெட்டார்கள். அம் மன்னர்களை நோக்கிய திருவள்ளுவர், "வேலன்று வென்றி தருவது மன்னவன் கோல்; அதுவும் கோடாதாயின்" என்று வற்புறுத்தினர். குடிகளைக் காத்துப் புரந்தருளும் வேந்தன், அவர்களுட் சிலர் குற்றம் செய்தவழிக் கண்ணோடாது ஒறுப்பாராயின், மக்கட்கு அவன்பால் வெறுப்புண்டாகுமன்றோ! என்று சிலர் கூற, அவர்களை, "குடிபுறம் காத்தோம்பிக் குற்றம் கடிதல், வடுவன்று, வேந்தன் தொழில்," என்றும், அச்செயல் நெல் விளக்கும் உழவர் களை யெடுப்பதை யொக்கும் என்றும் கூறித் திருவள்ளுவர் தெருட்டினர். கட்சிப் பிணக்குகளிற் கருத்தைச் செலுத்திச் செங்கோன்மை நாடாத வேந்தர் நாட்டில், இன்பம் வேண்டிச் செல்வம் மிக ஈட்டிய செல்வர்கள் இல்லாத வறியவர்களைக் காட்டிலும் பெருந்துன்பம் உழந்தனர். அது கண்ட திருவள்ளுவர், கொடுங்கோன்மை நிலவும் நாட்டில், "இன்மையின் இன்னாது உடைமை," என்று எடுத்துரைத்தார். அரசியல் தலைமையில், அரசியலும் பொருளியலும் உலகியலும் பிறவும் கல்லாத மக்கள் கூடி, கல்லாரையே பெரிதும் அன்பாற் பிணிக்கும் வகையில் ஆட்சிமுறை நடத்துவரேல், அதனைக்காட்டிலும் நிலத்துக்குப் பெருஞ்சுமை வேறில்லை என்பதைத் திருவள்ளுவர் அறிவுறுத்தினர். அரசியலிற் சிலர் பொறுக்கத்தக்க குற்றம் செய்தாரையும் கண்ணோடாது ஒறுக்கத்தொடங்கினர். அவர் செயல் கண்டு மக்கள் வருந்துவது அறிந்தார் திருவள்ளுவர். "கண்ணிற் கணிகலம் கண்ணோட்டம்" என்றும், "கருமஞ் சிதையாமற் கண்ணோட" வேண்டும் என்றும், "ஒறுத்தாற்றும் பண்பினர் கண்ணும் கண்ணோடிப் பொறுத்தாற்

றும் பண்பே தலை" என்றும் உரைத்து நலம் செய்தார்.

அரசாளும் தலைவர் பலர், அரசியல் நெறிக்கு ஒற்றுளுதலை விரும்பாமை கண்டார் திருவள்ளுவர். வேந்தர்கட்குத் தெளிவைத் தருவன "ஒற்றும் உரைசான்ற நூலும்" என எடுத்தோதி, ஒற்றினை வெற்றி பெற ஆளும் வேந்தர்க்கே வெற்றி உரியதென விளக்கினர். ஒற்றினால் ஒற்றப்படற்கு உரியவர் யார் என்றெழுந்த ஐயத்தை, "வினைசெய்வார் தம் சுற்றம் வேண்டாதார் என்றாங்கு, அனைவரையும் ஆராய்வது ஒற்று" என நீக்கி நெறி காட்டினார். இவ்வாறே வேந்தர்க்கு ஊக்கத்தின் சிறப்பும், மடிமையின் தீங்கும் முயற்சியின் பெருமையும், இடுக்கண் வருங்கால் அதற்கு அஞ்சி உள்ளமழியாமையும் வேந்தர்கட்கு இன்றியமையாதனவாதலைத் திருவள்ளுவர் கண்டு தெளிவித்தார்.

அரசர் வழித்தோன்றலாய் அரசியற் சுற்றமாய் இருந்து நாட்டுக்குப் பெருந்தொண்டுபுரியும் அரும் புலமை நலம்வாய்ந்த திருவள்ளுவர், அமைச்சர்கட்குரிய அமைச்சுக் கடன்களை யாராய்ந்து அவர்க்குச் சிறப்பாக வேண்டிய சொல்வன்மை, வினைத்தூய்மை, வினைத் திட்பம், வினை செய்திறம் என்பனவற்றை நன்கு தேர்ந்து நயமுற நவின்றார்.

மேற்கூறிய தகுதியுடைய அமைச்சர்களே வேந்தர்கட்குத் தூது செல்லும் தகுதி பெற்றோரென்றும், அத்தகுதி அன்பு, உயர்குடிப்பிறப்பு, வேந்தவாம் பண்பு என்றும் குறித்துணர்ந்தார். அமைச்சுக்கடன் பூண்டோர் மன்னரைச் சேர்ந்தொழுகுமிடத்து, "அகலாது அணுகாது தீக்காய்வார் போல்க" என்றும், மன்னர் விரும்பு

வனவற்றை அவர் விரும்புதலாகாதென்றும், வேந்தரால் விரும்பப்பட்டவழி, "கொளப்பட்டேம் என்றெண்ணிக் கொள்ளாத" செயல்களைச் செய்தல் கூடாதென்றும் அமைச்சியல் வாழ்வு காட்டக் கண்டார். வேந்தரவையில் பணிசெய்வோர் குறிப்பறிய வல்லராதல் வேண்டும். அவர் முன் ஒருவர் முகநோக்கி நிற்பாராயின், அவர் வாய் திறந்து கூறுமலே அவர் அகத்தின்கண் அமைந் திருக்கும் கருத்தைக் குறிப்பால் அறியவல்ல அறிஞர் தெய்வமாகவே கருதப்பட்டனர். மேலும் வேத்தவை யில் இருக்கும் அறிஞர் இயல்பைத் திருவள்ளுவர் தெளியக்கண்டு, வேத்தவை மேவும் உரவோர், சொற் களின் தொகைவகைகளையும் நடைவகைகளையும் அறிந் தவராதல் வேண்டும் எனவும், அவர்கள் "அவையறிந்து ஆராய்ந்து சொல்லுக" எனவும், 'இடைதெரிந்து நன்குணர்ந்து சொல்லுக" எனவும் எடுத்துரைத்தார். முதுவர்கூடிய அவையில் முந்துற்று மொழிதல் நன்ரு காமையைத் திருவள்ளுவர் "நன்றென்றவற்றுள்ளும் நன்றே" என்று தெளிவுபடுத்தினர். இதனுல் நல்லோர் கூடிய நல்லவைகண்டு அஞ்சாது அடங்கியொழுகுவது நன்றென்று காட்டி, நல்லோர் அவையில் தாம் கூறுவன வற்றை அஞ்சாது கூறல் வேண்டும் என்ருர்.

அரசியல் அறிஞரும் பொருளியலறிஞரும் அறநூல் அறிஞரும் கூடிய பேரவைகள் பாண்டிநாட்டு மதுரை யிலும், சோழநாட்டு உறையூரிலும் சிறப்புற்று விளங்கின. ஆங்காங்கு வாழ்ந்த சிற்றரசர் அவைகளும் பெருஞ்செல்வர் அவைகளும் தமிழகத்தில் இருந்தன. இவற்றின் நிகழ்ச்சி நலங்களைத் திருவள்ளுவர் நேரிற் கண்டு தெளிந்திருந்தார். அவ்வவைகளில் இருந்து அறிவுரை வழங்கும் சான்ருேர், அவை வகையறிந்து

அவற்றின்முன் தாம் கற்றுவல்லவற்றை அஞ்சாது எடுத்துப் பேசுவர். பேசுவோருள் கேட்போர் உளங் கொள்ளச் சொல்லும் வன்மையுடையோர் கற்றருட் கற்றூர் எனப்பட்டனர். அப்பெற்றியோர், கற்றூர்முன் தாம் கற்றவற்றைச் சொல்லித் தம்மின்மிக்கார் கூறுவன வற்றைத் தாம் மேற்கொள்வர். பல நல்ல நூல்களைக் கற்றுவைத்தும், நல்லறிஞர் கூடிய அவையில் சொல்லும் திறனில்லாதார் பயனில்லாதார் என்றும், சொல்லற்கு அஞ்சுவோர் "கல்லாதவரிற் கடை" என்றும், அவர்கள் "உளரெனினும் இல்லாரொடொப்பர்" என்றும் அவை யினர் கூறிக்கொள்வர். இவற்றைக்கண்ட திருவள்ளுவர் இன்று நாம் அறிந்து ஒழுகத்தக்க வகையில் தெரிவித் துள்ளார்.

சங்ககாலத்தில் தமிழ்நாட்டின் ஒவ்வொரு பெரும் பகுதியும் சிறுசிறு நாடுகளாகப் பிரிந்திருந்ததெனச் சங்கத்தொகை நூல்கள் கூறுகின்றன. வேங்கடநாடு, இடைக்கழிநாடு, முக்காவல்நாடு, கோனாடு, குட்டநாடு, குடநாடு, மாறோக்கநாடு எனப் பல இருந்திருக்கின்றன. அக்காலத்து நல்லிசைச்சான்றோர் தமிழ்நாடு முழுதும் சென்று புலமைத்தொண்டு புரியும் பொற்பினர். அவர் இருந்து சிறந்த காலத்தவராதலால் திருவள்ளுவரும் தமிழ்நாடு முழுதும் சென்று அவ்வந்நாட்டு நலங்களையும் நுனித்தறிந்திருந்தார். அவர் சிறுசிறு நாடுகளாகத் தமிழ் வேந்தர் தங்கள் நாட்டைப் பிரித்திருப்பது கண்டார். நாட்டுப்பிரிவினைக்கண் அறிஞர் கொண்டிருந்த கருத்தை நுணுகி நோக்கினார். ஒவ்வொரு சிறுநாடும் தன்கண் வாழும் மக்களுக்கு வேண்டும் உண்டியும் உடையும் விளைத்துக்கொடுக்கும் வகையில் பிறநாடுகளை எதிர் பாரா வகையில் பிரிக்கப்பட்டிருப்பது கண்டார். சில

நாடுகள் இன்றியமையாத உணவுறுப்பெனப்படும் உணவுக்கும், உடைக்கும் ஆண்டுதோறும் பிறநாடுகளை எதிர்பார்க்கும் நிலையிலிருந்தன. உணவும் உடையும் நல்கும் பிறநாடுகள், எதிர்பாராத இடையூறுகளாலோ, போர், பகை முதலிய இடையீடுகளாலோ, உணவுடை நல்குந்துறையில் இயலாதனவாயின், அவற்றை யெதிர் நோக்கும் நாடுகள் பேரிடுக்கணுற்றழிவதும் திருவள்ளுவர்க்குப் புலனாயிற்று. ஆகவே, "நாடென்ப நாடா வளத்தன நாடல்ல, நாட வளந்தரும் நாடு" என்று தெளிந்தார் சிறப்புடைய நாடுகள் பிணியின்மை, செல்வம், விளைவு, இன்பம், ஏமம் என்ற இவற்றால் அழகு பெற்று விளங்கின. மக்களிடையே பல்குழுவும், பாழ்செய்யும் உட்பகையும் வேந்தலைக்கும் குறும்பும் இல்லாமல் இருந்தன. எல்லாம் அமைந்த வழியும் சில நாடுகளில் ஆட்சிநலம் சிறக்க இல்லாமையால் மக்கள் பரக்கழி பூண்டு பரிபுலம்பினர். நன்னாடுகள் வேந்தர்க்கு வேண்டும் பொருள்நல்கிப் பிறநாட்டு மக்கட்கும் வேண்டுவன நல்கின.

வளமுள்ள நாடுகளில் விளைவு பெருகச் செல்வம் மிகுதலால், அந்நாடுகளைக் கைக்கொள்வதற்கு வலியுடைய வேந்தர் நாட்டம் கொண்டனர். அதனால் போர் அடிக்கடி யுண்டாவது இயல்பாயிற்று. ஈட்டப்படும் பொருளைக் காப்பது இல்வழி அழிவது உறுதி. அதனால் காப்புக்குறித்து நாடுகளில் அரண்கள் பல அமைந்திருந்தன. இந்த அரண்கள் நீரரண், மதிலரண், மலையரண், காட்டரண் எனப் பலவகைப்படும். நீரரண், சூழ்ந்தோடும் ஆறும் அகழுமாம். மதிலரணாவது கல்லும் சுண்ணாம்பும் அரக்கும் செம்புங்கொண்டு எடுக்கப்படும் சுவர். இவ்வரண், உயர்வு, அகலம்,

திண்மை, பகைவர் கொள்ளற்கருமை என்ற நால்வகையாலும் சிறப்புற்றிருக்கும். இவ்வாறு ஒவ்வோரரணும் சிறந்த காவலுறுப்பாக இருக்கவேண்டும். இவற்றின் அமைதிகளையும், அவ்வமைதிபற்றி நூலோர் கூறுவனவற்றையும் திருவள்ளுவர் கண்டார். இவற்றுள், ஒவ்வொன்றும் மிக்க சிறப்புடையதாயினும், இவற்றின்கண் இருந்து வினை செய்யும் திறலுடையோர் நல்ல மாண்புடையராதல் வேண்டுமென உணர்ந்தார்.

அரண் வகைகளில் காப்பமைதி கண்ட திருவள்ளுவர், இவற்றின் இடமாக நின்று நாடு காக்கும் கருத்துடன் போருடற்றும் படைநலத்தைக் கண்டார். படைக்குரிய உறுப்புக்கள் எல்லாம் அமைந்து எத்தகைய ஊறுண்டாயினும் அஞ்சாது பொரும் படையே எங்கும் வெற்றிபெறுவதைத் திருவள்ளுவர் கண்டறிந்தார். படை மறவர் கூற்றுவன் உடன்று மேல்வந்த போதும் அஞ்சிச் சிதறியோடாது தம்மிற்கூடி அக்கூற்றுவனை வெல்லுமாறு வல்ல மறப்பண்பு கொண்டு தானை வீறு பெறுவதும், பகைவர் பலவகையான சூழ்ச்சி செய்தபோதும், அதனால் அறைபோகாது நேர்மையுடன் பொருது சிறப்பதும், மறம், மானம் மாண்புடைய வழிச்செலவு செய்வினைக்கண் தேற்றம் என்ற இவை படைக்குச் சிறந்த காப்பாய் வெற்றியளிப்பதும் திருவள்ளுவர்க்கு இன்பம் செய்தன. சில படைகள் அடுந்திறலும் அமைந்த ஆற்றலும் இல்லன போலக் காணப்பட்டன. ஆயினும் அவையே வெற்றி எய்தின. அதற்குக் காரணம் ஆராய்ந்த திருவள்ளுவர், காரணம் அதன் படைத்தகையெனவும், சிறுமையும் செயலின்கண் வெறுப்பும் வறுமையும் அதன்பால் இல்லாமையெனவும் கண்டார். வேறு படைகள்

நிலைத்த மறப்பண்புடையவாயிருந்தும் தோற்றோடக் கண்டு, அவற்றைத் தலைமைதாங்கி நடத்தற்குத் தக்க தலைமக்கள் இல்லாமையை அறிந்தார்.

இவ்வண்ணம் படையின் பொதுவியல்பு கண்டு படை மாட்சியறிந்த திருவள்ளுவர், படை மறவர் இடையே சென்று அவர் பொரும் இயல்பைக் காண லுற்றார். படை மறவன் ஒருவன் தன் பகைவரை நோக்கி, தன் தலைவனோடு பொருது வீழ்ந்து பலர் கல் நாட்டப்பெற்றனர்; அதனால் அவன் முன் நிற்றல் வேண்டா எனச் செருக்குடன் மொழிந்தான். ஒருவன் வில் விரும்பாது வேலையே விரும்பி யேந்திச் சென்றான். அவனை யணுகி வினவியபோது, காட்டுச்சார் ஓடும் குறுமுயலைத் தப்பாது எறிந்து வீழ்த்தும் அம்பை ஏந்து வதிலும், பெருங்காட்டிடத்தே களிற்றியானை யொன்றை வீழ்த்தக்கருதிச் செலுத்திய வேல் அதனை வீழ்த்தாது தைத்து வீழ்ந்து பிழைத்ததாயினும் அதனை யேந்துவது இனிது" என்றான். பகை வேந்தன் ஏறி வந்த களிற்றை வீழ்த்தக் கருதிய மறவன் ஒருவன், தன் கையிலேந்திய வேலை அதன் நெற்றியில் ஊடுருவ எய்தான். வேலேறுண்ட களிறு பின்னிட்டு வேலோடே ஓடி வீழ்ந்தது. வெற்றிகொண்டு வருபவன் தன் மார்பில் யானைமேல் இருந்த பகைவன் எறிந்த வேல் தைப் புண்டிருந்ததை அறியானாயினன். போர்க்களத்தே படை யொன்றுமின்றி வெறுங்கையுடன் செல்லின் ஒருவரும் தன்னோடு பொரற்கு எண்ணாரென்றெண்ணி வேல் வேண்டுமென விழைந்து நோக்கினான். அப்போது அவன் மார்பில் தைப்புண்டிருந்த வேல் காணப்பட்டது. உடனே அதனைப் பறித்துக் கையில் ஏந்திப் பெரு மகிழ்வு கொண்டான். இவ்வாறு மறவர் பலரும் மறம்

சிறந்து விளங்கக்கண்ட திருவள்ளுவனர், பலரொடு பொருது சிறந்து வென்றி மிக்குவரும் மறவனைப் பார்த்தார். அவன் முகத்தில் வருத்தக்குறி காணப்பட்டது. நெருங்கி உசாவியபோது, அந்நாளில் அவன் செய்த போரில் முகத்திலோ மார்பிலோ தனக்குப் புண் சிறிதும் உண்டாகவில்லை யென்றும், புண்ணுறப் பொராத நாள் வீழ்நாளென்றும் அவன் கருதி வருந்தினனென்பது தெரிந்தது. ஒருபால் ஒரு சிறந்த மறவன் மார்பு பிளப்புண்டு வீழ்ந்துகிடந்தான். அவனைச்சூழ வேந்தனும் தானைத் தலைவரும் நின்றனர். அவர் கண்களில் நீர் மல்கித் துளித்தது. அவ்வாறு, புரந்தார் தன்பொருட்டுக் கண்ணீர் மல்கச் சாகும் சாக்காடு மிகச் சிறந்ததாதலை எண்ணிய திருவள்ளுவர், இச்சாக்காடு "இரந்து கோட்டக்க துடைத்து" என வியந்தார்.

மேலே கூறிய அரசியல், பொருளியல் முதலிய வாழ்க்கைக் கூறுகளில் மக்கள் சிலருடன் நட்புற்று வாழ்வது இயல்பாதலைத் திருவள்ளுவர் நன்கறிந்தவர். மக்கள் பலராதல் கொண்டே அவர் ஒவ்வொருவரும் தம்மில் வேறுபாடு உடையர் என்பது விளங்கும். வேறுபாடு இயல்பாகவுடைய மக்கள் ஒருவரோடொருவர் புணர்ந்துறைவதாலும், பழகுதலாலும், உணர்ச்சியொத்தலாலும் நண்பராய் வாழ்வது திருவள்ளுவர்க்கு இனிது தெரிந்தது. உண்மை நட்பால் விளையும் இன்பமும், உண்மை நண்பர் செய்யும் நலமும், உண்மைநாடி நட்புச் செய்தலில் உள்ள அருமையும் கண்டு, நட்புப் போல உலகில் செய்தற்கரியது ஒன்றில்லை யெனவும், அந்நட்புப்போல ஒருவர் உயிர்க்குக் காப்பாவது வேறொன்றில்லையாதலால், உண்மை நட்பால் விளையும் காப்புப்போலச் செய்துகொள்ளும் காப்பு வேறில்லை

யெனவும் தெளிந்துகொண்டார். நண்பர் பலருடைய வாழ்வை ஆராய்ந்தார். ஆராயாது நட்புச் செய்து கொண்டவர் எய்திய கேடும், பேதையார் நட்பை நீக்கிக் கொண்டவர் எய்திய ஊதியமும், பழைமைபற்றி வந்த நட்பின் பண்பும், தீநட்புக் கூடா நட்புக்களால்விளையும் தீங்குகளும், தெளியக்கண்டார். பேதையர், புல்லறி வாளர் முதலியோர் பலர் திருவள்ளுவருடைய கூர்த்த நோக்கினுல் ஆராயப்பட்டனர்.

நட்புக்குரியாரை ஆராயுமிடத்துப் பேதையர் முத லாயினுரைக்கண்ட நம் திருவள்ளுவர், சிலர் எடுத்ததற் கெல்லாம் எளிதில் வேறுபட்டு முரணும் இயல்பினராக இருப்பதை அறிந்தார். அவ்வியல்புடையார் எப்போ தும் துன்பமே எய்தி வருந்தினர். அவர் அவ்வாறு வருத்தமுறினும் ஒருபோதும் அவர்க்குப் பொருள் களின் மெய்ம்மை புலனுவதில்லை. அவர்க்கு நேர் மாருக எல்லாரோடும் நயமாகவும் இன்பமாகவும் பழகும் பண்புடையார் பலர் இருப்பதும் திருவள்ளுவர்க்குத் தெரியும். அவர் அதனுல் இன்பமுறுவது கண் கூடாய்த் தெரிந்தது. இவ்விருதிறத்தாரையுங் கண்டு, “இகலானும் இன்னுத எல்லாம்; நகலானும் நன்னயம் என்னும் செருக்கு” என்று அறிந்து இன்புற்ருர்.

பகைத்துப் பொரும் மக்களில் பலர், பிறரோடு பகை கொள்ளின் ஆக்கம் இன்றி அழியும் திறத்தின ராகவே உள்ளனர். யாவர்பாலும் அன்பில்லாதவர், துணையில்லாதவர், உண்பன வுண்ணுது இவறுவோர், நீங்காத வெகுளியுடையவர், நிறையில்லாதவர், இன்னது செய்தால் பின்பு இன்னது உண்டாம் என எண்ணு தவர், வாய்ப்புடையவற்றைச் செய்யாதவர், பழி நோக்காதவர், நற்பண்பில்லாதவர், பெருஞ்சினங்

கொள்பவர், கழிபெருங்காமத்தார் முதலிய பலரும் பிறரைப் பகைத்தற்குத் தக்கவரல்லர். குணம் இன்றிக் குற்றம் பலவுடையவர் பிறரோடு பகைப்பின் எளிதில் வெல்லப்பட்டழிவர். நல்லறிவின்றி அஞ்சும் இயல் புடையவன் பகைவனாக வந்தால், அவனை எதிர்த்து வருபவன் மிக்க மகிழ்ச்சி கொள்வன். இவர் அனைவரும் திருவள்ளுவர ஆராய்ச்சிக்கு இலக்காயினர்.

மேலே கூறிய இயல்பினரல்லாத பிறர், பிறரோடு பகை கொள்வது பொருந்துமாயினும், பகையென்பது பண்பில் செயலாகும். அதனால் விளையும் கேடு பெரிதாத லால், விளையாட்டிலும் பகைகொள்வது வேண்டத் தக்கதன்று எனத் திருவள்ளுவர் கண்டார். அதனால், எவர்பாலும் பகைகொள்வது நன்றன்று; பகையை நட்பாக்கிக் கொள்ளும் பண்புடைமையே வேண்டுவது என்றும், எங்கேனும் தனக்குப் பகையுண்டாகிற தெனின் அதனை முளையிலேயே கிள்ளியெறிய வேண்டு மென்றும் அவர் தெளிந்து நம்மனோர் அறியவைத்தார். பகைவருள்ளும் புறத்தே நண்பர்போல ஒழுகும் பகை வர் பலர் உளர். உட்பகை எள்ளத்தனைச் சிறிதாயிருப் பினும் அது பெருங் கேட்டினைச் செய்யும். உள்ளத்தே பகைகொண்டு உறவாடியோரை நம்பிய பலர் கெட் டழிந்ததைத் திருவள்ளுவர் கண்டு, உடம்பாடில்லாதவ ரோடு வாழும் வாழ்வு நஞ்சுடைய பாம்போடு கூடி வாழ்வது போலாம் என அறிந்துரைத்துள்ளார்.

சிலர், அறிவு ஆண்மை முதலியவற்றில் தம்மினும் பெரியராயிருப்பாரை அடுத்து அவர் உரைக்கும் அறிவுவழி நின்று வாழ நினையாது. அவர்களை மதியாது கெடலாயினர். பெரியோரை மதியாது பகைப்பது கூற்றத்தைக் கையால் அழைப்பதுபோலத் திருவள்ளு

வர் கண்ணிற்குக் காட்சி வழங்கிற்று. அது கண்டதும் அவர், "கெடல் வேண்டின்" பெரியாரைக் கேளாது செய்க என்று கூறி யொழிந்தார். வேறு சிலர், வாழ்க்கைத் துணையாக வந்த மனைவியின் மாண் குணங்களைப் பயன் கொள்ளாது, அவளது பெண்மை நலத்தைப் பெரிதெனை விழைந்து அவள்பால் தலைமைதந்து தாம் அவட்கு அடிமையாகி யொழுகினர். அதனால் நண்பர்க்குத் துணை செய்வதேயன்றி ஒரு நல்ல செயவும் திறமில ராயினர். அவர்பால் அறமோ, பொருளோ, பிறவோ எவ்வினையும் காணப்படாவாயின. அவரைக் கண்ட திருவள்ளுவர், "மனைவிழைவார் மாண்பயன் எய்தார்" என்றும், வினைசெய்யும் விழைவும் ஆண்மையுமுடையாரார் "வேண்டாப் பொருளும் அது" என்றும் சுருங்கவுரைத்து நீங்கினார்.

ஆடவருலகில், பெண்ணின் பெண்மைநலமொன்றே கருதிப் பிறனில் விழைந்து திரியும் பேதையர் இருப்பது போல, மகளிருள்ளும் தக்கார் தகவிலரென நாடாது வரைவின்றித் தம்மை நச்சிவருவார்க்குத் தம் நலத்தை விற்கும் வரைவில் மகளிர் இருப்பது கண்டார். அவர்கள் தம்மைக் கூடும் ஆடவர் எவரையும் அன்போடு சேர்வதிலர்; அவர் தரும் பொருளையே அவர் நோக்குவர். அதனால் அவர்கட்குப் பொருட்பெண்டிர் என்றும் பெயர் கூறப்பட்டது. ஒருவன் தரும் பொருட்குத் தம் நலத்தை அவன் நுகரக் கொடுத்திருக்கும்போதே அம்மகளிர் மனம் வேறே பொருள் தருபவனை நாடி நிற்கும். அதனால் அவர்களை இருமனப் பெண்டிர் என்று வழங்குவது இயல்பு. இவருடைய தொடர்புடையாருட் பெரும்பாலார், கள்ளுண்டல் சூதாடல் முதலிய தீ நெறிகளில் ஈடுபட்டு வருந்தினர்.

இறுதியிற் கூறிய சூதாட்டத்தால் ஒருவன், உடை, செல்வம், ஊண், ஒளி, கல்வி யென்ற ஐந்தும் இழந்து அலமருவன் எனத் தெரித் துணர்த்தினர். இந்நாளை உரிமையரசியல், கள்ளுண்டலை நீக்கியிருப்பது திருவள் ளுவர்க்கு இன்பந்தருவதொன்றும்; ஆயினும் சூது மட் டில் நீக்கப்படாமல் இருப்பது நல்லொழுக்க வாழ்வுக்குப் பெருந்துன்பம் செய்து நிற்கிறது. வரைவின் மகளிர் கூட்டமும் குன்றிவருகிறது. இருமனப் பெண்டிரும் கள்ளும் சூதும் நல்லரசுக்கு நாணுத்தருவனவாம் என்பர்.

உலகியல் வாழ்வில், மக்களுடைய வாழ்க்கைக் கூறுகள் பலவற்றையும் கண்ட திருவள்ளுவர் மக்கள் நோயுற்று வருந்துவதையும் காணலுற்றர். மக்களுட லில், வளி, பித்து, ஐ யெனப்படும் மூன்றும் மிகுந்தாலும் நோயுண்டாகும். அவை மிகுதல் குறைதல் செய்வது உண்ணும் உணவு செரிக்காது நிற்கும் காலத்தே யாம் ஆதலின், ஒவ்வொருவரும் உண்டது செரித்தது அறிந்தே உணவு கொள்ளவேண்டும்; அவ்வாறு செய் தல் உடம்பின்கண் நிற்கும் உயிர் அவ்வுடம்பை நெடிது தாங்கிநிற்கும். நன்ருகப் பசித்தபின் உணவுகொள்வது சிறப்பு. உணவு மாறுபாடில்லாத பொருள்கள் பொருந்தி யிருக்கவேண்டும். பசித்துண்ணுர்க்கு நோயுண்டாதல் போலக் கழிபேருணவு கொள்பவர்க் கும் நோய் நீங்காது உண்டாகும். நோயுற்ருர்க்கு மருந்து தருபவன், "நோய் நாடி நோய் முதல் நாடி அது தணிக்கும் வாய் நாடி வாய்ப்பச் செயல்" வேண்டும். அங்ஙனம் செய்தவழி நோயுற்ருர் நோய் தீர்ந்து இன்புறுவர்.

இனி, நற்குண நற்செய்கைகளால் உயர்ந்தோர் கூட்டத்தைத் திருவள்ளுவர் காண்பாராய், உயர் குடி

யிற் பிறந்த பெருமக்களைக் கண்டார். அவர்பால் செப்பமும் நாணமும் இயல்பாக அமைந்திருந்தன. நகை, ஈகை, இன் சொல், இகழாமை என்ற நால்வகை நலங்களும் அவரிடத்தே நன்கு நிலவின. ஒழுக்கம், வாய்மை, நாணம் என்ற மூன்றிலும் சிறிதும் வழுவுதல் இலர். அவர் பேசும் சொல்லே அவர் குடிப்பிறப்பைக் காட்டி நின்றது. அவர்பால் சிறிது குற்றமுண்டாயினும் நிலாத் திங்களில் தோன்றும் களங்கம் போல அது விளங்கித் தோன்றிற்று.

பின்பு மானமுடைய மற மக்களைக் கண்டு அவர் தமது கருத்தைச் செலுத்தி ஆராய்ந்தார். இன்றியமையாச் சிறப்புடையன வெனினும், அவற்றால் மானம் குன்றுமாயின், அதனை அவர்கள் விரும்பாராயினர். வறுமையிற் செம்மையும் செல்வத்திற் பணிவும் அவர்பால் சிறந்துவிளங்கின. தம்மை இகழ்வாரைப் பின் சென்று அவர் அடிவருடி வாழும் இழிசெயல் மானமுடையாரிடத்தே காணப்படவில்லை. மானமிழந்தவர் தலையினின்றும் நீங்கி வீழ்ந்த மயிர்போல் இழிவுற்றனர். தன்மயிர் நீங்குமாயின் உயிர்விட் டிறக்கும் கவரிமாப் போல மானம் வந்த விடத்து உயிர்விட்டவர் பலர். இழிவுண்டாகக் கண்டு மானத்தால் உயிர் வாழா தொழிந்த உரவோர்களின் ஒளியை இவ்வுலகு தொழுதேத்திற்று. இவ்வாறே பெருமை, சான்றாண்மை. பண்புடைமை, நாணுடைமை முதலிய உயரிய பண்புடைய நன்மக்கள் இயல்புகளைத் திருவள்ளுவர் ஆராய்ந்தார். இவர்களிடையே செல்வத்தால் உயர்ந்தோர் சிலர் காணப்பட்டனர் அவர்பால் ஒவ்வொருகாலத்தில் சிறிது துனி தோன்றுவதுண்டு. ஆயினும் அது பொழிந்து வளஞ்செய்தற்குரிய மழை பெய்யாது

பொய்ப்பது போல மக்கட்கு வருத்தம் பயந்தது. எவர்க்கும் அன்புசெய்யாது தாமும் உண்ணாது தம்மையே வருத்தி அற முதலியவற்றைக் கனவினும் கருதாதவர், தம் பொருளைப் பிறர் கைக்கொள்ள மாய்ந்தொழித்தனர். தானும் உண்ணாது, தக்கார்க்கும் ஈயாது ஈட்டியசெல்வர்க்கு அவரது செல்வம் தீமையாகவே முடிந்தது.

செல்வத்தாற் சிறந்த செல்வர் சிலர் நன்று செய்தற்குப் பயன்படாதவகையில் செல்வத்தைத் தேனீக்களைப் போல ஈட்டித் தொகுப்பதும், தொகுத்தவற்றைக் கண்டு இன்புறுவதுமாகிய இத்தகைய செய்கைகளையே செய்து வாழ்ந்தனர். அவரைக்கண்ட திருவள்ளுவர், அவரது செல்வத்தொகுப்புக்குக் காரணமாய் நாளும் உழைத்து ஓய்ந்து வருந்தும் உழவர் கூட்டத்தை நோக்கினார். அவரது உழைப்பும் உலையா முயற்சியும் திருவள்ளுவர் உள்ளத்தை உருக்கின. அவரிடையே பலர் தாம் பிறந்தகுடி சீரும் சிறப்புமுடையதாகல் வேண்டுமென்ற கருத்துடன் உழைப்பது கண்டார். அவர் உள்ளத்தில் ஆள்வினையும் அவர்பால் ஆன்ற அறிவும் ஒளிவிட்டுத் திகழ்ந்தன. மடியென்னும் இருள், உழைப்பால் ஒளிரும் அவரது உள்ள ஒளியின்முன் நிற்கலாற்றாது கெட்டொழிந்தது. குடி செய்யும் அவர்க்குப் பருவம் என்பதே இல்லை; ஒவ்வொரு நொடிப்போதும் அவர்கட்குப் பருவமாகவே இருந்தது. அவர்கள் எச்செயலைச் செய்யத் தொடங்கினும் அது தானே இனிது முடிவெய்தக் கண்டார். குடிசெய்வல் என்றெழும் ஒருவனுக்குத் துணைசெய்யும் பொருட்டுத் தெய்வம் மடி கட்டிக் கொண்டு முன்வந்து நிற்குமெனத் தெரிந்தார். பின்பு உழவரை நோக்கினார். பிறர்பால் சென்று கையேந்திப்

பெறுவன பெற்று வாழும் சிறுமை அவர்பால் இல்லை. அவர் உழுது விளக்கும் பொருள்பெற்றே பிறர் வாழ வேண்டியிருத்தல் விளக்கமாயிற்று. பிறரைச் சென்று இரப்பதும், தம்மை இரப்பவர்க்கு இல்லை யென்று மறைப்பதுவும் அவர் அறியாதவை. உழவின் வளம் குறித்தே வேந்தருடைய நோக்கமெல்லாம் ஊன்றி யிருந்தது. உழவர் மனம் திறம்பித் தம் கைகளை மடக் கிக்கொள்வாராயின், முற்றத் துறந்த முனிவரும் பசியும் தளர்வுமுற்றுத் தம் முனித்தன்மை கெட்டொழி யக்கண்டார். உழவரது உழவுத்தொழிலைப் பார்த்தவர், அவர் உழுத வயற்புழுதி ஒரு பலம் அரைப்பலமாப் புலர்ந்ததால், அஃது ஒரு பிடி யெருவும் வேண்டாமலே நல்ல விளைவைச் செய்தது. ஏரால் உழுவதினும் எரு விடுதல் சிறந்தும், எருவினும் களை யெடுத்தல் சிறந்தும், அதனினும் நீர்பாய்ச்சுதல் சிறந்தும், அதனினும் காவல் சிறப்புற்றும் விளங்கின. வயற்குரிய கிழவன் நாடோ றும் சென்று வயலைக்கண்டு வாரானாயின், வயல் விளை நலம் குன்றிற்று. நிலக்கிழவர் 'யாம் ஒன்றும் இலமே' என வருந்துதற்கு உரியரல்லர்; வருந்துவராயின் அவரை நிலமே கண்டு எள்ளி நகைக்கும் என்பது தெரியவந்தது.

அந்நாளில், உழைப்பதற்கேற்ற உடல்நலமும் பிற நலங்களும் இன்றி வறுமையுற்று வருந்தும் இரவலர் பலர் இருந்தனர். அவருட் கற்றோரும் குடிப்பிறந் தோரும் எனப் பலதிறத்தர் உண்டு. அவரிடையே புகுந்த வறுமை பெருங்கேட்டினைச் செய்தது; குடிப் பிறந்தாரிடத்தே இளிவந்த சொற்களைப் பேசத்தக்க குற்றத்தைத் தோற்றுவித்தது; கற்றோர் நல்ல பொருள் களை நன்கெடுத்துச் சொன்னாலும், வறுமையால் அவர் சொற்கள் செல்லாக் காசுகளாயின. அவர்க்கு வேண்டு

வன நல்கும் செல்வரை நோக்கியகாலே, அவரிடையே ஈயாது கரப்போரும், ஈத்தல் கடனென வுணர்ந்து நல்கு வோரும் இருப்பது திருவள்ளுவர்க்குத் தெரிந்தது. அவரை ஒப்பநோக்கியபோது செல்வர் சிலரும் வறியர் பலருமாக இருந்தனர் இந்நிலே வளருமாயின், முடிவில் செல்வ வாழ்வைச் சீரழித்தற்கேற்ற தீய முயற்சிகள் வறியவர் கூட்டத்தே பிறக்கும்; இறுதியில் அக்கூட்டத் தின் முயற்சி வெற்றி எய்தவும் கூடும்; அந்நிலே எய்தா வகையில் செல்வரை நோக்கி, கற்ருேரும் குடிப்பிறந் தோரும் வறுமையுறின் தம்மியல்புக்கு மாருனவற்றைச் செய்வரென வற்புறுத்திஞர். இரக்கும் இரவலர் பொருட்டு வருந்தி, "கரவாதீயும் செல்வரிடத்தே சென்று இரத்தல் வேண்டும்; அவர்பால் இரப்பதும் ஈதல்போல் இன்பம் தருவதாம்; இரப்பாரைக் கண்டு இகழ்ந்து எள்ளாது ஈபவர்களேக் காண்பதே பேரின் பம்" எனத் தெரிவித்தார். இரப்பார்க் கீயத்தக்க செல்வமுடையாரை நோக்கி, "இரப்பவர் இல்லாராயின் இவ்வுலகியலில் நம் இயக்கம் மரப்பாவை இயக்கம்போல இருக்கும்; இவ்வுலகில் நம் தோற்றத்தால் ஒரு பயனும் இல்லேயாம்" என்று அறிவுறுத்திஞர். பின்பு இரத் தலும் ஈதலுமாகிய செய்கைகள் பெரும்பாலும் மக்க ளிடையே மனப்பிளவை வளர்ப்பதேயன்றி அதனேக் குறைக்கப் பயன்படுவதாக இல்லே. இதனேத் தெளியக் கண்ட திருவள்ளுவர், ஈகைக்கும் இரத்தலே காரணமாதலால், அதனேத் தவிர்ப்பது தக்கதென எண்ணிஞர்.

இரவலர் குழுவிடைச் சென்று அவர் படும் துன்பத் தைக் கண்டார். அவர் இவ்வறுமைத் துன்பத்தை இரந்து தீர்க்கும் மனவன்மையுடையராக இருந்தனர்.

மானமின்றி ஒருவர் முன்னின்று இரத்தலை எண்ணியதும் திருவள்ளுவர் உள்ளம் உருகி மெலிந்தது. ஆயினும், அவர் அதனைச் செய்யும் இரவலர் உள்ளத்தின் வன்மையை யுணர்ந்தார். அவ்வன்மை முறுகி யெழுமாயின் எத்துணை வல்லரசும் தவிடுபொடியாகுமே என எண்ணி யஞ்சினார். இரவலர் முன்னின்று, இரக்கக் கருதி நிற்கும் அவர் உள்ளத்தை மாற்ற நினைந்து "ஆவிற்குச் சிறிது நீர் வேண்டும் என ஒருவரை இரந்தாலும், நாவுக்கு அச் சொல்லால் பிறக்கும் இழிவு பெரிதாயிற்றே" என்றும், "ஒருவன் தான் முயன்று பெற்றது கொண்டு உண்ணும் உணவினும் உயர்ந்தவுணவு கிடையாதே" என்றும் எடுத்தோதினார். இரவலருட் சிலர், கரவாது ஈயும் கைவண்மையுடையவரை இரந்து வாழலாமே எனக் கருதுவ தறிந்த வள்ளுவர், அவரிடத்தும் இரவாமை கோடிநலங்களைச் செய்யுமே என்றார். அவரிடையே, உழைப்பவர் உழைப்பின் பயனை உறிஞ்சியுண்டு பெருஞ்சுவை நுகர்ந்து திரிந்த கூட்டங்களும் இருந்தன. அக் கூட்டத்தவருட் சிலர், எம்மை இரந்து வாழவேண்டுமென்றே உலகை இயற்றிய முதல்வன் படைத்துள்ளான்; எங்களுக்கென வரையறுக்கப்பட்ட தொழில்களுள் இரத்தலும் ஒன்றாக அற நூல்கள் குறித்துள்ளன என்று நினைந்தொழுகினர். அது முற்றிலும் பொய். உலகியற்றிய முதல்வன் சிலர் இரந்தும் உயிர் வாழ்தல் வேண்டுமெனக்கருதி அவர்களைப் படைத்திருப்பானாயின், அஃது உயிர் வாழ்க்கையைக் கெடுத்தற்குச் செய்த தீய சூழ்ச்சியாகலின், அத் தீவினையால் அவன் கெட்டழிவானாக எனத் தம் மடித்த வாயைத் திறந்து வெடித்த சொற்களை விளம்பினார்.

இனி, இவரினும் கடைப்பட்ட கீழ்மக்கள் பலர் பொதுவாக மக்களிடையே இருந்தனர். செல்வர், வறியர், கற்றவர், கல்லாதவர், முதியர், இளையர், அரசர், அடியர் என்ற எல்லாவகையான மக்களிலும் இக் கீழ் மக்கள் இருந்தனர். செல்வக் காலம் அல்லற் காலமென்ற எல்லாக் காலத்திலும் அவர்கள் நெஞ்சில் அவலம் சிறிதும் இன்றியிருந்தனர். எதனையும் தம் விருப்பப்படியே செய்வரேயன்றிப் பிறர் கூறுவது கேட்க விழையார். அச்சமே அவர்கட்கு ஒழுக்கமாகும். எஞ்ஞான்றும் பிறரைக் குற்றங்கூறுவதும் பிறர் மறை (இரகசியம்) யறிந்து தூற்றுவதும் அவரது சிறப்பியல்பு. அவர்கள் தம் எச்சிற்கையால் ஈயோட்டமாட்டார்கள். கன்னத்தில் அறைந்துபல்லையுதிர்க்கும்கண்ணறையர்க்கு வேண்டுவன விரைந்து வழங்குவர். சான்றோர் ஒன்று சொல்லப் பயன்படுவர்; இக் கயவர்கள் கொல்லப் பயன் படுவர். பிறர் உடுக்கும் உடையிலும் உண்ணும் உணவிலும் குறுகுறுத்த பார்வை செலுத்திக் குற்றம் காண்பதில் பெரு விருப்புடையர். இவர்களைக் கண்ட திருவள்ளுவர் "எற்றிற்குரியர் கயவர்!" என எண்ணினர். முடிவில் இவர்கள் "ஒன்று உற்றக்கால் விரைந்து தம்மையே விற்றற்குரியர்" என்று தேறி, இவர்போல் "ஒப்பாரி யாம் கண்டதில்லை" என்று கூறிக்கொண்டு சென்றார்.

## துறவு வாழ்வு :

இவ்வாறு மனைவாழ்வு, அரசியல் வாழ்வு, பொருள் வாழ்வு முதலிய பலவகை வாழ்வுவகைகளைக் கண்டு உண்மையறிவு பெருகிவந்த திருவள்ளுவர்க்கு வயதும் முதிர்ந்து வருவதாயிற்று. மக்களுடைய வாழ்வு தாழ்வு

களையும், இன்பத்துன்பங்களையும் அறிவு அறியாமைகளையும், வெற்றி தோல்விகளையும் நேரிற்கண்டு அவ்வக்காலங்களிலும் மக்களுடைய உள்ளம், உரை, செயல் என்பன இயன்ற முறையை அவர் நன்கறிந்தார். அவருடைய நன்மக்களும் அறிவு நிரம்பித் தத்தம் வாழ்க்கைகளை நடாத்தலுற்றனர். மனைவிமக்கள்பால் தோன்றிய அன்பு, சுற்றத்தார், துணைவர், நண்பர் முதலாயினார்பால் தொடர்ந்து அருளாகி எவ்வுயிர் பாலும் படருவதாயிற்று. ஆண்டு முதிர முதிர அன்பு முதிர்ந்து அருளாகிய கனியை விளைவிப்பது வாழ்வின் குறிப்பாதல் விளங்கிற்று. அந்த அருள் உயர்ந்தோர் பால் பெருஞ் செல்வமாய்த் திகழ்ந்தது. அதனையுடையார் வினையச்சமின்றி இன்பமுற்றனர். அவர்க்கு அல்லலே உண்டாகவில்லை. அருளுடையார் அருணெறியின் விழுவினால் மீளத் தேறித் தெளியும் வழியின்றி வருந்துவதையும் திருவள்ளுவர் கண்டார். "பொருளற்றார் பூப்பர் ஒருகால்; அருளற்றார் அற்றார்" எனத் தெரிந்தார். பின்பு, அருளாளர் புலால் உண்ணாது வாழக்கண்டார். புலால் உணவு ஒருவன் தன் ஊன் பெருக்குதற்குப் பயன்பட்டது. அதனால், 'தன்னூன் பெருக்கற்குத் தான் பிறிது ஊன் உண்பான் எங்ஙனம் அருளாளுவன்?' என ஆராய்ந்து, ஊன் தின்பவர்க்கு அருளாட்சியில்லையெனத் தெளிவுற்றார். ஊனுண்ணாமையால் உயிர்கள் தாம் நிற்றற்குரிய உடம்போடு நிற்கமுடியும்; மக்களுயிர் பிற மக்களுயிரின் உடம்பைத் தின்னலுறின், மக்கட் கூட்டம் இம்மாநிலத்தில் அருகிக் கெடும் என்பது கண்டு, "உண்ணாமை யுள்ளது உயிர்நிலை" யென்றார். அக்காலத்தே உயிர்க்கொலை புரியும் வேள்விகள் நடைபெற்று வந்தன. ஆயிரம்

வேள்விபுரிந்தோன் விண்ணுலக வேந்தாய்த் தேவரும் மக்களும் கைகூப்பித் தொழ மேன்மையுறுவன் என்ற கருத்தும் அவ் வேள்வியாளரிடை முற்பட்டு நின்றது. அதனால் திருவள்ளுவர், "அவிசொரிந்து ஆயிரம்வேட்டலின், ஒன்றன் உயிர்செகுத்து உண்ணாமை நன்று" எனவும், "கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி, எல்லா உயிரும் தொழும்" எனவும் வற்புறுத்தி வந்தார். இவ்வாறே உயிர்களைக் கொன்று வாழும் வாழ்க்கையும் சிறந்த வாழ்க்கையன்று எனத் தெளிவிப்பாராய், "அறவினை யாதெனில் கொல்லாமை" எனவும், "நல்லாறெனப் படுவது யாதெனின் யாதொன்றும், கொல்லாமை சூழும் நெறி" யெனவும் எடுத்தோதினர்.

இந்நிலையில் திருவள்ளுவருடைய உள்ளம் தவத்தை நோக்கத் தொடங்கிற்று. தவமுடையார், பகை கெடுத்தலும் நண்பரை எடுத்தலுமாகிய செயல்களை எளிதில் செய்தனர்; அவர் வேண்டியவற்றை வேண்டியவாறே பெற்று இன்புற்றனர். தவமாவது யாதென ஆராய்ந்தார். தத்தமக்குரிய கடமைகளைத் தவறாது செய்பவர் வேண்டிய வேண்டியாங்கு எய்துவது கண்டு, "தவம் செய்வார் தங்கருமம் செய்வார்" என்றார். தவமுடையாரை அறிதற்கு வழியறிய முயன்ற திருவள்ளுவர், உற்றநோய் பொறுத்தலும், பிற உயிர்கட்கு உறுகண் செய்யாமையும் தவமுடையார்பால் உருவாய் விளங்கக்கண்டார். துன்பம் சுடச்சுடத் தாக்கிய வழி, தவமுடையார் தம்கருமத்தில் உறைப்புற்று நின்று அறிவொளி பெற்று மேன்மையுற்றனர். தவமுடையார் உள்ளம் அருள் நிறைந்திருந்ததனால் பிற உயிர்கட்கு நலம் செய்வதே தவவினையாகக் கருதினர் உற்றநோய் பொறுத்தலால் தன்னலம் பேணாமையும், உயிர்க்குறு

கண் செய்யாமையால் பிறர்க்கென முயலுவதும் தவமாயின. இவற்றைச் செய்தற்கண் மனைவாழ்வு தடைசெய்து வந்தது. மிகச் சிலரே இத்தவத்தை மேற்கொண்டனர். இதற்குக் காரணம் காணலுற்ற திருவள்ளுவர், இத் தவம் கருதி மனைவாழ்வைத் துறந்த பெரியோர்க்கு வேண்டும் துப்புரவு நல்குதற்காக மற்றையவர் தவத்தை மேற்கொள்ள மறந்தனர்போலும் என்று கொண்டார்.

இங்ஙனம், தவம் குறித்து மனைவாழ்க்கையைத் துறந்து சென்ற சான்றோரிடையே போலித் துறவிகளும் உளராயினர். அவருட்சிலர் மனைவிமக்களைக் காக்கும் வலியின்றித் துறந்தார் வேடந்தாங்கினர். சிலர் மக்கள் அறியாமையைக் கருவியாகக்கொண்டு பொருளும் இன்பமும் நுகரக் கருதித் துறவுருக்கொண்டனர் வேறு சிலர் தாம் செய்த பெருங்குற்றத்தை மறைப்பது குறித்துத் துறவு நாடகம் நடித்தனர் அவரது வன்கண்மை கண்டு அஞ்சிய நம் திருவள்ளுவர், அவருட் சிலருடைய வஞ்சனை வெளிப்பட அவரெய்திய துன்பம் கண்டு, அவர்களை நோக்கி, "பற்றற்றேம் என்பார் படிற்றொழுக்கம் எற்றெற்றென்று, ஏதம் பலவும் தரும்" என்று கூறினர். ஏனை மக்களைப் பார்த்து, மனத்தில் மாசு தங்க, மாபெருந் துறவிபோலும் வேடமுடையார் பலருளர்; அவர்களை ஆராய்ந்து அறிதல் வேண்டுமென அறிவுறுத்தினர்.

இத் துறவுவேடம் பிறர் பொருளைக் களவு கொள்வதற்குச் சிலர்க்குத் துணையாயிற்று. களவினால் ஆகிய செல்வம் ஆவதுபோலத் தோன்றி முடிவில் அளவிறந்து கெடுவதும், கள்வர் தம் கள்ளம் வெளிப்பட்டவழிப் பெருந்துன்பம் எய்துவதும் திருவள்ளுவர் கண்டார்.

உண்மைத் துறவிகளை நோக்கினர். அவர் உள்ளத்தே களவில்லை; பொய்ம்மையும் இல்லை. உள்ளத்தாலும் பொய்யாதொழுகும் அவர்களை உலகத்தார் உள்ளத்தில் வைத்துப் பாராட்டிப் பரவினர். புறத்தூய்மை நீரால் அமைவதுபோல அகத்தூய்மை அவர் வழங்கிய வாய்மையாற் காணப்பட்டது. வாய்மையாவது யாதென நூல்களை ஆராய்ந்த வள்ளுவர், "வாய்மை யெனப்படுவது யாதெனின் யாதொன்றும் தீமை யிலாத சொலல்" என்றும், "பொய்ம்மையும் வாய்மை யிடத்த புரைதீர்ந்த நன்மை பயக்கும் எனின்" என்றும் தெளிந்தார். பிறர்க்கும், "யாம் மெய்யாக் கண்டவற்றுள் இல்லை எனைத்தொன்றும் வாய்மையி னல்ல பிற" என்று எடுத்துரைத்தார்.

தன்னலம் பேணாது பிறர்க்கென முயலும் பெற்றிய ராகிய துறவிகள் உடல் முதிர்ந்து வலிகுன்றியிருத்த லால், எளிதில் அவர்கள் வெகுளிக்கு இரையாயினர். அதனால் தீமைகள் பல உண்டாயின. செல்லுமிடம் செல்லாவிடங்களைத் தேராது, பலர் சினம்கொண்டு இரண்டிடத்தும் துன்பமே உற்றனர். அதுகண்ட திருவள்ளுவர் சினத்தால் நகையும் உவகையும் அழிவது நோக்கினர். அவற்றிற்குச் சினம் பகையாவதும் அறிந்தார். சினங்கொண்டவர்தாமே யன்றி அவர் இனத்தாரும் அதனால் துன்புற்றனர். சினம் கொள்ளாதான் தான் கருதியவெல்லாம் கருதியவாறு பெற்று இன்புறு தலைக்கண்டு, சினங்கொள்வார்க்குக் காட்டினர் இச் சினத்தால், பலர் பிறர்க்குத் தம் சொல்லாலும் செயலா லும் இன்னாமை செய்தனர். அது கண்டு வருந்திய திருவள்ளுவர், இத்துறவிகளது அறிவுப் பெருமையை எண்ணினர். அது பயன்படாமை கண்டு பரிந்தார்.

"அறிவினான் ஆகுவ துண்டோ பிறிதின்நோய் தன்நோய் போற் போற்றாக் கடை" யென்று அறிவுறுத்தினார். சிலர், இன்னாசெய்தாரை வாளாதுவிடின் மேலும் அதனையே செய்வரே யென்றனர். அவர்கட்குத் திருவள்ளுவர், "இன்னா செய்தாரை யொறுத்தல் அவர்நாண நன்னயம் செய்து விடல்" என்று தெருட்டினார்.

பொதுவாக உலகரையும் சிறப்பாகத் துறவியரையும் கண்டு அவரவர் உள்ளம், உரை, செயல்வகைகளை அறிந்து போந்த திருவள்ளுவர்க்கு உண்மைத் துறவின்கண் கருத்துச் சென்றது. செல்வம், உடல், இளமை முதலியவற்றின் நிலையாமை புலனாயிற்று. வாழும் வாழ்வில் ஒவ்வொரு பொழுதும் உடல் வாழ்வைக் குறைத்துக்கொண்டே வருவதை நன்கு எண்ணினார். உயிர்க்கும் உடம்புக்கும் உள்ள தொடர்பு, ஒரு பறவைக்கும் அதன் குடம்பைக்கும் உள்ள தொடர்பாக இருத்தலைத் தெளிந்தார். உடலின் நீங்கிய உயிர் எங்கே போகும் என நினைத்தார். உடம்புக்குட் போந்து ஒதுங்கியிருந்து விட்டுப் பின்னர் நீங்கி யேகும் உயிர்க்குப் புகுமிடம் ஒன்று இருந்தே தீரவேண்டுமெனத் தெளிந்தார். இவ்வுணர்வு முதிரமுதிர உடம்பின்கண் உள்ள பற்றுக்குறையத் தலைப்பட்டது. உடம்பிடமாக இருந்து பற்றினை விளைவிக்கும் ஐம்புலன்களை யடக்கினார். அடக்காது அகப்பற்றினைப்பற்றி நிற்பாரை இடும்பைகள் பற்றிக்கொண்டு விடாதிருப்பதை அறிந்தார். பற்றின்றித் துறந்து நோற்கும் பெரியோர்களை நோக்கினார். அவர்பால் ஒன்றின்பாலும் பற்றில்லாமை இயல்பாய் அமைந்துகிடந்தது.

பற்று ஏன் உண்டாகிறதென்பது காணலுற்றார், பற்று பிறப்புக்குக் காரணமாதலைக் கண்டார். பிறப்

பிறப்புக்கள் உளவாதற்குரிய காரணத்தை அறியலுற்ருர். உயிர்க்கு உடம்போடு உண்டாகிய தொடர்புக்குக் காரணம் புலனுயிற்று. என்னை காரணம்? உடம்போடு கூடியுறையும் உயிர்க்கு நொடிதோறும் அறிவு விளக்கம் உண்டாகிறது; உடம்பு அறிவு விளக்கத்துக்குத் துணையாவதால், உயிர் அறிவு விளக்கம் பெருதிருந்த நிலையிருந்ததெனவும், அதனைப் பெறும் பொருட்டு வந்த உடம்பு உயிரால் தேடிக்கொள்ளப் பெருமையால் இரண்டையும் தொடர்பு படுத்துவோன் இறைவன் என்றும், உயிரும் உடம்பும் ஒன்றையொன்று இன்றியமையாதிருப்பதற்கே இப் பற்று உண்டாகிறதென்றும், இப் பற்றும் அறிவு விளக்கமே செய்கிறதென்றும், உயிர் அறிவு முழுவிளக்கம் பெற்றவழி உடம்பின் தொடர்பு வேண்டாதென்றும், இறைவன் விளங்கிய அறிவே வுருவானவன் என்றும், அதனுல் அவற்கு உடம்பு வேண்டாமையின் அவன் பற்றற்றவன் என்றும், அவன் உண்மை யுணர்ந்து அவன்பால் பற்றுச் செய்யின் அறிவின் முழுவிளக்கமும் அதனுல் உடம்பின் தொடர்பாகிய பிறப்பு உண்டாகாதென்றும் தெளிந்தார். பிறர்க்கும் தெளிய வுணர்த்த நினைந்து, "பற்றுக பற்றற்ருன் பற்றினை" என்றும், "அப்பற்றினைப் பற்றுக பற்று விடற்கு" என்றும் அறிவுறுத்தினுர். துறவு நெறியும் அவருக்குக் கைகூடுவதாயிற்று.

துறவின்கண் நின்ற திருவள்ளுவர், பற்றற்ருனுகிய மெய்ப்பொருளை யுணரத்தொடங்கினுர். எப்பொருள் எத்தன்மைத்தாயினும் அப்பொருளின் மெய்ம்மைத் தொடர்பு காண்பதே அறிவெனக் கண்டார். கண்டவழி, உடம்பின் வேருக உயிர் விளங்குவது தேர்ந்து, அவ்வுயிர் உடம்பிற்குள் இயங்கும் மன

முதலியவற்றாலாகிய நுண்ணுடம்பின் உள்ளே விளங்குவது அறிந்தார். உள்ளே இருப்பதுபற்றி உயிர்க்கு உள்ளம் எனப் பெயரிட்டார் அவ்வுள்ளம் தன்னின் வேருக வுள்ளனவெல்லாம் நிலைபேறின்றி அழிவதால் நிலையாக வுள்ளதாகிய செம்பொருள் உண்மையினைக் கண்டு தன் அறிவு நன்கு விளங்கப்பெறும்; அதனால் உடம்பை வேண்டாதொழியும் என்று உணர்ந்து, "ஓர்த்து உள்ளம் உள்ளது உணரின், ஒரு தலையாப் பேர்த்துள்ள வேண்டா பிறப்பு" என்றார். இதனை நன்கறிந்த பிற்காலத்தே தோன்றிய மெய்கண்டதேவரும் உயிரை "உள்ளம்" என்றே வழங்கினார்.

செம்பொருள் உண்மையை யறியும் அறிவு, ஏனை உடம்பு முதலிய சார்புகளை நோக்கச் சிறந்த சார்பாக இருப்பதைத் திருவள்ளுவர் சிறப்புறத் தெளிந்து, உடம்பும் உலகுமாகிய சார்புகள் தமக்கு உண்டாகா வண்ணம் அச் செம்பொருள் அறிவே சார்பாக ஒழுகினார். உடம்போடு கூடியிருந்தே இதனைச் செய்து சிறந்தமையான், பொருட்சார்புகளாகிய உடம்புலகுகளால் உண்டாகும் நோய்கள் தம்மைச் சாரா தொழிவது கண்டார். "சார்புணர்ந்து சார்புகெட வொழுகின் மற்றழித்துச் சார்தாரா சார்தரும் நோய்" என்று அறிவுறுத்தினார்.

உடம்போடு உள்ளவரையும் நுகர்வன நுகர்ந்து வாழ வேண்டியிருத்தலால், செம்பொருளறிவுபெற்று உலகியற் சார்பு கெட ஒழுகுவது எங்ஙனமாகும் என்றொரு வினா அவர் உள்ளத்தே எழுந்தது. அதற்கு விடையாக, இதுகாறும் உடம்போடு பெற்றிருந்த தொடர்பால் உயிர்க்கு உண்டாகிய அவா அதனைத் தாங்கிநிற்கும் உடம்பு வழிநின்று, அறிவை மறைத்துப்

பிறப்பை யுண்டுபண்ணுமென்றும், அஃதுண்டாகாத வாறு அதனை அறுத்தொழுகவேண்டும் என்றும் கண்டார். அதனை அறுத்தற்குரிய எளியவழி, இறைவனை வாழ்த்தி வணங்குவதே எனத் தேர்ந்தார்.

இவ்வாறு மெய்யுணர்ந்து அவா வறுத்தொழுகுங் காலத்தில் இத் திருக்குறளை எழுதலுற்றார். அதனால் முதற்கண் கடவுளை வாழ்த்தும் வாழ்த்தினைக் கூறினார். அதன்கண் தாமுணர்ந்த இறைவனை, ஆதிபகவன், வாலறிவன், மலர்மிசையேகினான், வேண்டுதல் வேண்டாமையில்லாதவன், இறைவன், பொறிவாயில் ஐந்தவித்தான், தனக்கு உவமையில்லாதான், அறவாழி அந்தணன், எண்குணத்தான் என்று விளக்கினார். அவன்பால் பற்றுக்கொண்டு, ஏனை உடம்பு உலகவாழ்வுகளில் பற்று வையாது வழிபட்டொழுகினால், உடம்போடு கூடியுறையும் வாழ்வு இனிது இயலும் எனவும், ஆராத இயல்பினையுடைய அவாவால் உண்டாகும் துன்பங்கள் இல்லையாம் எனவும், இருவினையும் வந்து அணையா எனவும், மனத்தின்கண் கவலை முதலியன இல்லா தொழியும் எனவும், பிறவித் தொடர்பு இல்லாது கெடும் எனவும் கூறினார்.

இவ்வாறு வாழ்வோர் ஏனையுயிர்கள் இன்புற்று வாழ்வதையே விரும்பி அதற்கேற்ற பணியினைச் செய்வர். அதற்கு அவ் வுயிர்களால் நினைத்தபடியே பெற்றுக்கொள்ள முடியாதது மழையாதலால், பின்பு மழையைக் கூறினார். இவற்றையெல்லாம் ஆராய்ந்து கண்டுரைக்கும் ஆற்றலுடையார் துறவுநெறி நின்று நீத்த பெருமையுடையோர். அவர் பெருமையை மழையினை யடுத்துக் கூறி, அறத்தைப் பொதுவகையில் எடுத்தோதி வலியுறுத்தருளினார்.

ஊழ் :

அறம் பொருள் இன்பம் என்ற முத்திறத்து வாழ்விலும் சில நிகழ்ச்சிகள் காரணம் தெரியாமலே உளவாதலைத் திருவள்ளுவர் கண்டார். ஒன்றை நினைத்துச் செயின், ஒன்றேயன்றி வேறொன்று விளைவதும், அவ்வொன்றே விளையா தொழியா தொழிவதும், முற்றிலும் நினையாததொன்று வந்து நேர்ப்படுவதும் பிறவும் திருவள்ளுவர்க்கு முன்பிருந்த சான்றோர்க்குப் பெருங் கலக்கத்தை விளைவித்தன. வினை, செய்வது, செயப்படு பொருள், இடம், காலம், கருவி, நோக்கம், பயன் என எண்வகையான காரணங்களை ஒரு வினை நிகழ்ச்சிக்கு ஏதுவாகத் தொல்காப்பியர் முதலிய சான்றோர் கண்டிருந்தனர். மேலே கூறிய நிகழ்ச்சிகள் இவ் வாராய்ச்சியால் விளக்கம் பெறு தொழிந்தன. அவை காரணம் புலப்படாவகையில் நிகழ்ந்துவரக்கண்ட பண்டைச் சான்றோர், அவற்றின் பயனை நுகர்ந்து கழித்தனராயினும், புலப்படாத அக் காரணத்தை யறியும் முயற்சியில் இடைவிடாது உழைத்து வந்தனர்.

வாழ்வில் ஒருவன் நுகரும் இன்பமும் துன்பமும் அவன் செய்யும் வினை வழியாக உளவாவன என்பது இயல்பாகத் தெரிந்த ஒன்று காரணம் புலப்படாது நிகழ்ந்த நிகழ்ச்சிகளாலும் இன்பமும் துன்பமுமே பயனாய் விளைந்தன. வினைப்பயனாகத் தோன்றும் இன்பத் துன்பங்களே, காரணம் புலப்படாத நிகழ்ச்சிகளின் விளைவாயினமையின், இன்பத் துன்பக் காரணமான வினையே, காரணம் புலப்படாதவகையில் நிகழும் விளைவுகட்கும் காரணமாம் என்று கண்டனர். ‘பிறப்பொக்கும் எல்லா வுயிர்க்கு மெனினும், ஒருவர் செல்வத்திற்

பிறந்து இன்புறுதலும், ஒருவர் வறுமையிற் பிறந்து துன்புறுதலும் காரணம் புலப்படாதவகையில் நிகழும் நிகழ்ச்சிகளாகும்; வெயிலிற் செல்லும் இருவருள் ஒருவர் அழற்றெறிப்பு (Sun-stroke) உற்று இறப்பதும் மற்றவர் இருப்பதும், மழை நாளில் ஒரு மனையின்கண் இருக்கும் பலருள் ஒருவர் இடியேறுண் டிறப்பதும், பிறர் இருப்பதும் காரணம் அறியவாராத நிகழ்ச்சிகளாகும். இவ்வாறே, பண்டைநாளில் இந்தியாவுக்கு வழி காண்பான் முயன்ற கொலம்பஸ் அமெரிக்காவைக் கண்டதும், இந் நாளில் ரேடியம் காண முயன்றவர் போலோனியம் கண்டதும் மேற்கூறிய நிகழ்ச்சியின்பாற் பட்டனவாம். இந் நிகழ்ச்சிகட்கும், இவற்றின் பயனை உற்றோர்க்கும் செலவும் முயற்சியும் முதலிய வினை வகையால் தொடர்புண்டாதலின், புலப்படாத காரணத்தை வினை யென்றே பண்டையோர் கூறினர்.

ஒரு வினையின் பயனாகிய இன்பமும் துன்பமும் அவ் வினை முடிவிலே பெரும்பாலும் உளவாகும்; சில இடையில் இன்பம் பயந்து முடிவில் வேறொன்று விளைவிக்கும்; சில தொடக்கத்தில் துன்பம் பயந்து முடிவில் இன்பம் பயக்கும். இவ் வாற்றால் வினை வகைகட்கேற்ப வினைப் பயன்கள் முதல் இடை முடிவு என்ற விடங்களில் தோன்றுவதைக் கண்டு, காரண காரியங்களை ஆராய்ந்த அறிஞர் அவை ஒரு முறைபற்றி நிகழ்வது கண்டனர்.

அம் முறையினை ஆராய்ந்த அறிஞர், வினைப் பயன்களாகிய இன்பத் துன்பங்கள், வினையின்கண் அருவாயிருந்து, அவ் வினை, வினைமுதல், கருவி, காலம் என்பனவற்றால் தொழிற்படுங்கால், தாமும் முகிழ்த்து அரும்பிப் பூத்துச் சிறப்பிக்கும் மலர்போல் சிறந்து

வினை முடிவின்கண் நறுமலர் பயன்படுவது கண்டுணர்ந் தனர். பூத்து மணஞ்செய் செயலை ஊழ்த்தல் என்பது தமிழ் வழக்கு. 'இணரூழ்த்தும் நாறா மலரனையர்'' எனத் திருவள்ளுவரும், பூத்து மணங்கமழச் சமைந்த அரும்பினை "ஊழ்முகை'' (நற். 115) எனவும், மணங் கமழ்ந்து வயங்கும் பூவை "ஊழுறுபூ'' (நற். 326) என வும் சான்றோரும் வழங்குவது காண்க. இவ் வூழ் முகை யும் ஊழுறு பூவும்போல, இன்பமும் துன்பமுமாகிய பயன்களைமட்டில் பயக்கும் வினையும் வினை முதலும் கருவியும் பிறவுமாகிய, காரணம் விளங்காத வினைகளை, ஊழ்வினை யெனச் சான்றோர் வழங்கினர்.

ஒரு வினைக்குரிய பயன், அதன் வினைமுதலோடு தொடர்பும் உரிமையும் பெற்று விளங்குவது கண்கூடு. காரணம் புலப்படாத வினைப்பயன்கள் ஒருவரை யடையுமாயின், அவருக்கும் அப் பயன்கட்குக் காரண மான வினைக்கும் தொடர்புண்டென்பது தெளிவாம். பயனை நோக்க, வினை காலத்தால் முற்படுவதால், கார ணம் புலப்படாது நிகழும் வினைப்பயன்கள் ஒருவ ருடைய முன்னை வினைப்பயன் எனவும் வழங்கப் பட்டன. இவ்வாறு, வினையுணர்வு தோன்றிக் கற்றார் கல்லாதார் என்ற இருதிறத்தாரிடையிலும் நன்கு பரவி யிருந்த காலம் சங்ககாலம். "யாம்செய் தொல்வினைக் கெவன் பேதுற்றனை'' யெனப் பேசும் நல்லந்துவனார் முதலிய சான்றோர் இருந்த காலம் அச் சங்ககாலம். அதுவே திருவள்ளுவர் காலமுமாதலின், இவ்வினையைப் பற்றியும் திருவள்ளுவர் தமது நூலில் கூறும் கருத் துடையரானார். அறம் வினையின்மேலும், ஏனைப் பொருளும் இன்பமும் வினைப்பயன்மேலும் நிற்கக் கண்டு, அறத்துக்கும் பொருட்கும் இடையே ஊழ்வினை

யெனப் பெயரிட்டு, இதனைப்பற்றித் திருவள்ளுவர் பத்துத் திருக்குறள்கள் வழங்கினர்.

மடிமையே வடிவாகவுள்ள ஒருவன், ஒரு காரணமும் பற்ருது முயற்சியுடையனுய் ஒரு வினை செய்து இன்புறுவதும், முயற்சியுருவாய ஒருவன் எதிர்பாரா வகையில் மடியுற்றுத் துன்புறுவதும் திருவள்ளுவர் கண்டார்; சிறந்த அறிஞனெருவன் ஓரோவழி அறிவு மழுங்கியிருந்தான்; பிறிதொருகால் ஒருவன் பிற அறிஞர் காண்டற்கரிய நுட்பத்தை யுணர்ந்தான்; சிறந்த செல்வமுடையார்பால் இருத்தற்குரிய கூர்த்த அறிவு, வறுமைத் தீயில் வதங்குவோன்பால் ஒளிவிட்டுத் திகழ்ந்தது; ஒருவன் செல்வம் செய்தற்கு இவை நல்லன எனத் தேர்ந்து அவற்றைச் செய்தாஞக, அவை தீயவாய்ச் செல்வக்கேட்டிற் குள்ளாயின; பிறனெருவன் உணர்வின்றியே தீச்செயல் செய்ய, அது மிக்க செல்வம் பயந்து அவற்குச் சிறப்பை விளைவித்தது. மிடியால் வருந்துமொருவன் மிடிமைக்கு ஏதுவாகிய குணஞ் செயல்களையும் இடம் பொருள்களையும் விலக்க முயன்ருன்; அவன் முயற்சி வெற்றிதரா தொழிந்தது. பெருஞ்செல்வமுடையவரொருவர் நுகரக்கடவ நுகர்பொருள் முற்றவும் நிரம்பப்பெற்றுண்ணும் பீடுடையராயிருந்தும், நுகராது வருந்தக்கண்டார். இவர்கள் செயல்களெல்லாவற்றிற்கும் ஊழ்வினையே காரணமாவது உணர்ந்து நம்மனேரறிய எடுத்துரைத்தார். வினையுணர்வுடையாரை நோக்கி, நன்றுண்டாகுங்கால் அதன் பயனுகிய இன்பத்தை ஊழ்வினையென வுணர்ந்து நுகருவோர் தீதுண்டாகுங்கால் அதுவே யுணர்ந்து வருந்தாதொழிதல்வேண்டும் என்றும், ஊழினும் பெருவலியுடையது பிறிது யாதும் இல்லையென்றும் அறிவுறுத்தினர்.

இவ்வாறு உரைத்தாராயினும், ஊழ்வினையே என்று சொல்லிக்கொண்டு செய்யக்கடவ அறங்களையும், ஈட்டற்குரிய பொருள்களையும் நுகர்தற்குரிய நுகர்ச்சிகளையும் ஒருவன் செய்யாதொழிதல் கூடாது என்று திருவள்ளுவர் வற்புறுத்தியுள்ளார். மற்றொன்று சூழினும் தான் முந்துறும் பெரு வலியுடையதாயினும், இறைவன்பால் உண்மை யன்புகொண்டு அவன் பொருள்சேர் புகழ் புரிந்தாரை இவ் வூழ்வினை வந்து சேரும் வலியுடையதன்று என்றற்கு "இருள்சேர் இருவினையும் சேரா" என்றும், மலை துளங்கினும் கடல் வெதும்பினும் மனந்துளங்காத வுள்ளமும் முயற்சியுமுடையார்க்கு இவ் வூழ் புறங்காட்டியோடும் புன்மையுடையதென்றற்கு, "ஊழையும் உப்பக்கம் காண்பர் உலைவின்றித் தாழா துஞற்று பவர்" என்றும் யாப்புற எடுத்துரைத்தார்.

---

## ரு. திருவள்ளுவரைப்பற்றிய கதைகள்

### புலவர் புராணம் கூறும் கதை

திருவள்ளுவர், ஔவையார் முதலிய நல்லோர் சிலருடன் பிறந்தவர். இவருடைய தந்தை பகவன் என்னும் பார்ப்பனர். தாய் ஆதியென்னும் பெயரினர். பகவனூர் பிரமன் "அங்கிசத்தினர்"; ஆதியார் கலைமகள் "அங்கிசத்தினர்". இவ்விருவருக்கும் மக்கள் எழுவர் பிறந்தனர். அவருள் ஆண் மக்கள் மூவர்; அவர், வள்ளுவன், கபிலன், சேரமான் என்போராவர். பெண் மக்கள் நால்வர்; அவர் உப்பை, உறுவை, ஔவை, வள்ளி எனப்படுவர். இம் மக்கள் எவ்வெவ்விடங்களிற்

பிறந்தார்களோ, அவ்வவ்விடத்திலேயே அவர்களை அன்பின்றி விட்டேகுவது பெற்றோராகிய பகவனும் ஆதியும் மேற்கொண்டிருந்த கொள்கை.

பெற்றோரால் கைவிடப்பெற்று அழுதுகொண்டிருந்த வள்ளுவனாகிய குழவியை, ஒரு வேளாளன் கண்டு ஆர்வத்தோடு எடுத்துச் சென்று, "இக் கவின் சேயை இந் நாள் எளிதினில் எமக்கு நல்கல் முக்கணான் அருளே" என்று கருதிப் போற்றி வளர்த்துவந்தான். பிள்ளை திருமணத்துக்குரிய செவ்வியெய்தியபின், அவருக்கு 'வாசுகி' என்னும் அரிய பெண்ணொருத்தியை மணம் செய்தனர். சின்னாட்களில் வேளாளனும் அவன் மனைவியும் சிவனடியைச் சேர்ந்தனர். திருவள்ளுவர் தம் மனைவியோடுகூடி முனிவரும் வியக்குமாறு இல்லறம் புரிந்துவந்தார். வாசுகியும் தன் ஒழுக்கத்தால் கற்புக்கெல்லையாய்ச் சான்றோரால் கருதப்பெறும் பெரும்பேறு பெற்றனர். இதனைப் புலவர் புராணமுடையார்,

> "மாசறு தவத்தின் மிக்க வசிட்டமா முனிக்கு வாய்ந்த
> தேசவிர் வடமீன் சீர்த்தி செப்புவார் செப்புந் தோறும்
> வாசநாண் மலர்ப்புத் தேளாம் வள்ளுவன் மனைதன் மாட்சி
> பேசலும் உலகி லென்றும் பெருவழக் காயிற் றம்மா!"

என்று கூறுகின்றார்.

இவ்வாறு வள்ளுவர் கற்புச் சிறந்த வாசுகியாரோடு வாழ்ந்திருந்த இடம் மயிலாப்பூர். அவ்வூருள் அவர் ஏனைமக்கள் வாழும் இடத்தில் வாழாமல் ஊருக்குப் புறத்தே ஒரு குச்சுவீடமைத்துக்கொண்டு அதன்கண் நெசவுத் தொழில் செய்துவந்தார். அக் காலத்தேதான் அவர் திருக்குறள் நூலைச் செய்தார். இதனோடு சோதி

டம் முதலிய தூய நூல்கள் சிலவற்றைத் திருவள்ளுவர் செய்தாரெனப் புலவர் புராணம் கூறுகிறது.

அந் நாளில் மதுரையில் இருந்த தமிழ்ச் சங்கத்துப் புலவர்கள் தருக்குமிகுதியால், சங்கத்திற்கு நூலெழுதி வரும் ஏனைப் புலவர்களை இகழ்ந்து, அவர் தம் நூலையும் குற்றம் கூறி வஞ்சனை செய்துவந்தனர். "என்ன பாட்டெவர்சொன்னாலும் இதுபழம் பாடல் என்னப் பன்னலும் எழுதிக் காட்டும் படிறும்" பிற தீச்செயலும் அவர்கள் மேற்கொண்டிருந்தனராம். வள்ளுவர் அதனையறியாது தாம் எழுதியருளிய திருக்குறளை எடுத்துக்கொண்டு மதுரைத் தமிழ்ச் சங்கத்தில் அதனை அரங்கேற்றக் கருதிச் சென்றார்.

செல்லுங்கால் வழியில் ஒருநாள் பெருமழை பொழிந்தது. திருவள்ளுவர் வழியருகே நின்ற ஆலமரமொன்றின் அடியில் ஒதுங்கிநின்றனர். அங்கே அவர்க்கு முன்னே ஒருவன் வந்திருந்தான். அவன் பெயர் இடைக்காடன் என்பது. அவ்விடைக்காடன், "புத்தகத்துப் பேயா சிற்றிலையின் கீழ்வா," என்று பேரொலி செய்து அழைத்தான். வள்ளுவரும் அங்கே சென்றார். சிறிதுபோதில் மழையும் நின்றது. பின்னர், அவன் வள்ளுவரைப் பார்த்து அவர் வரலாற்றைக் கேட்டறிந்து, "உன் கையில் உற்ற நூலிற் கூறும் ஒண்பொருள் வகை யாது?" என்று வினவினான். அவற்கு வள்ளுவர், "முற்ற யாவையும் மொழிந்துளேன்," என்று மொழிந்தார். இடைக்காடன், ஆட்டினங்களுக்கு இலைதழை பறித்துதவும் கோலைக் குறளாசிரியர்க்குக் காட்டி "இதற்கும் பாடல் பாடியுள்ளாயோ?" என்று கேட்டான். உடனே திருவள்ளுவர், "உரன் என்னும் தோட்டியான் ஓரைந்தும் காப்பான், வரனென்னும்

வைப்பிற்கோர் வித்து,'' என்னும் பாட்டினை, தம் திருக்குறள் நூலிலிருந்து படித்துக் காட்டினார். அது கேட்டு, இடைக்காடன் பெருமகிழ்வுகொண்டு, தானும் திருவள்ளுவருடன் மதுரைக்குச் செல்லும் கருத்துடையேன் என்று சொல்லி, அவரோடே மதுரைக்குச் சென்றான். இருவரும் சிறிதளவு சென்றதும், வழியில் ஔவையார் வரக்கண்டு அவர்பால் தங்கள் கருத்தை வெளியிட்டனர். அவரும் தான் மதுரைக்குச் செல்வதாகத் தெரிவித்தார். பின்பு மூவரும் மதுரை மூதூரைச் சென்று சேர்ந்தனர்.

மதுரையில் சங்கத்தைச் சார்ந்த சான்றோர் சிலர் இம்மூவரையும் நோக்கி, "நீவிர் எந்த ஊர்?'' என்று கேட்டனர். அதற்குத் திருவள்ளுவர்,

"எந்தவூ ரென்றீர் இருந்தவூர் நீர்கேளீர்,
அந்தவூர்ச் செய்தி யறியீரோ—அந்தவூர்,
முப்பாழும் பாழாய் முடிவிலொரு சூனியமாய்
அப்பாழும் பாழாய் அறும்.''

என்று விடையிறுத்தார். பின்பு அவர்கள் வள்ளுவரை நோக்கி, "நீவிர் யார்?'' என்று வினவ, அவர், "யான் வள்ளுவன்,'' என்றார். என்றலும், அவர்கள் சற்றும் மதிப்பின்றி, "குலைக்குந்தன்மை கொள்ளுதிகொல்லோ?'' என இகழ்ந்தனர். அவ்விகழ்ச்சியைப் பொருளாகக் கொள்ளாத வள்ளுவனார், "குலைக்கவே வந்தேன்,'' என்றார்.

பின்னர் அவர்கள் இடைக்காடனை நோக்கினர். இடைக்காடனார் அவர்களைப் பார்த்து, "ஆற்றங்கரையில் இருந்த மாமரத்தில் ஒரு காக்கையிருந்து கத்த, அதனை ஓட்டும் கருத்துடைய இடைச்சிறுவன் ஒருவன்

அதனை எய்யக் கோலின்றிக் கையற்று ஒலித்த குறிப்புத் தோன்ற ஒரு பாட்டுப் பாடுமின்,'' என்ருர். அவர்கள், காக்கை கரையும் ஒலிக் குறிப்பும் இடைச்சிறுவன் கையற்ருெலிக்கும் இசைக் குறிப்பும், குறிக்க வகையறியாது மயங்கினர் அவர், அவர்கள் செருக்கடங்க,

"ஆற்றங் கரையி னருகிருந்த மாமரத்தில்
காக்கை யிருந்து கஃகஃகெனக் — காக்கைதனை
எய்யக்கோ லில்லாமல் இச்இச்இச் சென்ருன்
வையக்கோ ஞர்தம் மகன்"

என்ற பாட்டைப் பாடிக் காட்டினர். இவ்வாறே ஔவையாரும் பாட்டுக்கள் பாடிச் சங்கப்புலவரின் தருக்கை யழித்தனர்.

இனி, சங்கப்புலவர்கள் திருக்குறளின் சீர்மை காண்டல் வேண்டித் தாமிருந்த சங்கப்பலகையின் மேலே அதனை வைத்தனர். அப்பலகை அவ்வொரு நூலுக்குமட்டில் இடம் தந்து அப் புலவர்களைக் குளத்தில் வீழ்த்திற்று. அதுகண்டு வியப்புற்ற சங்கப் புலவர்கள் திருக்குறளை வியந்து தனித்தனியே ஒவ்வொரு பாட்டுப்பாடி வள்ளுவரை வாழ்த்தினர்.

மதுரைத் தமிழ்ச்சங்கத்தில் தாம் எழுதிய திருக்குறளை அரங்கேற்றிச் சிறப்பெய்திய திருவள்ளுவர், பாண்டி நாட்டவர் செய்த சிறப்புக்களை ஏற்றுக் கொண்டு திருமயிலை வந்தடைந்து முன்போல் மனையறம் புரிந்துவந்தார். அதுபோது திருவாலங்காட்டில் கூத்தப் பெருமானுன இறைவன் காளியொடு வாதக்கூத்து இயற்றி மேம்பட்டான். அக் காலை அங்கே கூடியிருந்த தேவர்களை நோக்கி அவன் "எம்மில் வெற்றி யெய்தியவர் யாவர்?'' என வினவ, தாம் அறியமாட்டாமை கூறி வருந்தினர். இறைவனுர், "நீவிர் திருமயிலை சென்று திரு

வள்ளுவரைக் கண்டு தெளிந்து வருக," எனப் பணித்தார். அவர்களும் மக்களுருக்கொண்டு திருவள்ளுவர் மனைக்குச் சென்றனர். அங்கே அற்புதங்கள் பல நடந்தன.

ஒருநாள் திருவள்ளுவர் பழையது உண்ணுங்கால், தம் மனைவியை நோக்கி, "பெண்ணே! இது சுடுகிறது, விசிறி கொணர்க," என்றார். வாசுகியார் மறுத்தொன்றும் கூறாமல் விசிறி கொணர்ந்து விசிறினார். அப்போது பழஞ்சோற்றில் ஆவி கிளம்பிற்று. வேறொரு நாள் வாசுகியார் தண்ணீர் முகத்தற்குக் கயிற்றில் குடமொன்றைக் கட்டிக் கிணற்றில் இட்டிருக்கையில், திருவள்ளுவர் அவரை யழைத்தார். மனைவியார் கயிற்றை அங்ஙனே விட்டுவிட்டு வந்தார். கிணற்றிற் பாதியளவில் வந்திருந்த குடம் அவர் திரும்பிவருமளவும் "அந்தரமாய்" நின்றுகொண்டிருந்தது. இச் செயல்களைக் கண்ட தேவர்கள், வாசுகியாரின் கற்புநலம் கண்டு வியந்து பாராட்டித் தாம் வந்த கருத்தைத் திருவள்ளுவர்க்குத் தெரிவித்தனர். அவர்கட்கு விடைகூறலுற்ற திருவள்ளுவர்,

"பூவி லயனும் புரந்தரனும் பூவுலகைத்
தாவி யளந்தோனும் தாமிருக்க—நாவில்
இழைநக்கி நூனெருடும் ஏழை யறிவேனோ
குழைநக்கும் பிஞ்ஞகன்றன் கூத்து"

என்று மொழிந்தார். தேவர்கள் அதனால் மனந்தேறித் தம் தேவவுலகு சென்று சேர்ந்தனர்.

சிறிது காலத்துக்குப்பின் ஏலேலசிங்கன் என்னும் செட்டி ஒருவன் திருவள்ளுவரைக் குருவெனக்கொண்டு அருளுரை பெற்று உய்திபெற எண்ணி வந்தான். அவனை வள்ளுவர் பலவகையால் ஆராய்ந்தார். ஒருநாள்

அவர் அவனை ஒரு மரத்தில் ஏற்றி இரு கையையும் விட்டு நிற்குமாறு கூறினார். அவன் "குருபாதம் துணை" என நினைந்து அவ்வாறே செய்தான். அவன் கீழே விழவில்லை. அதன்பின் அவன் திருவள்ளுவர் மனையில் வாசுகியார்க்கு மகன்போல் ஒழுகிவந்தான்.

அக்காலத்தே நாட்டில் பெருவறம் உண்டாயிற்று. ஆனால், ஏலேலசிங்கனிடம் குன்றுபோல் செல்வம் குவிந்திருந்தது. அவனைப் பார்த்து, "நீ வாங்கிக் குவித்துள்ள நெற்குவையை வாங்கியதற்குமேல் ஒருபடி மிகுதியாக விற்பாயாக!" என்றார். அவனும் அவ்வாறே செய்தானாக, நெற்குவை சிறிதும் குன்றாமல் குவிந்தேயிருந்தது. அப்போது, அவர் "இதனை வறியார்க்கு வரைவின்றி வழங்குக," என்றார். அவ்வழியும் அது குறைபடாமலே இருப்பதாயிற்று. பிறிதொருகால் அவர் ஏலேலசிங்கனை நோக்கி, "நீ ஈட்டிய பொன்னை உருக்கிச் சதுரக்கல் போற் செய்து அதன்மேல் உன் பெயரைப் பொறித்துக் கடலில் எறிந்து வருக," எனக் கட்டளையிட்டார். அவர் சொல்வழியே அவனும் செய்து மாணவன் என்னும் தனது உண்மைப் பான்மையை நிலைநாட்டினான்.

இது நிற்க, ஏலேலசிங்கன் புலாலுண்ணும் இயல்பினன். அதனை முற்றவும் கைவிடுவதென்பது அவனுக்கு அருஞ்செயலாக இருந்தது. அதனையறிந்த திருவள்ளுவர் அவனைப் படிப்படியாகத் திருத்தக் கருதி அவனை நாடோறும் செத்துப்போன சேல் மீன்களையே தின்னுமாறு திட்டம் செய்தார். அவ்வாறே அவன் செய்து வந்தான். அவனுக்காக மீன் வலைஞர் செத்த சேல் மீனைக் கொணர்ந்து தந்துவந்தனர். ஒருநாள் அம்மீன் வலைஞர் பெரியதொரு சேல்மீனை வலைவீசிப் பிடித்துக்

கொன்று அதன் உடலைப் பிளந்தார்கள். அதன் வயிற்றில் பாசி மூடிய பொற்கட்டி யொன்றிருந்தது. அதனை உயர்ந்ததொரு பச்சைக் கல்லெனக் கருதிய மீன்வலைஞர் ஏலேலசிங்கனிடம் தந்தனர். அவன் அதனைப் பொன்னெனன நினையாது தன் புறக்கடையில் இட்டான். நாளடைவில் அது பாசி நீங்கி முன்னே அவன் கடலில் எறிந்த சதுரப் பொற்கல்லாக இருந்தது. அது கண்டு வியந்த சிங்கன் திருவள்ளுவர்க்குத் தெரிவித்தான். அவர், "அறத்தாற்றிற் செய்த பொருள் அகற்றினும் அகலாது," எனச் சொல்லி அவனைத் தேற்றினர்.

இது நிகழ்ந்த சிலபல நாட்களுக்குப்பின், வாசுகியார்க்கு வாழ்நாள் எல்லை குறுகிற்று. அவர் உயிர் எளிதில் நீங்காது ஊசலாடுவதாயிற்று. அதுகண்ட திருவள்ளுவர், "பெண்ணே! உன் மனத்தில் யாது உளது?" என்றார். அப்போது, வாசுகியார், "அடிகளே! அடியேன் மனத்தில் ஓர் ஐயம் உளது. யான் உணவு படைக்கும்போதெல்லாம் ஒரு வள்ளத்தில் தண்ணீரும் ஓர் ஊசியும் கொணர்ந்துவைக்குமாறு பணித்திருந்தீர்கள். யானும் அது செய்தேனுயினும் தாங்கள் அவற்றை ஒருநாளும் கையாண்டதில்லை. அதற்குக் காரணம் அறியவேண்டுமென்றோர் அவா உண்டு," என்றார். அதுகேட்டு உள்ளங்கலங்கிய திருவள்ளுவர், "சோறு படைக்கும்போது சிந்துமாயின், அதனை ஊசியாற் கோத்துக் கிண்ணத்தில் கழுவி யுண்பதற்காக அவற்றை வைக்குமாறு பணித்திருந்தேன்; நீ ஒரு நாளும் சோறு சிந்தியதில்லை," என்றார். இச் சொற்களைக் கேட்டு மனவமைதி பெற்ற வாசுகியார்க்குச் சிறிதுபோதில் உயிர் நீங்கிற்று. அவர் பிரிவாற்றுமல் திருவள்ளுவர்,

75812
MADURAI UNIVERSITY LIBRARY

"அடிசிற் கினியாளே யன்புடை யாளைப்
படிசொற் பழிநாணு வாளை—அடிவருடிப்
பின்தூங்கி முன்னெழுந்த பேதையை யான்பிரிந்தால்
என்தூங்கும் என்கண் இரா"

என்று பாடி வருந்தினர்.

சிலநாட்களுக்குப்பின் வள்ளுவர், ஏலேலசிங்கனை நோக்கி, "இன்னும் சிலபோதில் யான் இவ்வுலகினின்றும் நீங்குவேன்," என்று கூறி, "யான் இறந்தபின் என் இருகால்களினும் வைக்கோற்புரியைக் கட்டி இழுத்துச் சென்று, இவ்வூர்க்கு வடக்கிலுள்ள காட்டில் எறிந்து விடுக," என்று சொன்னார். அவர் கூறியவாறே சில நாட்களுக்குப்பின் அவர் உயிர் உடலின் நீங்கிச் சென்றது. அங்கிருந்தோர் கூறியவற்றால் மனம் பேதுற்ற ஏலேலசிங்கன், அவர் உடலைத் திருமுழுக்காட்டி ஒரு தேர்மேல் வைத்து எடுத்தேகத் தலைப்பட்டான். உடனே திருவள்ளுவர் உயிர்த்தெழுந்து, "அவ்வாறு செய்வது கூடாது; யான் முன்பு கூறியவாறு செய்வதே வேண்டுவது," என ஏலேலசிங்கனைப் பணித்தார். அதுகேட்டு நடுக்கமுற்ற சிங்கன் ஒருவாறு தேறி அவர் பணித்தவண்ணமே செய்தான். அவர் உடலைத் தின்ற காகமும் கழுகும் விண்ணவராய் வீடுபெற்றன. அவர் உடல் தீண்டப்பெற்றவரும் உயர்மிக்க தேவ ராயினர்.

இச் செய்தியைக் கச்சிப்பதியில் இருந்த சிற்பி யொருவன் அறிந்து, அவரைப்போல் திருவுரு ஒன்றைச் செய்து திருமயிலையில் ஆகமமுறைப்படி நிறுவினான். அஃது இன்றும் யாவரும் கண்டு பரவிப் பணியுமாறு விளங்கிவருகிறது.

## திருவள்ளுவமாலை குறிக்கும் கதை :

திருவள்ளுவர் மதுரைச் சங்கத்தில் சங்கப் பலகை யேறித் தமது திருக்குறளை அரங்கேற்றத் தொடங்கி ஞர். அப்போது, அப்பலகையில் அவரோடு உட னிருக்கத்தக்கவர் யார் என்ற ஐயம், புலவரிடையே யுண்டாயிற்று. அப்போது வானொலி (அசரீரி) தோன்றி, "தெய்வத் திருவள்ளுவரோடு சங்கப்பலகைக் கண் உருத்திரசன்மர் உடனிருப்பாராக," என்றது. பின்பு, உருத்திரசன்மர் உடனிருப்ப, வள்ளுவர் தம் திருக்குறளை அரங்கேற்றினார்.

சங்கப் புலவருள் சீத்தலைச் சாத்தனார் என ஒருவர் இருந்தார். அவர் தவறுடைப் பாக்களைக் கேட்க நேரும் போதெல்லாம் தம் தலையிற் குத்திக்கொள்வது வழக்கம். திருவள்ளுவர் தம் திருக்குறளை அரங்கேற்றியபோது தான் அவர் தலையிற் குத்திக்கொள்ளாது மகிழ்ந்து கேட்டார்.

## ஞானாமிர்த உரை கூறும் கதை :

இந்திரதத்தன், வரருசி, யாளிதத்தன் என்ற மூவர், தம் வினைத்தொடக்கை வெல்வது குறித்து வேறுவேறு வகையிற் சென்றனர். அவருள் யாளிதத்தன் ஒரு சண்டாளப் பெண்ணைக் காமுற்றுக்கூடிப் பின் அவளைக் கிணற்றிலே தள்ளிவிட்டான். அவளை ஒரு பார்ப்பனன் எடுத்துச்சென்று ஆதரித்து வடநாட்டிற்குக் கொண்டு போனான். அந்நாட்டிற்குச் சென்ற யாளிதத்தன் அங்கே அப்புலைப் பெண்ணைத் தனக்கு ஏற்றவள் என மணம் செய்துகொண்டான். அவள் பெயர் ஆதி யென்பது. அவட்கு மக்கள் எழுவர் பிறந்தனர். அவ்வெழுவருள் திருவள்ளுவர் ஒருவர்.

கபிலரகவல் கூறும் கதை :

பகவன் என்பவர் ஓர் அருந்தவமுனிவர். ஆதி யென்பவள் கருவூர் என்னும் பெரும்பதியில் வாழ்ந்த ஒரு புலைச்சி. இவ்விருவர்க்கும் பிறந்தவர் கபிலர். இவரொடு ஆண்மக்கள் மூவரும் பெண்மக்கள் நால்வரும் பிறந்தனர். இவருள் உப்பையென்பாள் ஊற்றுக் காடென்னும் ஊரில் வண்ணார் வீட்டில் வளர்ந்தாள். உறுவை யென்பவள் மற்றோர் உடன் பிறந்தாள். அவள் காவிரிப்பூம்பட்டினத்தில் கள்விற்பவர் சேரியில் சான்றோர் ஒருவர் மனையில் வளர்ந்தாள். பெண்மக்களுள் ஒருவரான ஔவையார் பாண்சேரி ஒன்றில் பாணர் வீட்டில் வளர்ந்தாள். வள்ளியென்பாள் குறவர் வாழும் குறிச்சியொன்றில் வாழ்ந்த குறவர் கோமான் பெருமனை யில் வளர்ந்தாள். தொண்டைமண்டலத்துத் திருமயிலை யில் பறையர் மனையில் வள்ளுவர் வளர்ந்தார். வஞ்சி நகர்க்கண் இருந்த அதிகமான் இல்லத்தில் அதிகமான் வளர்ந்தான். திருவாரூரில் அந்தணன் ஒருவன் மனையில் கபிலர் வளர்ந்தனர்.

திருக்குறள் சிறப்புப்பாயிரங்கள் கூறும் கதை :

பகவனுடைய தந்தை சோழநாட்டு அந்தணர்களில் ஒருவன். பகவன் பிறந்ததும் அவன் நாட்குறிப்பை ஆராய்ந்த கணிகன், "பகவன் பிற்காலத்தே புன்குல மாது ஒருத்தியைக் கூடுவன்," என்றனர். மகனுக்கு உண்டாக இருக்கும் தீவினைக்குக் கழுவாய்நாடி, அந்த ணன் காசிக்குப்போனான். பதினைந்து ஆண்டுகட்குப் பின் பகவன், தன் தாயால் தன் தந்தை வடபுலம் சென்றிருந்த செய்திகேட்டுத் தானும் பிரமசரியம்பூண்டு வடநாடு நோக்கிச் சென்றான். சென்றவன் கருவூரை

யடைந்து ஆதியென்னும் புலைமகளின் பெண்மைநலம் கண்டு காதல்மிக்குக் கூடிப் பின் அவள் புலைமகள் என்பது தெரிந்து அவளைக் கைவிட்டேகினன். ஆனால், ஆதியென்பாள் அவனைவிடாது பின்தொடர்ந்தாள். அவன் உடனே ஒரு கல்லையெடுத்து அவள் நெற்றியில் புண்ணுண்டாமாறு எறிந்துவிட்டுப் போய்விட்டான். ஆதியோ, அவன் வருகைகுறித்து அறச்சாலை ஒன்றை நிறுவி நடத்திவந்தாள்.

வடபுலத்தில் தன் தந்தையைப் பலவிடங்களில் தேடியும் காணாத பகவன், மீளத் தன் சோழநாட்டுக்குத் திரும்பிவந்தான். வந்தவன் வழியில் கருவூரில் ஆதியின் அறச்சாலைக்கு வந்து சேர்ந்தான். அவனை ஆதி என்பவள் அறிந்து அடிபணிந்தாள். அவன் அவளது நெற்றிவடுக் கண்டு இன்னாளென அறிந்து முன்போல் அவளைக் கைவிட்டேகக் கருதினான். அவள், "இனி நீ நீப்பின் யான் உயிர் வாழேன்," என்றாள். அவன், "ஈன்றிடு மகவெலாம் ஈன்றுழி யேவிடுத், தூன்றிய துணிபொடு உடன்வர வல்லையேல், வருக," என்றான். அவளும் அதற்கிசைந்து அவனுடன் சென்றாள்.

இருவரும் செல்லுங்கால் வழியில் உப்பை, ஔவை உறுவை, வள்ளி யென்ற நான்கு பெண் மக்களையும், அதிகமான், வள்ளுவர், கபிலர் என்ற மூன்று ஆண் மக்களையும் பெற்றுவிட்டு நீங்கினர். அம் மகவுகள் அங்கங்கே கண்டோரால் வளர்க்கப்பட்டன. வள்ளுவர் மயிலாப்பூரில் வள்ளுவர் மனையில் வளர்ந்தார். பின்பு அவர் சிவதீக்கை பெற்றுச் சிவநெறி நின்று, பூவைசியர் மரபிற் பிறந்த வாசுகியாரை மணந்து இல்லறம்புரிந்து வருகையில் திருக்குறளை இயற்றினார்.

சைனரிடையில் வழங்கும் கதை :

கரமுண்டன் என்னும் வைசியனுக்கும் சீமதி யென்னும் அவன் மனைவிக்கும் மகனாகப் பிறந்தவர் ஏலாச்சாரி. அவரே திருக்குறளை இயற்றியவர். இவர் வடமொழியில் பிரகிருத மொழியில் பஞ்சாஸ்திகாய சாரம் முதலாக ஸாலம்மியபாகுடம் ஈறாக உள்ள ஐம் பத்திரண்டு சைன நூல்களும் வடமொழியில் தத் வார்த்த சூத்திரம், பதுமநந்தி பச்சீஸ் என்ற இரண்டு நூல்களும் தமிழில் திருக்குறளும் இயற்றினார். இவ ருடைய மாணவருள் திருவுள்ளம் நயினாரென்பவர் ஒருவர். இவர்கள் திருமயிலையில் வாழ்ந்துவந்தனர். ஏலாச்சாரியார் தாம் இயற்றிய திருக்குறளை மதுரைச் சங்கத்தில் அரங்கேற்றி அச்சங்கப்புலவர் செருக்கடங்கி வருமாறு திருவுள்ளம் நயினாரிடம் தந்துவிடுத்தார். அவர் சென்று அவ்வாறே செய்து போந்தார். பின்பு ஏலாச்சாரியார் வந்தவாசிக்கண்மையிலுள்ள பொன் னூருக் கருகிலிருக்கும் நீலகிரியில் முனிசங்கத்துடன் இருப்பாராயினர். திருவுள்ளம் நயினார் அரங்கேற்றிய தனால், தமிழர்கள் திருவள்ளுவநாயனார் திருக்குறளை இயற்றினார் எனக் கூறுகின்றனரென்பர்.

கேள்வி வழியாற் கூறப்படும் செய்திகள் :

1. பண்டைநாளில் பாண்டிநாட்டு மதுரைமா நகரில் இருந்த சங்கப்புலவர்கள் சிவபெருமானை இகழ்ந் தாராக, அப்பெருமான் அப்புலவர்களது செருக்கடங்கு மாறு பிரமனைத் திருவள்ளுவராகவும், திருமாலை இடைக்காடராகவும், கலைமகளை ஔவையாராகவும் மக்களாகத் தோன்றுமாறு பணித்தருளினார்.

2. பகவனார் பெருஞ்சாகரன் என்பவருக்கும் திருவாரூர்ப் புலைச்சி ஒருத்திக்கும் பிறந்தவர். ஆதி யென்பவள் தவமுனி யென்பவருக்கும் அருண்மங்கை யென்னும் பார்ப்பனப் பெண்ணுக்கும் மகளாகப் பிறந் தவர். பின்பு, அவள் உறையூர்ப் பெரும் பறையனால் வளர்க்கப்பட்டு மேலூர் அகரத்தில் நீதியையர் மனையில் வளர்ந்தாள்.

3 பகவன் ஆதியை முதற்கண். தான் காசிக்குப் போம்போது மேலூர் அகரத்தில் கண்டு அவளது இளமையை எள்ளி அடித்துத் துரத்தினான். பின்பு அப் பகவன் காசியிலிருந்து திரும்பி வருங்கால் அவளது பெண்மை நலம் கண்டு காமுற்று மணஞ்செய்து கொண்டான்.

4 திருவள்ளுவர் குழவிப்பருவத்தில் திருமயிலை யில் ஓர் இலுப்பை மரத்தடியில் பெற்றோரால் கைவிடப் பெற்றார். பிள்ளைப்பேறு குறித்துத் தவம் கிடந்த வேளாளன் மனைவி யொருத்தி அவரைக் கண்டு எடுத் துச்சென்று, தான் பெற்ற பிள்ளைபோல் வளர்த்து வந்தாள்.

5. "மரபறியாக் குழந்தையை வளர்க்கிறார்கள்," என்று ஊரார் பழிகூற, திருவள்ளுவரை வளர்த்த தாய் தந்தையர் அவரை ஒரு மாட்டுத் தொழுவில் தொட்டி லிட்டுக்கிடத்தி வளர்த்துவந்தனர். அறிவு வந்தபின் திருவள்ளுவர் ஒரு பனைமரத்தடியில் இருந்து தவம் புரிந்தனர். பின்பு திருமூலர் முதலிய சான்றோரோடு கூடித் தவம் செய்வாராயினர்.

6. காவிரிப்பாக்கத்தில் மார்க்கசகாயன் என்னும் வேளாளனொருவன் ஆயிரம் ஏர் வைத்துப் பயிர்

செய்யும் பெருஞ் செல்வமுற்று விளங்கினன். அவனுக்கு வேதாளமொன்றால் அடிக்கடி இடுக்கண் தோன்றிய வண்ணம் இருந்தது. அதனால் அவன் திருவள்ளுவரை யடைந்து குறையிரந்து நிற்க, அவர் அவனது காவிரிப் பாக்கத்துக்கு வந்து வேதாளத்தின் ஆற்றலைக் கெடுத் துத் துரத்தினார். அதுகண்டு வியந்த மார்க்கசகாயன் தன் மகள் வாசுகி யென்பாளைத் திருவள்ளுவருக்கு மணம் செய்துகொடுத்தான்.

வாசுகியைத் திருமணம் செய்துகொள்ளுமுன் திரு வள்ளுவர் வாசுகியிடம் மணலைத்தந்து சோறாகச் சமைக்குமாறு பணித்தார். அவரும் அவ்வாறே சமைத் துத் தந்தார். அதனால் திருவள்ளுவர் வாசுகியை மணஞ் செய்துகொண்டார்.

7. திருவள்ளுவர் திருமயிலையில் ஏலேலசிங்கன் என்னும் வணிகனொருவனிடம் நூல் பெற்று நெய்தற் றொழில் புரிந்துவந்தார். அந்நாளில், தேவர்கள், சிவனது ஆலங்காட்டு ஆடல் நலம் அறியவந்து அறிவுபெற்றுச் சென்றனர். ஏலேலசிங்கன் ஒருநாள் சிவபூசை செய்யுங் கால் தமது கருத்தைக் குப்பத்து வாணிகத்தில் செலுத்தி யிருந்ததைத் திருவள்ளுவர் கூறக்கேட்டு அவன் திரு வள்ளுவர்க்கு மாணவராயினன்.

8. ஒருகால் ஏலேலசிங்கர் தமக்கு மக்கட்பேறு வேண்டுமெனத் திருவள்ளுவரிடம் தெரிவித்து வருந் தினர். திருவள்ளுவர் "ஆண்டவன் அருளால் அஃது உண்டாம்," என மொழிந்தனர். சின்னாட்களில் ஆண்ட வன் ஒரு குழவியுருவாய் வந்து ஏலேலசிங்கர் முன் கிடந் தனர். ஏலேலசிங்கரும் அதனைத் திருவள்ளுவர்க்குக்

காட்டி ‘அழகானந்தன்’ எனப் பெயரிட்டு வளர்த்து வந்தார்.

9. ஒருகால் ஏலேலசிங்கருடைய கப்பல் கரை தட்டிவிடவே, திருவள்ளுவர் “ஏலேயா” என்று சொல்லி அதனை இழுக்குமாறு சொல்லித் தாமும் உடனிருந்து இழுத்தார். கப்பல் இனிது கரையடைந்தது.

10. மீன் வலைஞர் கொணர்ந்த பொற் கட்டியைக் கல்லென்று கருதிய ஏலேலசிங்கர் தமது மனையின் புறக் கடையில் இடச்செய்திருந்தார். அது பாசி நீங்கியதும் பொற்கட்டியாகத் தோன்றக்கண்டு வள்ளுவர்க்குத் தெரிவித்து உண்மை யுணர்ந்தார்.

11. அந் நாளில் வாழ்ந்த புலவர்கள் செய்கையால் நெடுங்காலமாய் மனத்துயரடைந்திருந்த அழகானந்தர் முதலியோர் வேண்டுகோளுக்கு இசைந்து திருவள்ளுவர் திருக்குறளைப் பாடியருளினர்.

12. மதுரையில் செருக்கடங்கிய புலவர்களும், உக்கிரப்பெருவழுதி யென்னும் பாண்டியனும் திருவள்ளுவரை வணங்கிப் பொதிகை மலைக்குச் சென்று அகத்தியர்க்குத் திருக்குறளைக் காட்டுமாறு கேட்டுக் கொள்ளவே, திருவள்ளுவர் திருக்குறளை அவர்க்குக் காட்டி அவரை மகிழ்வித்தனர்.

13. ஒருகால் கொங்கணரென்னும் சித்தரொருவர் வந்துகொண்டிருக்கையில், வானத்திற் பறந்து சென்ற கொக்கொன்று அவர்மேல் எச்சமிட்டது. அதனை அவர் வெகுண்டு நோக்கினராக, அக்கொக்கு உடனே எரிந்து சாம்பராயிற்று. பின்னர் அச் சித்தர் வாசுகியிருந்த மனைப்புறத்தே நின்று உணவு கேட்டார். அப்போது வாசுகியார் திருவள்ளுவர்க்கு உணவளித்துக்கொண்

டிருந்தமையால், புறத்தே வந்து உணவளித்தற்குச் சிறிது காலமாயிற்று. கொங்கணர் சினமுற்று, வாசுகியாரை உறுத்து நோக்கினர். வாசுகியார், அவர் திடுக்கிடுமாறு, "கொக்கென்று நினைத்தனையா, கொங்கணவா?" என்றார். கொங்கணர் நடுநடுங்கி அவரது கற்புமாண்பு கண்டு வணங்கினர்.

*14.* கொங்கணசித்தர் திருவள்ளுவர்பால் ஞானம் பெற்று, இல்லறம், துறவறம் என்ற இரண்டனுள் சிறந்தது காண விழைந்தனர். திருவள்ளுவர் அவரைத் தமது மனையின்கண் சிலநாள் தங்கியிருக்குமாறு பணித்தார். வாசுகியின் மனைமாட்சிகண்டு வியந்த கொங்கணர், "கற்புடைய மனைவி வாய்க்கின், துறவறத்தினும் இல்லறமே சிறந்த," தெனத் தேறிச் சென்றனர்.

*15.* ஒருநாள் திருவள்ளுவர் நெய்தற்றொழிலைச் செய்துகொண்டிருக்கையில் அவர் கையிலிருந்த குழல் கைந்நழுவிக் கீழே வீழ்ந்துவிட்டது. அதனை எடுப்பதற்கு விளக்கேற்றிக் கொணருமாறு திருவள்ளுவர் வாசுகியாரைப் பணித்தார். அவரும் அவ்வாறே செய்தார்.

*16.* திருவள்ளுவர் மாசித் திங்களில் உத்தரநாளில் மண்ணுலகை நீத்தனர்.

## திருவள்ளுவரது வரலாற்று ஆராய்ச்சி

**1.** பெற்றோர்

புலவர் புராணமும் கேள்விவழிச் செய்தியும், சிறப்புப்பாயிரங்களும் ஒருமுகமாகத் திருவள்ளுவருடைய தந்தை பெயர் பகவன் என்றும், தாய் பெயர் ஆதி யென்றும் கூறுகின்றன. ஞானமிர்தமென்னும்

நூலுரைமட்டில் திருவள்ளுவருடைய தந்தை பெயர் யாளிதத்தன் என்றும், தாய் ஆதிப்புலைச்சி யென்றும் கூறுகின்றது. புலவர் புராண முதலியவற்றை நோக்க, ஞானமிர்த உரை பழமையானது; ஆயினும், அது கூறும் செய்தி நாட்டில் பயில வழங்கவில்லை. மேலும், யாளிதத்தன் கதை, ஏனை வரருசி, இந்திர தத்தன் முதலியோர் கதைகளோடு விரவியே ஞானமிர்தத்துட் காணப்படுகிறது. இக் கதைகள், குணாட்டியர் என்பவரால் பைசாச மொழியில் எழுதப்பெற்ற பிருகற் கதையெனப்படும் பெருங்கதையில் அடங்கிய புனைந்துரைக்கதைகளாம் என்பது அதன் வடநூல் மொழி பெயர்ப்பால் விளக்கமுறுகின்றது. அன்றியும், ஞானமிர்தம் கூறும், "யாளி, கூவற்றூண்டும் ஆதிப்புலைச்சி காதற்காசனி யாகி மேதினி, இன்னிசை யெழுவர்ப் பயந்தோள்" என்ற அடிகளும் யாளிதத்தன் ஆதிப் புலைச்சியைக்கூடித் திருவள்ளுவரைப் பயந்தான் என்று கூறுகின்றில. அதன் பழையவுரையொடு கூடிய ஏடுகள் "எழுவரென்றது சுநந்தர் முதலிய எழுவரை" யென்று குறிக்கின்றன. ஞானமிர்த அச்சுப்பிரதியில் காணப் படும் உரைதான் "எழுவர் கபிலரையுள்ளிட்ட எழுவர்" என்று உரைக்கிறது. இதற்குரிய உரை வேறுபாடு சுநந்தர் முதலிய எழுவரென்பது, இந்த ஞானமிர்தத் துக்கும் திருவள்ளுவருக்கும் யாதோர் இயைபுமில்லை யென்றற்குப் போதிய சான்றாகிறது.

இனி, திருவள்ளுவருடைய பெற்றோர் பகவனும் ஆதியுமாவர் எனக் கூறும் பிறசெய்திகட்கு ஆதரவு ஒன்றும் இதுகாறும் கிடைத்திலது. திருக்குறளில் முதற்குறள், உலகிற்கு முதல் இது வென்றற்கு "ஆதி பகவன்" என்று கூறுவதுகொண்டு, ஆதியென்பது

தாயது பெயரென்றும், பகவனென்பது தந்தையது பெயரென்றும் கொள்ளப்படுகின்றன என்பர் சிலர். இவ்வாறு தம்மைப்பெற்ற தாய்தந்தையர் பெயர்களைக் குறிப்பாகவோ வெளிப்படையாகவோ குறித்தோதிய தமிழ் நூலாசிரியர் ஒருவரும் இலர். எனவே, அவ்வாறு ஓதுவது தமிழ்ச் சான்றோர் மரபன்று என்பது தெளிவாகிறது. அதனால், திருவள்ளுவரைப் பெற்ற தாய் ஆதி யெனவும், தந்தை பகவன் எனவும் கொள்வது ஆராய்ச்சியறிஞர் கொள்ளத் தகுவதன்றாம்.

இனி, கபிலரகவலும், புலவர் புராணமும், பிறவும் ஒருமுகமாகக் கூறுதல்கொண்டு, திருவள்ளுவருடைய பெற்றோர் பகவனும் ஆதியாருமாவர் என்று கொள்வதாயின், அஃது ஆராய்தற்குரியதேயாம். திருவள்ளுவர் காலத்தே ஆடவர் ஆதன் என்று பெயர்பெற்று வாழ்ந்ததுபோல மகளிர் ஆதியென்னும் பெயருடன், "ஆதி மந்தியார்" என்றாற்போல இருந்ததுண்டே யன்றி, பகவன் என்ற பெயர் தாங்கியிருந்ததில்லை. முக்கோலேந்தித் திரிந்த முனிவரைப் பகவர் என வழங்கியதுண்டு. இதனால், திருவள்ளுவருடைய தாய் பெயர் ஆதியார் எனல் பொருந்துமென்பதும், தந்தை பெயர் பகவனெனல் இயற்பெயராக அமையாதென்பதும் விளங்குகின்றன.

இனி, ஆதியாரைப் புலைச்சியெனவும், பகவனைப் பார்ப்பன அந்தணரெனவும் திருவள்ளுவர் வரலாறு பற்றிய குறிப்புக்கள் கூறக் காண்கின்றோம். முக்கோலேந்தித் திரிந்த துறவிகளாகிய அந்தணர்களைப் பகவரென்பது பண்டைநாளை வழக்கு. அதனால், பகவனை அந்தணரென்றல் ஒருவாறு அமையும். அரசர், வணிகர், வேளாளர், பார்ப்பனர் என்பாருள் யாவரும் துறவிக

ளாகியபோது அந்தணரெனப்படுவர். “அந்தணரென் போர் அறவோர்” எனத் திருவள்ளுவரே குறிப்பது காண்க. ஆகவே, பகவனாகிய அந்தணர் பார்ப்பன ராகத்தான் இருக்கவேண்டுமென வரைந்து கூறல் குற்றமாம். கபிலர் முதலிய சான்றோராகிய பார்ப் பனர் அந்தணராதலின், அவரைப் பயந்தவர் பகவன் எனப்படுதலின், பகவனை அந்தணன் எனப் பிற்காலத் தவர் கருதியிருக்கலாம். கபிலர் அந்தணரெனப் படற்கேற்ப மணமும் மகப்பேறுமின்றித் துறவு வாழ்வு வாழ்ந்தவர். பகவனாகிய பார்ப்பனரும் அந்தண ராயின், அவர் ஆதியை மணந்தாரென்றும், திருவள்ளு வர் முதலியோரைப் பெற்றாரென்றும், அருள் என்பது சிறிதுமின்றித் தாம் பெற்ற மக்களை ஆங்காங்குக் கைவிட்டேகினரென்றும் கூறப்படுவன அனைத்தும் பொய்யுரைகளாம்.

இனி, ஆதியாரைப் புலைச்சியென்பர். திருத்தகு தெய்வத் திருவள்ளுவரைப் பெற்ற பெறலருந் திருமிக்க அவ்வம்மையாரை, “மங்கையர்க்குத் தனியரசி எங்கள் தெய்வம்,” என மனமாரப் போற்றி வழிபடவேண்டிய கடமை தமிழ்ச் சான்றோர்க்கு உண்டாகிறது. அவ் வாறு செய்யாது, “புலைச்சி”யென இழித்துப் பேசுவதே வழக்காதலின், அவருக்கும் திருவள்ளுவர்க்கும் தொடர் பில்லை யென்பது தெளிவாகிறது. நலத்தின்கண் நாரின்மைகொள்வது குலத்துக்கு மாசு செய்வதென் பதைத் தெளியவுணர்ந்தவர் தமிழ்ச் சான்றோர்.

இனி, புலாலுண்போர் அனைவரும் முற்காலத்தே நூலோரால் புலையரெனப்பட்டனர். புலாலுண்ணும் ஒருவனைப் புலையன் எனவும், புலாலுண்ணும் ஒருத்தி

யைப் புலைச்சியெனவும் வழங்குவர். "பொல்லாப் புலாலை நுகரும் புலையரை" (திருமந். 199) எனத் திருமூலர் கூறுவது காண்க. பண்டைநாளில் பார்ப்பார் முதலிய பலரும் புலால் உண்டனரென்பது ஆராய்ச்சியாளர்க்குத் தெரிந்த செய்தியாகும். அங்ஙனமாக, ஆதியாரைமட்டில் புலைச்சியென்று கூறுவது பொய்யாம். இவ்வாற்றால், ஆதியாகிய புலைச்சியைத் திருவள்ளுவர் வரலாற்றில் இணைத்துரைப்பது பெருங்குற்றமாம்.

இவ்வாறே, திருவள்ளுவரைப் பெற்ற தாய்தந்தையர் தாம் பெற்ற மக்களை ஆங்காங்கே அன்பின்றிக் கைவிட்டுச் சென்றனரென ஒரு குறிப்பும் கூறப்படுகிறது. அவ்வண்ணம் செய்யக்கூடிய வன்கண்மை எத்தகைய தாயர்பாலும் எளிதிற் காணக்கூடியதன்று; பகவனும் ஆதியாரும் கொண்ட பொருந்தா மணத்தைப் புனைந்தோர், தீநெறியில் மகப்பெற்றோர் செய்யும் இச்செயலை இவர்கண்மேலேற்றிப் படைத்து மொழிந்துள்ளனர் எனக் கொண்டொழிவது தவிர, இதனை உண்மையெனக் கொள்ளுதற்கு இடம் இல்லை.

## 2. உடன்பிறந்தார்

இனி, திருவள்ளுவரையுள்ளிட்ட எழுவர் இத் தாய்தந்தையர்க்குப் பிறந்த மக்கள் என்பது திருவள்ளுவர் வரலாற்றிற் காணப்படும் குறிப்பாகும். அவ்வெழுவரையும் நோக்குங்கால், இக்குறிப்பைப் படைத்து மொழிந்தோர் இலக்கிய அறிவோ கால வுணர்வோ சிறிதுமில்லாத வெளிற்றறிவினரென்பது தெளிவாகிறது. ஔவை, வள்ளி, அதிகமான், கபிலர் என்போர் சங்க இலக்கியங்களிற் காணப்படும் சான்றோராவர்.

இவர்களது வரலாறும் ஓரளவு கற்றோரனைவர்க்கும் இனிது தெரிந்திருக்கிறது. அது காண்போர், இவர்களை ஒரு தாய் வயிற்றிற் பிறந்தவர்கள் என ஒருகாலும் உடன்படார்.

மேலும், திருவள்ளுவருடைய மதிநுட்பத்தையும், உலகியலறிவையும் நோக்கின், இவர் ஒரு செல்வக்குடியில் பிறந்து வளர்ந்து செந்தமிழ்வளம் சிறக்கப்பெற்றவர் என்பது தெளிவாக விளங்குகிறது. எல்லாச் சான்றோர்களும் இவரைத் திருவள்ளுவரென்றே வழங்கியுள்ளனர் இலக்கண வுரைகாரர்கள், 'வள்ளுவன்' என்பது இவரது இயற்பெயரென்றே கருதுகின்றனர். ஆகவே, வள்ளுவரென்பது இவர்க்குத் தாய்தந்தையரிட்ட இயற்பெயரென்றும், இவருடைய ஒப்புயர்வற்ற புலமை நலங்கண்டு வியப்புக்கொண்ட சான்றோர், திருவள்ளுவரெனவும் 'தெய்வப்புலவன் திருவள்ளுவன்' எனவும் பாராட்டிச் சிறப்பிப்பாராயினரென்று அறிதல் வேண்டும்.

### 3. ஊர்

இனி, திருவள்ளுவரது ஊர் திருமயிலை (மயிலாப்பூர்) என்பது பெரும்பான்மையான வழக்கு. சைன சமயத்தவர் இடையில் வழங்கும் கதையும் திருமயிலையைக் குறிக்கிறது; திருவள்ளுவமாலையொன்றுமே இவரது இடம் மதுரையெனக் குறிக்கின்றது. இதற்கேற்பவே, திருவள்ளுவர் நூற்கு உரைகண்ட பரிமேலழகர் தொண்டைநாட்டினரெனக் கண்ட தொண்டைமண்டல சதகம், "திருக்காஞ்சிவாழ் பரிமேலழகன் வள்ளுவனார்க்கு வழிகாட்டினான் தொண்டைமண்டலமே" (41) என்று கூறி, வள்ளுவனார்க்கும்

இடம் இத் தொண்டைநாடே என எடுத்தோதுகின் றிலது. திருமயிலை தொண்டைநாட்டின் கண்ண தோரூர் என்பதை,

"கயிலையும்* கச்சியும் விற்கோல மும்நற் கழுக்குன்றமும்
பயில்வலி தாயமும் பாசூரு மச்சிறு பாக்கமுநல்
லயிலையும் வல்லர் திருவொற்றி யூரு மரசிலியும்
மயிலையும் ஈசன் மகிழ்ந்ததன்றோ தொண்டை மண்டலமே."

என்று குறித்தோதுகிறது. திருமயிலையில் உள்ள திருவள்ளுவர் கோயிலும் பிற்காலத்தே கட்டப்பெற்ற தென்பதை முன்பே கூறினோம். இவ்வாற்றால், திருவள்ளுவர்க்கு ஊர் திருமயிலை எனக்கூறுவது ஒரு தலையாகத் துணிதற்கில்லாமையும், எனவே, திரு வள்ளுவமாலை கூறுவதே வலியுறுவதும் காணப்படு கின்றன.

4. மனை வாழ்வு

இனி, திருவள்ளுவர் வாசுகி யென்பவரை மணந்து இல்லறம் புரிந்துவந்தனரென்ற செய்தி, மேற்கூறிய கேள்விவழி வரலாற்றிலும் ஏனைப் புராண முதலிய வற்றிலும் ஒப்பக்கூறப்படுகிறது. ஆதியார் பகவனார் என்னும் பெயர்களை நோக்க, வாசுகி யென்னும் பெயர் ஆராய்ச்சிக்குரிய தொன்றாகிறது. வாசுகி யென்னும் வடமொழிப்பெயர், அந்நாளில் தமிழ்நாட்டில் வழங்கிய தமிழர் பெயராகத் தோன்றவில்லை. வடவரும், அவரது வடமொழியும் விரவியிருந்த காலத்தே திருவள்ளுவர்

---

* இச்சதகத்துள் "கயிலை" யென்றது திருக்காளத்தியையாகும்; திருக்காளத்திமலை கயிலைமலை யெனவும் வழங்குவ துண்மையின் (A. R. No. 160 of 1922), ஈண்டுக் காளத்தி கயிலையெனக் குறிக் கப்பட்டதென அறிக.

வாழ்ந்தாராயினும் வடமொழிப் பெயருள் வாசுகி யென்பது போலும் பெயர் மக்கட்கு வழங்கியதில்லை. தம்மை வடவராகக் கருதி யொழுகும் இந்நாளைய பார்ப்பனரும் தாம் தமக்கு வடமொழிப் பெயரையிட்டு வழங்கிய வழக்கம், நாயக்க மன்னர் ஆட்சியிற்றான் பெருகிற்றென்பதைப் பல்லாயிரக்கணக்காக எடுக்கப் பட்டிருக்கும் தென்னாட்டுக் கல்வெட்டுக்கள் எடுத்தோதுகின்றன. பார்ப்பனரும் கி. பி. பதினைந்து பதினாறும் நூற்றாண்டுவரையில் வடமொழிப் பெயரைப் பெரிதும் தமக்கு இட்டு வழங்காதிருந்தனராக, பார்ப்பனரல்லாதாராகிய திருவள்ளுவரும் பிறரும் தம் மகளிர்க்கு வடமொழிப் பெயரிட்டு வழங்கினரெனக் கூறுவது உண்மையுரையாகாது. ஆகவே, திருவள்ளுவர்க்கு மனைவியார் ஒருவர் இருந்தனரென்பது உண்மையாயினும், அவர் பெயர் வாசுகி யென வழங்கிற்றென்பது பொருத்தமன்றென்று காண்கின்றோம். இவ்வாறே, வாசுகியார் தந்தை பெயர் மார்க்கசகாய முதலியாரென்பதும் முழுத்த பொய்யுரையாகிறது. காவிரிப்பாக்கத்துக்கு மேற்கில் பாலாற்றின் கரையில் இருக்கும் விரிஞ்சிபுரத்துக் கோயிலிலுள்ள இறைவனை அங்குள்ள பழங் கல்வெட்டுக்கள் வழித்துணை நாயனாரென்றும், பிற்காலக் கல்வெட்டுக்கள் மார்க்கசகாயீச்சுர ரென்றும் குறிக்கின்றன. மார்க்கசகாயனென்ற இறைவன் பெயர் நாட்டில் வழங்கிய பிற்காலத்தே மக்கள் தமக்கும் மார்க்கசகாயனெனப் பெயர் கொண்டிருந்தனராதலால், அப் பெயருடையார் ஒருவர், திருவள்ளுவர் காலத்தே இருந்தாரென்பது பொருந்தாது. காவிரிப்பாக்கத்தின் பழம் பெயர் காவிதிப்பாக்கம் என்பதையும் ஈண்டு நினைவுகூர்தல் வேண்டும். இதனால் மார்க்கசகாயர்

வரலாறும் பிறவும் அவர் பெயர்போலப் பிற்காலத் தெழுந்த புனைந்துரை யெனக்கொள்வதே பொருத்தம்.

திருவள்ளுவர் கற்புடைய மனைவியாருடன் கூடி வாழ்ந்து வருகையில் நெசவுத்தொழில் புரிந்துவந்தா ரென்று கூறி, "இழைநக்கி நூல் நெருடும் ஏழை யறிவேனோ," என அவர் தம்மைக் கூறுவதாகச் சொல் லும் வெண்பாவை அதற்குச் சான்றாகக் காட்டுவது உண்டு. ஆனால், அத்தொழில் பற்றிய குறிப்பொன்றும் அவரது நூலிற் காணப்படவில்லை. உழவு, வாணிபம், அரசியல், அமைச்சியல், தூதுபோதல், போர் செய்தல், மறையோதுதல் முதலிய தொழில்களை ஆங்காங்குக் கூறுவதுபோலவேனும் தமது நெய்தற்றொழிலை அவர் குறித்திலர். ஆதலால், அவர் நெய்தற்றொழிலைத்தான் தமது தொழிலாகக் கொண்டிருந்தாரெனக் கூறுதற்கு இடமில்லை.

திருவள்ளுவர் கற்புறு பொற்புமிக்க மனைவியா ரொடுகூடி இல்லிருந்து நல்லறம் புரிந்துவருகையில், தமிழ் நாடும் தமிழ் மக்களும் உய்தல் வேண்டி, தாம் தம் நல்லறிவுகொண்டு ஆராய்ந்த நன்னூற் பொருள் அனைத்தையும் நன்கு தெளிந்து உலக வாழ்வில் அவ்வப் போது கண்ட அரிய காட்சிகளையும் தேர்ந்து, யாவர்க் கும் ஒப்பப் பயன்படத்தக்க நூலியற்ற வேண்டுமென்ற கருத்தால் உந்தப்பெற்றுத் தெய்வத் திருக்குறள் நூலைச் செய்தாராதல் வேண்டும்.

### 5. நூலியற்றல்

இவர் காலத்தே மக்கள் கூட்டத்தில் கடவுள் உண்மையும், வினைத்தொடர்பும், இறைவன் திருவடி யடைவதே வீடுபேறென்னும் வீடுபேற்றுணர்வும்

துறக்க நரகங்கள் உண்டென்னும் கொள்கையும் பிறவும் நிலவின. வேதியர் மறையும் துறவியர் துறவு நெறியும் விரவியிருந்தமையின், இவர்காலம், வடவரது வேதநெறியும் தமிழரது சைவநெறியும் கலந்த திருநெறி ஒருமருங்கும், புத்த சமணர்களின் புதுச் சமய நெறி ஒருமருங்கும் நிலவிய காலமாகும். இரண்டன்பயிற்சியால் மக்கள் கூட்டம் உலகியலில் சீரிய நாட்டம் பெருது சீர் குலேவதாயிற்று. வைதிகநெறியினர், பிறப்பில் உயர்வு தாழ்வும், உலகியலில் நிலேயாமைக் குறிப்பும், உலக வாழ்வில் வெறுப்பும் பிறவும் கற்பித்து, மக்களே உலகியற்பொருளே ஆராய்தற்கும், மக்களிடையே ஒருமையுணர்வு தோற்றுவித்து ஒற்றுமையொடு வாழ்தற்கும் ஊக்கங்கொள்ளாது வேறுவேருகப் பிரிந்து கெடுதற்கு உலேவைத்தொழுகினர். புத்த சமணர்கள், கொல்லா நோன்பும் வாழ்க்கையிற் பற்றின்மையும் பெருங் கொள்கைகளாக எடுத்தோதி, அரசியல், சமுதாயம், பொருளீட்டல் முதலிய துறைகளில் மக்கள் கருத்து ஈடுபடாத நிலேயினே யுண்டுபண்ணினர். இதன்விளேவே களப்பிரரும் பல்லவரும் பிறரும் நாட்டில் நுழைந்து அரசியலேக் கைப்பற்றித் தமிழரது தொன்மை வரவு கெடுத்தற்கு இடம் செய்தது எனின் அது தவருகாது.

பற்றுக்கொண்டு செய்யும் இல்வாழ்வு துன்பத்துக்கு ஏது; “புத்தேளுலகம் புதல்வரும் தாரார்,” என்பது புத்தர்களின் பொருளுரையாகும்.

இத்தகைய கொள்கைகளேக்கேட்ட தென்ளுட்டவர், இவற்றை மேற்கொண்டு ஒருமை நோக்கம் பெருது தலேதடுமாறலாயினர். புதுமைக்கு அடிமையாகும் புன்மை தமிழ் மக்கள்பால் இருப்பதுகண்டு மனம் வருந்திய திருவள்ளுவர், உலகியற்குப் பொரு

ளாவன அறமும் பொருளும் இன்பமும் எனப் பண்டை யோர் உரைத்த உறுதிப் பொருள்களையே மீளவும் எடுத்துத் தொகுத்தும் வகுத்தும் விரித்தும் உரைக்க வேண்டிய கடமை அறிவுடைய சான்றோர்க்கு உளதா வதை நன்கு உணர்ந்தார். உலகியலில் செய்யும் நல் வாழ்வே வீடுபேற்றுக்கு வாயிலாம் என்பதை வற் புறுத்த விழைந்தார்; வையத்துள் வாழ்வாங்கு வாழ்வது வானுறையும் தெய்வவாழ்வாம் என்பது பழந்தமிழரது வாழ்க்கைக் குறிக்கோள். இதனையே பல்லாற்றானும் எத்திறத்தோரும் விழைந்தேற்கும் வண்ணம் நூல் செய்வாராயினர். இவ்வுண்மையினை நன்கு ஆராய்ந்து கண்டே கல்லாடனார் என்பார், "சமயக் கணக்கர் மதி வழி கூறாது, உலகியல் கூறிப் பொருளிது வென்ற வள்ளுவன்," என்று விளக்கினர். ஏனையோரெல்லாம் இவ்வுலகியலைக் கருவியாகக்கொண்டு தத்தம் சமயக் கருத்தினையே வற்புறுக்க முயன்றனர்.

உலகியலை, அறம், பொருள், இன்பம் என்ற மூன்று குறிக்கோளின்கண் வைத்து ஆராய்ந்த முதன்மை தொல்காப்பியர்க்குரித்து. அதனைப் பயன்படவுணர்ந்து உண்மையுணர்வால் மக்கட்கு வகுத்தும் விரித்தும் உரைத்த உயர்நிலைப்பெருமை திருவள்ளுவர்க்கே யுரியது. இவர்போல் உலகியற்பொருளை இவ்வண்ணம் வகுத்தும் விரித்தும் உரைத்த அறிஞர், இப்பரந்த மண் ணுலகில் எவருமே இலர் என்பதை யாவரும் ஒப்ப வுரைக்கின்றனர்.

## 6. திருக்குறள் தனித்தமிழ் முதனூல்

இனி, உலகில் காணப்படும் நூல்களுள் மிகவும் பழமையானது வேதம் என்பர். "உலகியல் வேதநூல்

ஒழுக்கம்'' என்றனர் சேக்கிழார். அதுவும் உலகியலைக் கன்மமும் ஞானமும் என இரண்டாக வகுத்தோதுவ தாகக் கூறுவர். ஆனால், உலகியலில் உயிர்கள் செய்தற் குரியது அறம்; அதனால் செய்யப்படுவது பொருள்; அதனால் அவ்வுயிர்கட்குளதாகும் பயன் இன்பம் என்று வகுத்தோதும் அறிவுடையியல்பு வேதத்துக்கும் கிடை யாது என்பர்.

இத் திருக்குறள் நூல் அமைந்துள்ள முறை வேறே எம்மொழியினும் காணப்படவில்லை; ஆகவே, இதன் அமைப்புத் திருவள்ளுவர் தாமே படைத்துக்கொண்ட தொரு தனித்த உண்மை முறையாகும். நிலவுலகில் அறிவுடை மக்கள் காணும் உயிர்க்கொள்கை பலவும் இதன்கட் காணப்படும்; ஆனால், இத் திருக்குறளின் கண்ணுள்ள கொள்கைகள் பல பிற எந்நாட்டு எம் மொழி நூலிலும் காணப்படுவதில்லை. இதுவே இதற் குள்ள தனிமை நலமும் பெருமை நலமுமாகும்.

இனி, தமிழ்நாட்டுத் தமிழ் மக்களுடைய தனி நிகழ்ச்சி வரலாறுகட்கும், உண்மைகட்கும், தமிழர் ஊர்கட்கும் தனிமையும் தொன்மையும் உண்டென்பது அறியாது, வடவர்நாட்டு வடவர் வடமொழிக்கண் தொடக்கும் தோற்றமும் நாடி அலமரும் கீழ்மை இடைக்காலத்தே எங்ஙனமோ உண்டாயிற்று. தமிழ்நாட்டு மூதூர்க ளான மதுரை, தில்லை, திருவண்ணாமலை, திருவேங்கடம், திருக்காளத்தி முதலியவற்றின் தொன்மை வரலாறும், தமிழ்நாட்டுத் தமிழ் மக்கள் நிகழ்ச்சி வரலாறுகளான சிலப்பதிகாரம், திருத்தொண்டர் புராணம் முதலியவற் றுக்கும் வடமொழியில் தொடக்கமும் தோற்றுவாயும் கண்டுரைப்பவர் உளராயினர். 'அரசமரத்தைப் பிடித்த சனி, அதன்கீழ் இருந்த ஐங்கரனையும் பிடித்த'தென்பது

போல, மிகப் பழந்தமிழரது தொன்னூல்களான திருக்குறளுக்கும் தொல்காப்பியத்துக்கும் "வடமொழி மூலம்" கண்டு, இலதாகியதனுல் பொய்யேனும் புனைந்து கூறும் புன்மை நாட்டில் உண்டாகிவிட்டது. அதனுல் விழுங்கப்பட்டோர் பலர், திருவள்ளுவர் முதலாயினேர்க்குப் பொய் வரலாறு புனைந்ததோடு நில்லாது, திருக்குறள் பர்த்துருஹரி, நீதி சதகம், பகவற்கீதை, மனுமிருதி, கௌடிலியர் அருத்தசாத்திரம், சுக்கிரநீதி, காமந்தகம் முதலிய வட நூல்களின் மொழிபெயர்ப்பென்றும் கூறுவர்.

தமிழ் வாழ்வின் தனிப்பயனுய்த்தோன்றித் தமிழ்ப் புலமை சிறந்து தமிழ் நினைவு தமிழ்ச் செயல்களைத் தமிழுள்ளத்திற் கண்டுரைத்த தமிழ்த் தனிமகனுரான திருவள்ளுவர், தங்காலத்து வழக்கும் செய்யுளும் ஆகிய இரு பெருந் தமிழ்க் கடல்களையும் நுண்மாண்புலமையென்னும் மத்தினைக்கொண்டு கடைந்தெடுத்த தனிப் பெருந் தமிழமுதம் இத் தண்டமிழ்த் திருக்குறள் என்பது யாவரும் உள்ளக்கிழியில் உருவுபெறப் பொறித்துக்கொள்ளவேண்டிய உண்மையாகும்.

திருக்குறள் என்னும் அரிய அறநூல் உலகியலுக்குரிய பெரு நூலாகும். உலகியலில் கூறுதற்குரிய பெரிய பொருள்கள் பலவற்றினும், அறம், பொருள், இன்பம் என்ற மூன்றினும் பெருமைமிக்க பொருள் வேறே கிடையாது. வீடுபேறும் இம் மூன்றன் ஏதுவாகப் பெறப்படுவதேயன்றி, இம் மூன்றுனுமே எய்தப் படுவதுமாகலின், பெருமை யென்பது இம் மூன்றுக் குமே உரியதென்பது தேற்றம். ஆகவே, எவ்வகையினும் அற முதலிய மூன்றுமே பெருமைக்கு உரிமை

கொண்டு நிற்றலின் அம் மூன்றனையும் விளக்கும் நூலது பெருமைக்கு வேறே எம்மொழி எந்நூலும் இணையாகாதாகலின், இதுவே எல்லாப் பெருமைக்கும் உரித்தாய்ப் பெருநூல் எனப்படுவதாயிற்று.

பெருநூல்களை யாத்தற்குப் பெருமை மிக்க வழிகள் பல உண்டு. பெருமையைப் பெரிதாய்க் காட்டுவதை விட, அப் பெருமை நலம் சிறிதும் குன்றுதவகையில் சிறுமைக்கண் அடக்கிப் பலர்க்கும் தெரியப்பண்ணுவது தான் புலவரது சீர்த்த புலமைச் செயலாகும். மேலும் பெருமைப் பொருளைப் பெருநெறிபற்றி உணர்த்த லுறின், அப் பெருநெறி தேறி நுனித்துணரும் அறிவுப் பெருமையுடையார்க்கே அந் நூல் உரியதாய்விடும். நூற் பொருள், பெரியோர் சிறியோர் அனைவோர்க்கும் பொதுவாதலால், சிறுமையறிவினரான மக்கள் பலரும் அறிதற்காகவே, பாக்களுட் சிறுகியதும் குறுகியதுமான குறட்பாக்களால் இந்நூலை ஆசிரியர் திருவள்ளுவர் யாத்திருக்கின்றார்.

7. நூற்பெயர்

இவ்வாறு, குறும்பாவாகிய குறட்பாவால், பெரும் பொருளையுணர்த்த வந்தவர், குறள் என்றே நூலுக்கும் பெயர் குறித்திருக்கின்றனர். நூற்பெயர் விளங்கப் பெயர் குறித்திலர். உலகில் நிலவும் பெரும்பொருளை யெல்லாம் ஒருவழியால் இனிது எளிது விளங்கக்கூறுவ தால், நூற்பொருளை யுள்ளடக்கிய பொதுப்பெயரொன் ருல் சுட்டிக்கூறல் அமையாமைபற்றி, கருவியாகிய குறட்பாவின் பெயரால் நூலைக் குறித்திருப்பது நோக்கத்தக்கது. இதன்கட் கூறப்படும் அற முதலிய பொருள்கள் ஒன்றற்கொன்று ஏதுவும் பயனுமாய்

இயைந்து பிரிப்பற நிற்றலால், இம்மூன்றையும் தொகுத்துச் சுட்டவல்லதொரு பொதுப்பெயர் இதற்கு எய்தா தாயிற்று. அறநூல் என்று பெயர் குறித்தால், அது பொருளையும் இன்பத்தையும் சொன்ன மாத்திரத்தே கேட்டார் மனத்துட் கிளர்ந்து எழுவிக்கும் வன்மை யுடையதாகாது ; ஏனைப்பொருணூல், இன்பநூல் என்று குறித்த வழியும் அதுவே முடிவாகும். இனி, ஒழுக்கநூல் என்ற வழி, அது, வழக்கு, தண்டம் என்பனவற்றையும் சுட்டாதாகின்றது ; இந் நூற்கண், வழக்கும் தண்டமும் ஆங்காங்குப் பொதுவகையில் கூறப்படுகின்றன. உலகியல் நூல் என்றக்கால், அதனோடியைத்துக் காணப்படும் அறிவுநூல் என்பதனின் நீங்கித் தனிமையுறும்; இஃது அறிவுநூலுமாதலின், சிறப்புடைய ஒன்றன் பெயரால் வரைந்து கூறுவதும் குன்றக் கூறலாகின்றது. இவ்வாறு எல்லாமாய் அல்லதுமாய் உள்ள பொருள்வகை எல்லாவற்றையும் சுட்டிவரும் இந்நூற்குப் பொருளியல்பு காட்டும் பெயர் ஒன்று கிடைத்தல் அரிதாதல் கண்டே, ஆசிரியர், குறட்பாவாகிய கருவியினாலேயே குறள் என்னும் பெயரால் வழங்கினரெனக் கொள்ளல்வேண்டும். திருவள்ளுவரது தெய்வப் புலமையின் விளைவாகத் தோன்றிய சிறப்புப்பற்றிச் சான்றோர் இக்குறணூலைத் திருக்குறள் என்று பாராட்டுவாராயினர்.

இனி, இத் திருக்குறளை அறத்துப்பால், பொருட்பால், இன்பத்துப்பால் (காமத்துப்பால்) என்று மூவகைப்படுத்து, ஒவ்வொன்றினையும் சில பல அதிகாரங்களாக வகுத்து, அதிகாரம் ஒவ்வொன்றினையும் பப்பத்துக் குறட்பாக்களால் கூறிச்செல்கின்றார். பப்பத்தாக நிற்கும் குறள்களும், எடுத்துக்கொண்ட பொருட்கு

இலக்கணம் கூறுவதும், ஏதுவும் பயனும் கூறுவதும், பொருளியல்புரைப்பதும், விதிப்பதும், மறுப்பதும், சில பொருள்களைத் துணை யென்பதும், சிலவற்றை அணி யென்பதும், சிலவற்றைப் படை யென்பதும், முறை செய்வதும், முன்பின் நோக்கி வலியுறுத்துவதும், நூலோர் முடிபென்பதும், சான்றோர் மேல்வைத்துக் கோடற்பான்மை காட்டுவதும், உவமை வகையாற் சில வற்றை விளக்கலுற்று, பொருளையே உவமம் செய் வதும், ஏனையவற்றை உவமம் செய்வதும், உருபு விரித்து உவமிப்பதும், உவமையும் பொருளும் ஒருங்கு வைத்து உருவகம் செய்வதும், ஒட்டு, வஞ்சப் புகழ்ச்சி முதலிய அணியுறக் கூறுவதும், வியப்பு, வெகுளி முதலிய மெய்ப்பாடு தோன்றக் கூறுவதுமாகிய பல வகையால் இயன்றுள்ளன.

இனி, அறத்துப்பாலுள் அடங்கிய அதிகாரங்க ளுட் சிலவற்றைத் தொகுத்துப் பாயிரமெனவும், இல் லறவியல், துறவறவியல் எனவும், பொருட்பால் அதி காரங்களை வகுத்து, அரசியல், அங்கவியல், ஒழிபியல் எனவும், இன்பத்துப்பாலிற் காணப்படும் அதிகாரங் களை, களவியல் கற்பியல் எனவும் வகுத்தடக்கிக் கூறினர் என்பர். இவ்வியல் வகுப்புக்கள் ஒரு நெறியாக வன்றி வேறு வேறு வகையாக வகுத்துக் கூறப்பட் டுள்ளன எனத் திருவள்ளுவமாலை தெரிவிக்கிறது. மணக்குடவர் உரையில் இவ்வியல் வகுப்பு வேறுபடு கிறது. இதனால், இயல் வகுப்புமட்டில் ஆசிரியர் திரு வள்ளுவனார் கொண்டதன்று என்பது தெளிய விளங்கு கிறது. அதிகாரங்களின் வைப்புமுறை மட்டில், பரிமே லழகர், மணக்குடவர் முதலியோரது தொகுப்பில் வேறு பாடின்றி ஒப்ப நிலவுவதால், அம்முறை, ஆசிரியரே கண்டுரைத்ததெனக் கொள்ளலாம்.

அறிவு, விழைவு, செயல் என்ற மூன்றும் உயிர்கட்குரிய பண்புகளாகும். அவற்றுள் அறிவு பொருட்பேற்றுக்கும், விழைவு இன்ப நுகர்ச்சிக்கும் செயல் அறஞ்செய்தற்கும் பயனுகும். இப்பண்பும் பயனும் கொண்டு இன்பமே நாடிநிற்பதுபற்றி, பொருளதிகாரத்து இன்பத்திணையின் இயல்பு கூறப்புகுந்த தொல்காப்பியர் "இன்பமும் பொருளும் அறனும்" என முறை செய்து கூறினுர். அறத்தான் வருவதே இன்பம்; பொருளிலார்க்கு இவ்வுலகில் இன்பமில்லை என அறமும் பொருளும் இன்பப்பேற்றுக்கு ஏதுவாதலைத் திருவள்ளுவர் செயல்முறையிற் கூறுகின்ருர்; அதனுல் அறத்துப்பாலை முதற்கண்ணும், பொருட்பாலை இடையிலும், இன்பத்துப்பாலை முடிவிலும் முறை செய்துவைத்து முப்பாலாகிய திருக்குறளை உரைத்துள்ளார். இனி, பரிமேலழகர், இம்மை மறுமை வீடு என்ற மூன்றையும் பயப்பதுபற்றி அறம் முதலிலும், இம்மை மறுமை என்ற இரண்டையும் பயப்பதுபற்றிப் பொருள் இடையிலும் இம்மை யொன்றே பயப்பதுபற்றி இன்பம் இறுதியிலும் வைக்கப்பட்டன என்பர்.

## 8. அரங்கேற்றம்

இனி, இத் திருக்குறள் நூல் மதுரையில் இருந்த சங்கத்தில் அரங்கேற்றப்பட்டதென்றும், அக்காலத்தே இந் நூலை ஏற்க மறுத்த சங்கப்புலவர், இத் திருக்குறட்கு இடந்தருமுகத்தால் சங்கப்பலகையால் தெருட்டப்பட்டனரென்றும் கூறப்படும் செய்தியும் பிற்காலத்தோர் புனைந்துவிட்ட பொய்யுரையே. நல்லதன் நலத்தை உள்ளவாறு காணும் உரவோரே புலவரெனப் படுவராகையால், அவர் கூடிய பேரவையில் திருவள்ளுவர்

முதற்கண் புறக்கணிக்கப்பட்டா ரென்றற்கு அச் சங்கச் சான்ருேர் செய்துள்ள பாட்டுக்களின் தொகுதிகளாகக் காணப்படும் தொகைநூல்கள் ஆதரவு தருவனவாக இல்லை.

9. இறுதிநிலை

முப்பால் வழங்கி முழுதுலகும் தொழுதேத்தும் மூவாப் புகழ்பெற்ற முதற் புலவரான திருவள்ளுவனூர், பின்பு, ஏலேலசிங்கர் என்னும் செல்வர் தொடர்பு பெற்று மனையறம்புரிந்துவந்தனர் என்ற செய்தி பொது வாகக் கூறப்படுகிறது. அவன் இவர்பால் மாணவனுய் அறங்கேட்டான் என்பாரும், இவர் அவன்பால் நூல் பெற்று நெசவுத்தொழில் புரிந்தார் என்பாரும் பல திறத்தர் உளர். இவை எத்துணை யுண்மையானவை என்பது அறியக்கூடாததாயினும், இருவர்க்கும் தொடர்பு இருந்ததெனக் கொள்வதில் குற்றமில்லை. திருவள்ளுவர்க்கு மக்கட்பேறு உண்டோ இல்லையோ என்று கூறத்தக்க வகையில் அவர் வரலாறு விளக்க மின்றியுளது. திருக்குறளை நோக்குமிடத்து அவர்க்கு மக்கட்பேறு உண்டெனத் தெளிதற்கு இடமிருக்கிறது. அவர்கள் திருவள்ளுவர்போல் பொன்ருப் புகழ் பெறும் பேறு இலராக இருக்கலாம்.

திருவள்ளுவர் விண்புகுவதற்கு முன்பே அவர் மனைவியார் தம் பூதவுடம்பு நீத்தனரென அவர் வரலாறு கூறுகிறது. அவர் பிரிவாற்ருது வள்ளுவர் வருந்திப் பாடியதாகப் பாட்டொன்றும் காட்டப்படுகிறது. சின் ஞள் கழித்துத் திருவள்ளுவரும் இறைவன் திருவடி சேர்ந்தாரென்றும், அவருடைய மாணவராகிய ஏலேல சிங்கரே இறுதிக்கடன் ஆற்றிஞரென்றும் கூறுகின்

றனர். யாதோர் ஆடம்பரமுமின்றி மிக்க எளிய நிலையில் திருவள்ளுவர் தமது வாழ்க்கையை நடத்தி இறைவன் திருவடி நீழலெய்தினரென்று கொள்வதே இவரது இறுதிபற்றிக் கூறப்படும் நிகழ்ச்சிகளின் உண்மைக் கருத்தாகும்.

## 10. பிற நூல்கள்

'தூங்கினவன் தொடையில் திரித்தது கயிறு' என்றாற் போல, திருவள்ளுவர்பேரால் ஞானவெட்டியான், திருவள்ளுவர் ஞானம் என்பன முதலிய சிறு நூல்கள் ஆங்காங்குக் காணப்படுகின்றன. அவற்றிற்கும் திருக்குறட்கும் எத்துணைப் பொருந்தாமையுண்டோ, அத்துணைப் பொருந்தாமை அவர்க்கும் அந் நூல்களுக்கும் உண்டென்பது கண்டு அறிவுடையுலகம் அமைந்தொழுகுகின்றது. வாழ்க திருவள்ளுவர்! வாழ்க திருக்குறள்!!

வாழ்க!

"வள்ளுவன் தன்னை யுலகினுக்கே தந்து
வான்புகழ் கொண்ட தமிழ் நாடு"

75892
031:1B5ய
J0;2
MADURAI UNIVERSITY LIBRARY
5 JAN 1973
MADURAI-2.

# வாழ்க்கை வரலாறுகள்

| | | |
|---|---|---|
| உரிமையின் பரிசு—காந்தியடிகள் பிரிவு படங்களுடன் ரூ. | 3 | 8 |
| கண்ணகி வரலாறும் கற்பு மாண்பும் (ந. மு. வே. நாட்டார்) | 0 | 13 |
| அப்பர் சுவாமிகள்—கா. சுப்பிரமணிய பிள்ளை | 1 | 8 |
| மணிவாசகப் பெருமான் ,, | 1 | 8 |
| சுந்தரமூர்த்தி சுவாமிகள் ,, | 2 | 0 |
| திருஞானசம்பந்தர் ,, | 2 | 0 |
| சேக்கிழாரடிகள் ,, | 2 | 0 |
| குமரகுருபர அடிகள் ,, | 1 | 8 |
| சிவஞான முனிவர் ,, | 1 | 4 |
| மெய்கண்டதேவரும் சிவஞான போதமும் ,, | 1 | 8 |
| ஆண்டாள் வரலாறு ,, | 0 | 4 |
| ஆழ்வார் வரலாறு I—கா. ர. கோவிந்தராச முதலியார் | 1 | 12 |
| ,, II ,, | 1 | 12 |
| தமிழ்ப்புலவர் வரிசை I—இராமசாமிப் புலவர் | 1 | 8 |
| ,, II ,, | 1 | 12 |
| ,, III ,, | 2 | 0 |
| சொல்லரசர்—இளவழகனர் | 0 | 10 |
| சூரனும் வேலனும் | 0 | 10 |

| | | |
|---|---|---|
| உலகப் பெருமக்கள் முதற்புத்தகம் —*கா. சுப்பிரமணிய பிள்ளை* | 0 | 15 |
| உலகப் பெருமக்கள் இரண்டாம் புத்தகம் ,, | 1 | 2 |
| சர். சி. பி. ராய்—*கா. சுப்பிரமணிய பிள்ளை* | 0 | 13 |
| சகதீஸ் சந்திரபோஸ் | 0 | 13 |
| சர். சி. வி. இராமன்—S. *இராமச்சந்திரன்,* B A. | 0 | 13 |
| ஆங்கிலப் புலவர் வரலாறு—*கா. அப்பாதுரைப்பிள்ளை* | 1 | 0 |
| ஆலிவர் கோல்டு ஸ்மித் | 0 | 10 |
| சேகப்பிரியர் வரலாறு—*கா. சுப்பிரமணிய பிள்ளை* | 0 | 4 |
| நெப்போலிய வீரன்—N. K. வேலன், B. A. | 0 | 12 |
| புதியது புனைந்த அறிவியல் அறிஞர்கள் ,, | 0 | 13 |
| தோமாஸ் ஆல்வா எடிசன் —*க. ப. சந்தோஷம், பி. ஏ., எல். டி* | 0 | 15 |
| மேனாட்டு வணிக மன்னர் —*மா. பாலசுப்பிரமணியம், எம். ஏ.* | 0 | 13 |
| லூதர் பர்பாங்க் —*காழி. சிவ. கண்ணுசாமிப்பிள்ளை, பி. ஏ.* | 0 | 13 |
| பெருமாள் மாடு ,, | 0 | 12 |
| நாடு கண்டவர் வரலாறு முதற் புத்தகம் ரூ. | 0 | 12 |
| ,, இரண்டாம் புத்தகம் | 1 | 0 |
| வாஸ் கோட காமா—S. S. தேவர் | 0 | 12 |
| ஜினேவா வீரன்—*இளவழகனார்* | 0 | 8 |
| சென்னைத் தமிழ்ப் புலவர் முதற் புத்தகம் *மணி. திருஞானசம்பந்த முதலியார்* | 1 | 12 |